**Ben Vision Printers**

Digital banner and Sticker Printing, Book Page Making & Printing (Tamil & Sinhala), Offset Printing, Invitation Cards and Cake boxes, Visiting cards, Magazines, Leaflets, letterheads, Labels, Laminating, Scanning (Colour), All kind of Binding, Screen Printing, Photocopy, Type Setting (Tamil, English, Sinhala)

No:335A, Thiruganasampathar Street, Trincomalee
Tel: 0262225984, 0778615206
benvisionprinters@gmail.com



அறைவு 03 இயம் 03 August 16-22, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்




**CCTV Installation & Maintenance**

**PHOTONTECH**

175, Main Street
Trincomalee
075 6602486


# பணயக்கைதிகளாக கிழக்கின் இளைஞர்கள்



கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலரைப் பணயக் கைதிகளாக துர்கிஸ்தானில் சண்டையில் ஈடுபடும் தரப்பினர் வைத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அங்கிருந்து முதற்கட்டமாகத் திருப்பியனுப்பப்பட்ட பத்தத் தமிழ் இளைஞர்களே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

துர்கிஸ்தானில் நடைபெறும் உள்நாட்டுக் கலவரங்களால் தாம் கைது செய்யப்பட்டதாகவும், அங்கு கடந்த ஒன்றரை மாதங்களாகத் தாம் 13



# கப்பலேறிக் காணாமற்போனோரைத் தேடும் முயற்சியில்

## திருகோணமலை தமிழ்ச் சிவில் சமூக அமைப்பு

அகதிகளாக வேறு நாடுகளுக்குப் புலம்பெயரும் நோக்குடன் படகுகளிற் புறப்பட்டு இன்றுவரை காணாமற் போயுள்ள மக்களைத் தேடும் பணியினை முன்னெடுக்கவுள்ளதாக திருகோணமலை மாவட்டத் தமிழ்ச் சிவில் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.

பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் புலம் 13



5.07.2013ல் இந்தோனேசியக் கடற்பரப்பில் மூழ்கிய படகொன்றில் இருந்து எடுத்துவரப்படும் குழந்தை

## சர்வதேச முதலீட்டாளர் சம்பூருக்குத் தேவை...

சம்பூர் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள அனல் மின்னிலையத்தின் மொத்த மூலதனத்தில் 70 வீதத்தை முதலிடுவதற்குச் சர்வதேச முதலீட்டாளர்களை அரசாங்கம் அழைத்துள்ளது.

இந்திய அரசு சார் மின் நிறுவனத்துடன் பங்காளியாக இணைந்து இலங்கையின் மின்சாரசபையால் உருவாக்கப்படவுள்ள.... 13

## "ஊடகச் சுதந்திரம் இல்லை"



தற்போது இலங்கையில் ஊடக சுதந்திரம் இல்லை என மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற உலக தொடர்பு தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு 13



## விளம்பர மோசடியில் கோடிக்கணக்கில் பணத்தை இழந்த ஆசிரியர்கள்!!!

திருகோணமலையிலுள்ள பிரபல பாடசாலை ஆசிரியர்களில் பலர் "இணைய வழி விளம்பர" உழைப்பிற்காகப் பணத்தைச் செலுத்தி இன்று கையறு நிலையில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சக ஆசிரியர்களாலேயே மற்றைய ஆசிரியர்களும் இவ் விணைய விளம்பர உழைப்பிற்குள் இழுத்து 13





## வெந்நீர் ஊற்றுக்குப் புதிய பாதை

### தமிழர்கள் விசனம் - பிபிசி செய்தி

கன்னியா வெந்நீறூற்றுக்கு அமைக்கப்பட்டுவரும் புதிய பாதையொன்று தொடர்பாக தமிழ் மக்களிடையே விசனம் எழுந்துள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியின் முழு வடிவமும் வருமாறு "இலங்கையின் கிழக்கே, திருகோணமலையில் வரலாற்றுச் சிறப்புமிக்க கன்னியா வெந்நீர் ஊற்று.. 13






aat SRI LANKA @ Veal Business College

No.159, Sea View Road, Trincomalee

026 222 76 22 - 077 02 03 201



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## பரீட்சை – இலங்கைக் கல்வி முறையின் பலவீனம்???

இலங்கைக் குடும்பச் சுகாதார மற்றும் பாடசாலைச் சுகாதார அமைப்பின் பிரதானி கடந்தவாரம் வெளியிட்டிருந்த தகவல் ஒன்று இலங்கைக் கல்வி முறையின் பலவீனத்தை வெளிப்படையாக எடுத்துக் காட்டியிருந்தது.

பாடசாலை மாணவர்களில் சுமார் அரைவாசிப் பங்கினர் பரீட்சைகளுக்குத் தயாராகும் மனவழுத்தத்தால் பாதிக்கப் பட்டிருப்பதாகவும், அந்நோயினால் அவர்கள் முறையான சிந்தனை மற்றும் உணவுப் பழக்க வழக்கங்களைத் தவிர்த்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒரு நோயுற்ற மாணவர் சமுதாயத்தினை உருவாக்கிக் கொண்டிருக்கும் பெரும் பங்கை இன்றைய இலங்கைக் கல்வி முறையானது கொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டு பலமாக எழுந்துள்ள நிலையில் பரீட்சைக்குப் படிக்கும் கல்வி முறையானது பல தசாப்தங்களுக்கு முன்னரே அறிமுகப் படுத்தப்பட்டுவிட்டது. இந் நிலையில் இப்போது மட்டும் எவ்வாறு அக்கல்வி முறை மாணவர்களை மனவழுத்த நோய்க்கு உள்ளாக்கியுள்ளது?

காலங்காலமாய்த் தொடரும் பரீட்சை முறையை ஒரு நோயாக்கிய முக்கிய பங்காளி யார்? அவர்கள் பெற்றோர்கள் தான். சர்வதேசக் காரணியொன்றான "நீலச் சட்டையிலிருந்து வெள்ளைச்சட்டை" மனநிலைக்கு மக்கள் திரும்புவதாலேயே பரீட்சைகளிற்கு இவ்வளவு அழுத்தம் எழுந்தது. வெள்ளைச் சட்டை என்பது அலுவலகத்தில் தொழில் புரியும் பண்பையும் நீலச் சட்டையென்பது சுயதொழில் புரியும் பண்பையும் விதந்துரைக்கின்றது.

வெண்சட்டைத் தொழிலை நோக்கி தமது குழந்தைகளை பெற்றோர் நகர்த்தத் தொடங்கியவுடன் பரீட்சைகளுக்கான போட்டித்தன்மை அதிகரித்ததுடன் அதனால் பிள்ளைகள் மீதான அழுத்தமும் அதிகரித்தது.

உலகமயமான பொருளாதாரத் தாக்கங்களில் ஒன்றான இந்தப் பண்பால் வெண்சட்டைத் தொழிலில் உழைப்பு சுரண்டப் படுவதையிட்டு நாம் அலட்டிக் கொள்வதில்லை. அத்துடன் பாரம்பரிய முறையிலேயே தொழிற்கல்வி முறையை இப்போதும் நாம் கருத்திற் கொள்கின்றோம். அதாவது க.பொத சாதாரணதரம், உயர்தரம், பல்கலைக்கழகம் என்ற படிமுறையில் இப்போது இவை எவற்றுடனும் பொருந்தாத புலமைப் பரிசில் பரீட்சையை நாம் இணைத்து இறுக்கமாகப் பிடித்திருப்பதால் பெரும்பாலானவர்கள் வேலையின்றி இருப்பதைக்காண முடிகின்றது.

வறியவர்களை படிப்பதற்குத் தூண்டவும் அவர்களுக்கு நிதி வசதியொன்றை ஏற்படுத்தவும் என உருவாக்கப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையின் நிலையை இன்று எண்ணிப்பாருங்கள்.... அவர்களை ஆண்டு ஐந்தில் இருந்தே நோயுற்றவர்களாக உருவாக்க நீங்கள் படும் பாட்டை தெருவில் காண முடிகின்றது....

கணிதம் தேவையில்லை, பல்கலைக் கழகங்களால் கணணிவழிப் பட்டக்கல்வி போன்ற மாற்றங்களை சிந்திப்பதற்கு நேரமில்லை... செமினார் அழைக்கிறது பிள்ளையை அள்ளிக் கொண்டு சென்றுவாருங்கள்.......... சந்திப்போம்....

## என்.வி.கியூ தரம் கொண்ட சான்றிதழ் பயிற்சிகள் இலவசமாக ஆரம்பம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தனது பயிற்சி நிலையத்தின் ஊடாகத் திருகோணமலையில் இலவசப் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளதாக அம் மன்றத்தில் அலுவலர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

சர்வதேசத் தராதரமான என்.வி.கியூ தரச் சான்றிதழ்களைக் கொண்ட கல்விநெறிகள் பல இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. தொழில்வாய்ப்பை உடனடியாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய இக் குறுங்காலப் பாடநெறிகளில் அழகுக்கலை, சிகை அலங்காரம், கணணி, அறைபணியாளர் (ஹோட்டல் அறை) ஆகிய என்.வி.கியூ தர பயிற்சி நெறிகளும் தையல்கலைப் பயிற்சி நெறியும் நடாத்தப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை உரிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகங்களில் பெற்று பூர்த்தி செய்து வழங்குமாறு இளைஞர் சேவைகள் மன்றம் கோரியுள்ளது. மேலதிகத் தொடர்புகளுக்கு 026-2053606 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்கியது கல்வி ஊழியர் சங்கம்

(கதிரவன்)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி ஊழியர்கள் சிக்கன கூட்டறவுச் சங்கம் தனது 33 அங்கத்தவர்களுக்கு ரூபா 150,000.00 கடன் வழங்கி உள்ளது.

மக்கள் வங்கி பிரதான கிளையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 5 மில்லியன் ரூபாய்களில் இருந்து இக்கடன்கள் அங்கத்தவர்களுக்கு 12 வீத வட்டியில் 40 தவணைகளில் மீளச் செலுத்தும் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 10ம் திகதி திருகோணமலைஹாகிரா கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை 10.08.2014 காலை 10.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் சி. ஆனந்தமூர்த்தி தலைமையில் நடந்த நிகழ்வில் கூட்டறவு திணைக்கள தலைமை கூட்டுறவு பரிசோதகர் திருமதி மேரி மெக்டலின் கோமளா .டியுக் கலந்து சிறப்பித்திருந்தார். கடனுக்கான காசோலை சங்கத்தின் உப தலைவர் க.ரகுநாதன் பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.




## கல்முனையில் புதிய நீதிமன்றம்

கல்முனையில் புதிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதி அமைப்பது தொடர்பிலான உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை ஒலுவில் பகுதியில் நடைபெற்றது.

நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்றது. அண்மையில் கல்முனைக்கு விஜயம் செய்த பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் மற்றும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரிடம் கல்முனையில் சகல வசதிகளும் கொண்டதாக நவீன முறையில் புதிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தினால் வலியுறுத்தப்பட்டதுடன் உத்தேச திட்டத்தை முன்வைத்த மாநகர முதல்வர் நிசாம் காரியப்பர், நீதிமன்றக் கட்டிடத் தொகுதிக்கான அமைவிடத்தையும் முன்மொழிந்து அடையாளப்படுத்தியிருந்தார்.

அதன்போது இந்தத் திட்டத்திற்கான அங்கீகாரத்தை பிரதம நீதியரசர் வழங்கியிருந்தார்.



## கிழக்கு மாகாண சபை
## சுதேச வைத்தியர் நியமனம்
### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கிழக்கு மாகாணச் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கீழ் ஆயுர்வேத - சித்த வைத்தியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர்களை அமர்த்திக்கொள்ளக் கிழக்கு மாகாண சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

எதிர்வரும் 09ம் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் தகுதியுடையோர் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேர்முகப் பரீட்சையின் அடிபபடையில் வழங்கப்படவுள்ள இந்தி நியமனங்களின் அடிப்படை ஆரம்பச் சம்பளம் 26,160.00 என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்துவருடகாலப் பட்டக்கல்வியுடன் ஒருவருட உள்ளக பயிற்சியையும் நிறைவு செய்துள்ள 55 வயதிற்குக் குறைந்த இலங்கையர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

ஏ4 அளவுத் தாளின் இருபக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்படுகின்ற விண்ணப்பங்களை " செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், உட்துறைமுகவீதி, திருகோணமலை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## யானைத் தாக்குதலுக்குப் மட்டு – பரிகாரக் கூட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் தற்போது அடிக்கடி யானைகளின் தாக்குதல்களால் ஏற்படும் உயிரிழப்புக்கள் மற்றும் சொத்திழப்புக்கள் தொடர்பில் 14ம் திகதி மட்டு. மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் முன்னிலையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா, மாகாணசபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் சகிதம் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளர் வீரசிங்க, மட்டக்களப்பு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி மற்றும் ஊழியர்கள் என குறிப்பிடத்தக்கோர் கலந்து கொண்டனர்.

## விவசாய அமைச்சின் செயலராக திரு.பத்மநாதன்
### ஓய்வுபெற்ற பின் மீள் நியமனம்

கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகப் பதவிவகித்து வந்த திரு.கே பத்மநாதன் அவர்களை மீண்டும் ஓய்வுபெற்ற பின்னர் மீண்டும் அதே பதவிக்கு மீள் நியமனம் செய்ய கிழக்கின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கிழக்கு மாகாண அபிவிருத்திப் பணிகளில் தேசிய கொள்கைக்கு அமைய 12 வருடங்கள் சேவையாற்றி அவரைத் தொடர்ந்தும் தமது அமைச்சின் செயலாளராக வைத்திருக்க மாகாண அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட் மேற்கொண்ட அமைச்சரவை யோசனையைக் கிழக்கு மாகாண அமைச்சரவை ஏற்றுக் கொண்டதை அடுத்தே எதிர்வரும் 06.01.2015ல் இருந்து அவர் மீள் நியமனம் செய்யப்படுவார் எனத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## Ceylon today

### பாடசாலை நேரத்தில் மாணவர்கள் பிரத்தியேக வகுப்புக்களில்

15-19 வயதுக்கிடைப்பட்ட மாணவர்களில் 33.7 வீதமானவர்கள் பாடசாலை நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சமூகமளிப்பதாக தேசிய மனித அபிவிருத்தி அறிக்கை தெரிவித்துள்ளது. ஒட்டுமொத்தமாக பெரும்பாலான மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்கு சமூகமளிப்பதாக இவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

### ஓய்வூதியக்காரர்களின் மோசடி அம்பலம்



சுமார் 19.3 மில்லியன் ரூபா பெறுமதியான ஓய்வூதிய மோசடியினை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது. மூன்று வெவ்வேறு சம்பவங்களில் இத்தொகை மோசடி செய்யப்பட்டுள்ளது.

முதலாவது சந்தர்ப்பமாக : பிரதேச காரியாலயத்தில் பணியாற்றும் ஓய்வூதிய அலுவலர் ஒருவர் தனது கணவருடன் சேர்ந்து சுமார் 11 மில்லியன் ரூபாய்களை மோசடி செய்துள்ளார். இத்தொகையானது ஓய்வூதியகாரர்களுக்கு வழங்குவதற்காக அனுப்பி வைக்கப்பட்ட நிலுவை ஓய்வூதியர் தொகை ஆகும்.

இரண்டாம் மூன்றாம் சந்தர்ப்பமாக : ஒரே அலுவலர் இரண்டு பிரதேச காரியாலயங்களில் ஓய்வூதியத்தைப் பெற்று வந்துள்ளது தெரியவந்துள்ளது.

### பாகிஸ்தானிய அகதிகள் துன்புறுத்தப்படுகின்றனர்.



பாகிஸ்தானிய அகதிகளுக்காக இலங்கையில் வழக்குகளை முன்னெடுக்கும் வழக்குரைஞர் லக்சன் டையஸ் பூசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தானிய அகதிகள் துன்புறுத்தப்படுவதாக தெரிவித்துள்ளார். குடிவரவு திணைக்கள அதிகாரிகள் அங்குள்ள கைதிகளைச் சந்திக்கும் போது நாட்டைவிட்டு தாமாகவே வெளியேறுகின்றோம் எனும் கடிதங்களில் கையெழுத்திடுமாறு அச்சுறுத்துகின்றனர் என தெரிவித்த அவர், 1475 பாகிஸ்தானியர்கள் இலங்கையில் தற்போது



### காவல்துறைக்கு துப்பாக்கிகள் தட்டுப்பாடு

உதவிக் காவல் கண்காணிப்பாளர் தரத்தை விடக் குறைந்த காவல் துறையினருக்கு வழங்கப்பட்ட கைச்சுடுகலன்களை மீளப் பெற்றுக்கொள்ளப் போவதாக காவல்துறை அறிவித்துள்ளது. கைச்சுடுகலன்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை தவிர்ப்பதற்காகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காவல்துறை அறிவித்துள்ளது.

### "புதைகுழியினை மேலும் தோண்டுங்கள்: மன்னார் சட்டத்தரணிகள் கோரிக்கை:



காணாமற் போனோர் தொடர்பான விசாரணையை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் முன்னிலையில் காணாமற் போனோர் தொடர்பாக வாதாடி வரும் வழக்குரைஞர்கள் திருக்கோதீஸ்வர படுகுழிகளை மேலும் தோண்டுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. அதனையடுத்து இப் புதைகுழி தொடர்பாக சர்வதேச விசாரணையை அனைவரும் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## the Island

### வெளிவிவகார அமைச்சின் அலுவலக உதவியாளர் கைது

தென்கொரியாவில் இருந்து அனுப்பப்பட்ட இராசதந்திர பையில் இருந்து களவெடுக்கப்பட்ட 37ப தங்கச்சங்கிலி தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் தூதுவராலய அலுவலக உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து அப்பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட பன்னிரெண்டு அதிகாரிகளுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் நீக்கப்பட்டுள்ளது.

### வலைப்பின்னலை குப்பையாக்கும் கூகுள்




வலைப்பின்னலில் அதி இரகசியம் வாய்ந்த விடயங்களைக் கூட கண்டுபிடித்துத் தரும் ஆற்றல் மிக்கதான கூகுள் வலைத்தளமே குப்பையை உருவாக்கக் கூடிய வலைத்தளமென இந்திய ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வன்புணர்வு வழக்கு – இறாகம வைத்தியசாலையிலிருந்து தேசிய வைத்தியசாலைக்கு மாற்றம்



வன்புணர்வுக்கு உள்ளான 25 வயதான பெண்ணொருவரை அவரது விருப்பத்திற்கு எதிராக பல நாட்களாக இறாகம வைத்தியாசாலையில் வைத்திருந்தமை வெளிவந்ததைத் தொடர்ந்து அவரை தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுவரெலியாவைச் சேர்ந்த மலையக தமிழ்ப்பெண்ணான இப்பெண் சப்புகஸ்கந்த எண்ணெய்ச்சுத்திகரிப்பு வளவுக்குள் அங்கு பணிபுரியும் மூன்று பணியாளர்களால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு பின்னர் இறாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மறைமுகமாக சிகிச்சை அழிக்கப்பட்டு வந்தமை தெரியவந்ததை அடுத்து அக்குறித்த பெண் தானாக முறைப்பாடு செய்ததுடன் அவர்களை

### தாய் – ரூபா 30,000 – வாங்கியவர்



தனது ஆறு மாத குழந்தையை 30,000 ரூபாவுக்கு விற்பனை செய்த தாயையம் கொள்வனவு செய்தவரையும் காவல்துறை கைது செய்துள்ளது.

குழந்தையை விற்ற மறுநாள் வாங்குனர் ஒருவர் 200,000 ரூபாவுக்கு அக்குழந்தையை கொள்வனவு செய்ய வந்துள்ளனர். அதனையடுத்து குழந்தையை மீளப்பெற்றுக் கொள்ள தாய் காவல்துறையில் முறைப்பாட்டை செய்ததையடுத்தே விடயம் வெளிச்சத்துக்கு வந்தது.

### களியாட்டச் செலவுகளுக்காக பிரதமரின் செலவு 20 மில்.



களியாட்டச் செலவுகளுக்காக பிரதமரின் செலவு 20 மில்லியன் ரூபாய்களென தெரியவந்துள்ளது. களியாட்டச் செலவுகளுக்காகவும், பரிசுப் பொருட்களுக்காகவும் சுமார் 20 மில்லியன் ரூபாய்களை 2013ஆம் ஆண்டில் பிரதம மந்திரியின் அலுவலகம் செலவழித்ததாக அவரது அலுவலக வினைத்திறன் அறிக்கை தெரிவித்துள்ளது.

அதே வேளை காகிதாதிகளுக்காக 6,679,032 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 6,156 வெளிநாட்டுப் பயணங்களுக்கான அனுமதியினை பிரதம மந்திரியின் அலுவலகம் வழங்கியுள்ளதுடன் அவற்றுள் கல்வி அமைச்சுக்கே பெருமளவு வெளிநாட்டுப் பயணங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## Daily mirror

### தொலைந்து போனவர்களின் குடும்பங்களின் தேவை என்ன!?

COMITE INTERNATIONAL GENEVE
ICRC

தொலைந்து போனவர்களின் குடும்பங்களின் தேவை என்ன என்பதனை அறிய முயலும் ஐ.சி.ஆர்.சி.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் இலங்கையில் தொலைந்து போனவர்களின் குடும்பங்களுக்கு என்ன தேவை இருக்கிறது என்பதனை மதிப்பிடும் செய்பாட்டை ஐ.சி.ஆர்.சி ஆரம்பிக்கவுள்ளது. காணாமற் போனோர் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைவாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

### குற்றவாளியை ஒழித்துவைத்த காவல்துறை அதிகாரிக்கு தண்டனை

குற்றஞ்சாட்டப்பட்ட பெண்ணொருவரை மறைத்து வைத்திருந்தமை மற்றும் அவருக்குரிய தண்டனையை வழங்கத் தடையாக இருந்தமை ஆகியவற்றுக்காக காவல் துறை அதிகாரி ஒருவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத் தண்டனையும் 150,0000 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட பிடியாணைக்கு அமைய குறித்த பெண்ணை கைது செய்யாமலிருந்ததுடன் அவரை ஒழித்தும் வைத்திருந்ததாக இவர்மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### கோரிக்கை – யாழ் தொடங்கி

யாழ் தேவி ரயில் சேவையை மாத்தறையிலிருந்து ஆரம்பிக்குமாறு கரையோர ரயில் பயணிகளின் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.



இச்சேவை தெய்வேந்திர முனைக்கு அண்மையிலுள்ள மாத்தறை நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டால் தென்னிலங்கை மக்களுடன் நல்லுறவைத் தொடரலாம் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**BOOK -*- releases**

கவிவேம் பாரதிபாலன் எழுதிய உலக காவியம் (அறிவியல், ஆன்மீககாவியம்), புதிதாய் ஓர் உலகம் (கதையும் ஓரங்க இசை நாடகமும்) ஆகிய நூல்களின் வெளியீடு 16.08.2014 காலை 9.30 மணிக்கு திருகோணமலை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

இலக்கிய ஆர்வலரும் சட்டத்தரணியுமான ஆ. ஜெகசோதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் பேரவைச் செயலாளரும், தற்போதைய வட மாகாண பேரவைச் செயலாளரும், இலக்கிய போசகருமான க.கிருஷ்ணமூர்த்தி பிரதம அதிதியாகவும், திருகோணமலை சிரேஷ்ட சட்டத்தரணி இலக்கிய நேசர் திரு.திருச்செந்தில்நாதன் சிறப்பு விருந்தினராகவும், திருகோணமலை நகர சபை தலைவரும் இலக்கிய காவலருமாகிய திரு.க.செல்வராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

ஈழத்து காந்தியும் திருகோணமலையின் மூத்த குடிமகனுமாகிய பொ.கந்தையா (காந்தி ஐயா) அவர்களின் ஆசியுரையுடன் தொடங்கும் இவ்விழாவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இந்து நாகரீகத்துறை தலைவர் பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன் விதந்துரை வழங்க உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசம் தமிழரின் பக்கமா???

காலம் கனிந்து வருவதாக தமிழ் பத்தி எழுத்தாளர்களாலும் தமிழின அரசியல்வாதிகளாலும் பூச்சாண்டி காட்டப்பட்டு வரும் இந்த நாட்களில் எனது இந்த கேள்வி சிலவேளை உங்களுக்கு விசனத்தை ஏற்ப்படுத்தலாம் ஆனால் யதார்த்தம் என்ன சொல்கிறது என்பதே இந்த கட்டுரையின் நோக்கம்.

உண்மையிலேயே சர்வதேசம் என்பது என்ன? நமக்கெல்லாம் மேற்குலகும் அமெரிக்காவும் மட்டுமே சர்வதேசம் என்பதாக ஒரு படம் காட்டப்பட்டுள்ளது. ஆனால் சர்வதேசம் என்பது நாம் குடியிருக்கும் நாட்டை தவிர்த்து காணப்படும் அனைத்து தேசங்களுமே சர்வதேசங்களாயே கணிக்கப்படும். அதற்குள் நாம் கண்ணுக்குள் எண்ணை வைத்து பார்த்துக்கொண்டிருக்கும் இந்தியாவும் அடங்கும் நம்மால் கணக்கே எடுக்கப்படாத ஆர்ஜென்தீனாவும் அடங்கும்.

சோவியத்தின் வீழ்ச்சிக்கு பின்னர் ஒருதுருவ மயமாக்கப்பட்டிருந்த உலக ஒழுங்கானது இன்றைய நிலையில் ஒரு மறைமுகமான இருதுருவமயமாதலை (hidden bipolarization) நோக்கி நகர்வதையே காட்டிகள் சுட்டி காட்டுகின்றன. அமெரிக்காவும் அதன் மேற்கு நேச அணிகளும் ஒரு பக்கமாயும் இரண்டாம் உலக ஒழுங்காக கருதப்படும் இந்தியா, ஜப்பான், சீனா, பிரேசில், ரஷ்யா சார்ந்த அணி மறுபுறமாயும் அணிவகுத்தலை நாம் காண்கிறோம். ஒரு முக்கிய தருணத்தில் இந்த மறைமுக அணிதிரளல் பகிரங்க மேடைக்கும் வரக்கூடும்.


இரண்டாம் உலக ஒழுங்கு நாடுகளிடையே பல்வேறு சச்சரவுகள் காணப்படினும் அவை பொது நோக்கு ஒன்றுக்காக ஒன்று சேர்ந்ததை அண்மைய நகர்வு ஒன்று காட்டியதை நாம் கணக்கெடுக்கவில்லை போலும். அதாவது ஐ.நா மனித பேரவையில் இசுரேலுக்கு எதிரான தீர்மானத்தில் அமெரிக்கா தவிர்ந்த அனைத்து நாடுகளும் ஒன்று திரண்டதை நாம் மறக்க முடியாது. இதை விட இந்தியா, சீனா, தெ.ஆபிரிக்கா, பிரேசில், ரஷ்யா போன்ற நாடுகளினால் உருவாக்கப்பட்ட 'பிரிக்ஸ்' வங்கியின் உதயமும் (உலக வங்கிக்கு போட்டியாக) இந்தியாவினானால் உருவாக்க அடித்தளமிடப்படும் "சார்க்" வங்கியும் அமெரிக்கா மற்றும் சீனாவை சம இடைவெளியில் வைத்து உருவாக்கப்படும் இந்திய புதிய அரசின் வெளிவிவகார கொள்கைகளும் கூறும் செய்திகளை சரிவர புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

தமிழரின் சர்வதேச அரசியல் என்பது என்ன? கொழும்பில் உள்ள மேற்கு சார்ந்த சில தூதுவர்களை சந்திப்பதும் இந்தியாவுக்கான பயண ஒழுங்குகளை மேற்கொள்வதும் மேற்கு சார்ந்த யாராவது இங்கு வரும்போது சந்திப்பதாயுமே உள்ளது. கடந்த ஐந்தாண்டு இடைவெளியில் இந்த சந்திப்புகள் சாதித்தது வெறும் பூச்சியமாயே உள்ளது. ஏனெனில் இன்று தமிழர்களால் பெரிதும் நம்பப்படும் பிரித்தானியாவின் இலங்கைக்கான ஆயுத ஏற்றுமதியானது கடந்த ஐந்து வருடங்களில் அதிகரித்து வருவது ஒரு நல்ல உதாரணமாகும். உண்மையில் இரட்டை வேடம் போடும் நாடகதாரிகளின் கூடாரத்திலிருந்து கொண்டு சர்வதேசமே நம்பக்கம் என்று மனப்பால் குடிப்பது எவ்வளவு அபத்தம்.

உண்மையிலேயே நடந்தது என்ன? இதுவரையான காலப்பகுதியில் சர்வதேசத்தினால் எமது பக்க நியாயங்கள் புரிந்து கொள்ளப்படவில்லை என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். சில உதாரணங்களை கூற விரும்புகிறேன். தமிழரின் அரசியல் ஆயுதமயமாகப்பட்ட எண்பதுகளின் முற்பகுதியில் இந்தியா ரஷ்யா சார்ந்த சோஷலிச முகாமின் பக்கமே நின்றிருந்தது. அப்போது ரஷ்யா சார் உலக ஒழுங்குக்கு எமது நியாயப்பாடுகளை கொண்டு சென்றிருக்க முடியும். ஆனால் இந்திய மானின் அழகும் ஆயுதங்களின் மீதான மோகமும் நம்மை ராஜதந்திர முயற்ச்சிகள் பற்றி சிந்திக்கவே விடவில்லை. இரண்டாவதாக 2002 ஒப்பந்தத்தின் பின்னரான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் போதே தமிழர் தரப்பினை மேற்குலக நாடுகள் தடை செய்ததை மறக்க முடியாது. இதில் இப்போது தமிழர்களால் தலையில் வைத்து கொண்டாடப்படும் கனடாவும் அடக்கம். பின்னாட்களில் அந்த தடையே தமிழர் வாழ்வை சிதைத்தது என்பது மிக சுலபமாக எம்மால் மறக்கப்பட்டுள்ளது.

ஐ.நா பேரவையின் ஒவ்வொரு தொடரின் போதும் என்னை வியக்க வைத்தவை கியூபாவினதும் வியட்னாமினதும் நிலைப்பாடுகள்தான். ஒரு நீண்ட விடுதலை போரில் வென்று உலகில் தடம் பதித்த இரண்டு தேசங்களுமே தமிழர் தரப்புக்கு எதிராக வரிந்து கட்டி கொண்டு களமிறங்குகின்றன. இதற்க்கான காரணம் யாதெனில் அமெரிக்க சால்வையை நாம் அணிந்து கொள்வதும் நமது நியாயங்களை மேற்கிடம் மட்டுமே அழுது புரண்டு கூறுவதுமாகும்.

இன்றைய உலக ஒழுங்கில் மேற்கு சார்ந்த உலகிடம் மட்டுமே நாம் நல்ல பிள்ளைகளாக நடக்க முற்படுவதில் நன்மைகள் விளையுமா என்றால் இல்லை என்பதே பதில். ஏனெனில் மத்திய கிழக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்க அணுகுமுறைகள் மிகப்பெரும் தோல்விகளையே கண்டுள்ளது. ஒசாமா பின்லேடனின் மரணத்தின் பின்னரும் வலிவுடன் மேலெழுந்து வரும் இஸ்லாமியவாதம் இதற்கு நல்ல உதாரணம். இன்று அமெரிக்காவானது கையறு நிலையிலேயே இருந்து கொண்டுள்ளது. அப்பால் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கான செல்வாக்கில் பாரிய வீழ்ச்சியும் ஐரோப்பிய நாடுகள் தமது பொருளாதார வீழ்ச்சியின் தாக்கத்தினால் படைக்குறைப்பு செய்வதும் பாதுகாப்புக்கான நிதி குறைப்புகளை மேற்கொள்வதும் உலக ஒழுங்கானது அடுத்த பத்தாண்டுகளில் பாரிய மாற்றத்தை காணப்போவதை கட்டியம் கூறும் நிகழ்வுகளாயே உள்ளன.



கொழும்புடன் ஒப்பிட்டு பார்க்கையில் தமிழர் தரப்பு எப்போதும் தோல்வி அடையும் பக்கமே நின்று கொண்டிருப்பதையே காணக்கூடியதாயுள்ளது. நான் முன்னரே குறிப்பிட்டது போல ராஜதந்திரம் சம்பந்தமாக தமிழர் தரப்பு பலரிடம் "டியுசன்" எடுக்க வேண்டியுள்ளதுடன் மாறும் உலக ஒழுங்கில் அனைத்து நாடுகளிடமும் சீரான உறவினை பேணவேண்டிய கட்டாயத்துக்கும் உள்ளாகி உள்ளது. ஐ .நா பேரவையில் தமிழர் சார்பாய் அளிக்கப்படும் வாக்குகள் எமக்கான நீதிக்காகவன்றி அமெரிக்காவின் பலப்பிரயோகத்து க்காகவே என்பதும் கண்கூடு. நடுநிலை வகிக்கும் நாடுகள் என்பவை உண்மையில் கொழும்புக்கு சார்பானவையே. ஏனெனில் அமெரிக்காவின் நெருங்கிய தோஸ்தான ஜப்பானின் நிலைப்பாடு இதற்கு சிறந்த உதாரணம் இந்தியாவும் கூட. உண்மையில் அமெரிக்காவின் பலப்பிரயோகம் அற்று சுயாதீனமாக வாக்களிப்பு நடைபெறின் கொழும்பே வெற்றி பெறும் என்பது கசப்பான உண்மையே. ஏனெனில் பாலஸ்தீன போராட்டம் போல் தமிழரின் போராட்டம் இன்னும் முதிர் நிலையை அடையவில்லை ஐம்பது ஆண்டுகள் கடந்தும். இதற்க்கான முக்கிய காரணம் நம்மை வழிநடாத்தும் தலைமைகளும் கோச அரசியலில் நாம் கொண்டுள்ள ஈடுபாடுமாகும். ராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ளாது வெறுமனே இலங்கையின் பிரதிநிதிகளின் வெளிநாட்டு பயணங்களின் போதான எதிர்ப்பு என்பது வெறுமனே கோச அரசியலுக்கு அப்பால் எதையும் சாதிக்காது.

ஒருகாலத்தில் செல்லிட தொலைபேசிகளின் ராஜாவாக இருந்த nokia வின் சாம்ராஜ்ஜ சரிவும் Samsung இன் வியத்தகு வெற்றியும் தமிழருக்கான சுலபமான செய்தியாகும்.

நீ எப்போதும் மானாகவே இருக்கிறாய்
வீதியில் ஓநாய்களினதும் நரிகளினதும்
சண்டையை ரசித்தபடி ஆனால் அந்த
போட்டி உனது ஊனுக்கானது என்பதை
மறந்து...

**தேத்தாமரத்தான்**

# கல்வி என்பது.... பதிவா...தெளிவா

கற்றல் என்பது இலக்கின்றி, பொருளின்றி, வரையறையின்றி, விவாதமின்றி, பயனின்றி மனனம் செய்து மதிப்பெண் பெறுதல் ஏட்டில் உள்ளதை மூளையில் பதித்து, தேர்வுக் கூடத்தில் தாளில் பதித்தல் தேர்வு முடிந்ததும் அனைத்தையும் மறத்தல் என்ற அளவில் இன்று நடைபெறுகிறது.

கல்வியென்பது வல்லுனர்கள், அரசு, பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் ஆகியோரோடு பின்னிப் பிணைந்தது.

கல்வி எப்படியிருக்க வேண்டும் என்பதை கல்வியாளர்களும் அரசும் தீர்மானிக்க வேண்டும். அதைப் பொறுப்போடு மாணவர்க்குச் சேர்க்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள் அதைச் சரியாகப் பெற வேண்டியவர்கள் மாணவர்கள் பெறச்செய்ய வேண்டியவர்கள் பெற்றோர்.

எனவே, கற்கும் கல்வி பயனுடையதாக இருக்க, ஆற்றல், அறிவு, வல்லன வளர்ப்பதாய் இருக்க பொறுப்பேற்க வேண்டியவர்கள் அரசும், கல்வியாளர்களுமே!

அரசு என்பது மக்கள் தேர்வு செய்கின்ற ஆட்சியாளர்களும், அரசு அலுவலர்களும் ஆவர். அரசு அலுவலர்கள், ஆட்சியாளர்கள் இடும் கட்டளையை அப்படியே நிறைவேற்ற வேண்டியவர்கள். எனவே, அவர்கள் கல்வியைத் தீர்மானிக்கக் கூடியவர்கள் அல்ல. கல்வியைத் தீர்மானிக்க வேண்டிய ஆட்சியாளர்களோ, அதில் தெளிவும், நுட்பமும், வல்லமையும், அதற்குரிய அறிவும் அற்றவர்கள் - விலக்காக ஓரிருவர் இருக்கலாம்.

எனவே, கல்வியை வகுத்தளிக்க வேண்டிய பெரும் பொறுப்பும் கல்வியாளர்களுக்கே உண்டு. ஆனால், அந்தக் கல்வியாளர்கள் வகுத்தளிக்கும் வல்லமையுடை யவர்களேயன்றி, நிறைவேற்றும் அதிகாரம் உடையவர்கள் அல்ல.

ஆக, ஆட்சியாளர்கள் பொறுப்போடு, தொலைநோக்கோடு, கல்வியாளர்களை முறையாக, வெளிப்படையாக, தயக்கமின்றி கருத்துரைக்க வழிசெய்து கல்வியின் உள்ளடக்கத்தைத் தீர்மானித்து * என்ன கற்பது, எப்படிக் கற்பது, எப்படிக் கற்பிப்பது என்பனவற்றை வரையறுத்து மாணவர்களைக் கற்கச் செய்வது மட்டுமே உண்மையான
கல்வியாய் அமைந்து பயன் தரும்.

மாறாக, ஆட்சியாளர் தான்தோன்றித் தனமான விருப்பு வெறுப்புகளையெல்லாம் கல்வித் திட்டமாக்கினால், அது பயனற்றுப் போவதோடு சமூக எதிர்ச் செயலாயும் ஆகும்.

முதலில் அரசும் கல்வியாளர்களும் கல்வியென்பது பதிவா? தெளிவா? என்பதை முடிவுசெய்து கொள்ள வேண்டும்.

யார் ஒருவன் நினைவாற்றலோடு பதிவு செய்து தேர்வில் எழுதுகிறானோ அவனே உயர் மாணவன், சிறந்த கல்வி கற்றவன் என்பது எவ்வகையில் சரியாகும்? அது நினைவாற்றல் திறனை மட்டுமே வெளிப்படுத்தும்.

நவீன கருவிகள் இல்லாத காலத்தில் நினைவாற்றல் முதன்மையிடத்தில் இருந்தது. இன்றைக்கு அது கட்டாயம் இல்லை. நினைவாற்றல் இன்றியே சாதிக்க முடியும்!

திருக்குறளைத் தலைகீழாகச் சொல்லும் நினைவாற்றல் உள்ள ஒருவர், திருக்குறளில் புலமை உள்ளவர் என்றாவாரா? திருக்குறளை மனப்பாடமாகச் சொல்லத் தெரியாதவர்கள் எல்லாம் திருக்குறளில் புலமை இல்லாதவர்கள் என்று ஆகுவரா?

இந்த நுட்பமான வேறுபாட்டைப் புரிந்துகொண்டால் கல்வித் திட்டம், பாடத் திட்டம், பயிலும் முறை எப்படியிருக்க வேண்டும் என்பது பளிச்செனப் புலப்படும்.

எனவே, புரிதலும் தெளிதலும்இன்றி கற்கும் கல்வி கல்வியே அல்ல. அது வெறும் மனனப் பயிற்சி மட்டுமே!

படித்தது அனைத்தும் பதிந்ததா? என்பதைவிட, படித்தது அனைத்தும் புரிந்ததா? என்பதே எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது! புரிதலும் தெளிதலும் இல்லாமல் எவ்வளவு செய்திகளை மூளையில் பதிவு செய்தாலும் என்ன பயன்? ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாவிற்கும் அவர்களுக்கும் என்ன வேறுபாடு?

படிப்பது அனைத்தும் புரிய வேண்டும், தெளிவாக வேண்டும் என்றால் கற்பிப்போர், கற்கும் மொழி இரண்டும் முதன்மைப் பங்கு வகிக்கும் நிலையில், இவற்றில் ஒரு தெளிவான கொள்கை முடிவு கல்வியாளர்களுக்கும் அரசுக்கும் வேண்டும்.

அதிலும் குறிப்பாக அடிப்படையான தொடக்கக் கல்வி எம்மொழியில் பயிலப்பட வேண்டும் என்பது மிக முதன்மையாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

தாய்மொழி வழிக் கல்விதான் அதற்குச் சரியான தீர்வு என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே, 5ஆம் வகுப்பு வரையில் தாய்வழிக் கல்வி என்பது மட்டுமல்ல, முடிந்தால் கல்லூரிக் கல்விவரை தாய்மொழிக் கல்வியே சிறந்தது என்பதும் அசைக்க முடியாத, மறுக்க முடியாத உண்மை!

ஆனால், மக்களாட்சி நாட்டில், விரும்பிய மொழியில் கற்க உரிமையில்லையா? என்ற விவாதம் கட்டாயம் எழுகிறது.

விரும்பியதை உண்பது என்பதைவிட உகந்ததை, நலம் தருவதை உண்பது என்பதுதான் சரியாக இருக்க முடியும்! அது கல்வி கற்கும் பயிற்றுமொழிக்கும் பொருந்தும். எதன்வழி கற்பது சிறந்தது என்பதே கருத்தில் கொள்ளப்பட வேண்டியது.

அதேவேளையில் தொடர்பு மொழியான ஆங்கில அறிவு மாணவர்களுக்குக் கட்டாயம் என்பது உண்மை! ஆங்கிலத்தில் படிக்க, பேச, எழுத உரிய வல்லமை உருவாக்கப்பட வேண்டும் என்பதும் கட்டாயம். அதற்குரிய பயிற்சி அடித்தட்டு மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் அதுவும் இலவசமாக வழங்கப்பட வேண்டும்!

இங்கு ஓர் உண்மையை அனைவரும் ஆழமாய் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுதல் என்பது பழக்கத்தில் வருவதேயன்றி, படித்து வருவதன்று.

ஆங்கிலத்தில் மட்டுமே கட்டாயம் பேச வேண்டும் என்ற கட்டாயச் சூழலில் ஆங்கிலத்தை ஒருவர் சரளமாகப் பேச முடியும். மேல்நிலைக் கல்வி வரை தமிழில் படித்து, பின் பொறியியல் படிப்பை ஆங்கில வழியில் படித்து முடித்து, ஆங்கிலத்தில் பேச வராத கிராமப்புறத்து மாணவர்கள் எல்லாம், நிறுவனங்களில் பணியில் சேர்ந்த பின் சரளமாக ஆங்கிலத்தில் பேசும் ஆற்றல் பெற்றதெல்லாம் நடைமுறை உண்மை.

ஆங்கில வழியில் கற்றுத்தான் ஆகவேண்டும் என்று பிடிவாதமாய் கற்கும் மாணவர்கள், கற்பது எதுவாயினும் அதைத் தெளிவாய் தன் தாய்மொழியில் புரிந்து கற்க வேண்டும். காரணம், கற்றல் என்பது பதிவு அல்ல. தெளிவு!

தெளிவற்ற, விளங்காத கல்வி பயனற்றுப் பாழாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தகிட தத்தோம் - தகிட தத்தோம்"

...நாட்டு நடப்பு...

- பாலையூற்றான் -

எதிர்வரும் காலத்தில் நமது நாட்டில் விலைவாசிகள் ஒருவேளை குறைந்தாலும் ஊழல், லஞ்சம், மோசடி, முறைகேடு போன்றவை குறைவதற்கு என்றுமே வாய்ப்பில்லை என அண்மைக்கால பல சம்பவங்கள் எமக்கு ஆணித்தரமாக உறுதிப்படுத்திக் கொண்டே வருகின்றன. அவர் அப்பகுதியில் வெளிச்சத்துக்குப் பொறுப்பான சபையினது அத்தியட்சகர் ஆனால் அவரது அலுவலகத்தில் அவர் முழுநேரமும் இருப்பதே இல்லை. குளிர்பான தயாரிப்பும், தேங்காய் வியாபாரமுமே அவரது முக்கியமானதும் நிரந்தரமானதுமான தொழில்களாகும்.

அவருடைய தனிப்பட்ட வியாபார வேலைகளுக்கு அவர் உபயோகிப்பது அலுவலக வாகனத்தையும் ஊழியர்களையும் ஆகும். எப்படியோ ஊழியர்கள் தொடர்பாக வாடிக்கையாளர்கள் மேற்கொள்ளும் சகலவிதமான புகார்களையும் அவர் மூடி மறைத்துவிடுவார். ஓர் ஊழியர் தொடர்பாக வாடிக்கையாளர் ஒருவர் முறைப்பாடொன்றினை மேற்கொண்ட வேளையில், 'நான் அந்த ஊழியரை இடமாற்றி விட்டேன். நீங்கள் இனிமேல் கவலைப்படவேண்டாம்.' என வாடிக்கையாளரிடம் கூறி அவரை சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டார், அத்தியேட்சகர்.

சுமார் ஒரு வருடகாலத்திற்கு மேலாகியும் தனது மானியை இடமாற்றிக் கொடுக்க தவறியமை தொடர்பாக அந்த வாடிக்கையாளர் குறித்த அலுவலகரை காணச் சென்ற போது தனது புகாரின் பேரில் இடமாற்றப்பட்டதாக கூறப்பட்ட குறித்த ஊழியர் தொடர்ந்தும் அங்கு கடமையில் இருப்பதாக அந்த வாடிக்கையாளர் அறிந்து கொண்டார். அது பற்றி அலுவலரை விசாரித்த போது 'அப்படியா? அவர் இன்னமும் இங்குதான் வேலை செய்கின்றாரா?' என ஆச்சரியத்துடன் அங்குள்ள பிரதமலிகிதரை பார்த்துக் கேட்டாராம். எப்படி இருக்கிறது அவரது சாமர்த்தியம்!

'அது இருக்கட்டும் ஒரு புறம், நீங்கள் இன்னமும் எனது மானியை இடமாற்றுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லையே' என வாடிக்கையாளர் கேட்டபோது. 'அப்படியா? இன்னமும் அந்த வேலை நடக்கவில்லையா? என்று கேட்டுக்கொண்டே அங்குள்ள கோவை கட்டுகளுக்கிடையே ஒரு கோவையை எடுத்து தூசிதட்டி பார்த்துவிட்டு 'உங்கள் மானியின் முத்திரை (seal) உடைக்கப் பட்டிருப்பதாக றிப்போர்ட் செய்யப்பட்டுள்ளது. ஆகவே புதிய மானிக்காக பணத்தை செலுத்தினால் தான் அந்த வேலையை செய்யலாம்'. என்றார் அந்த அலுவலர்.

அந்த வாடிக்கையாளர் அதிர்ந்து போய் 'என்ன ஐயா இப்படி கூறுகிறீர்கள்? நான் அதை ஏன் உடைக்கப் போகின்றேன்? எனக்கென்ன தேவை இருக்கிறது?' என்று கூறி ஏற்கனவே அவரால் முறைப்பாடு செய்த அந்த ஊழியரைப் பற்றி அலுவலருக்கு ஞாபகமூட்டியதன் பின் வாடிக்கையாளரின் உண்மை நிலையை புரிந்து, எதற்கும் ஒரு உத்தியோகத்தரை அனுப்பி பார்வை இட்ட பின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கின்றேன் என கூறினார்.

சுமார் ஒரு வாரம் கடந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் குறித்த வாடிக்கையாளர் தொலைபேசி மூலம் மீண்டும் அலுவலரை தொடர்பு கொண்ட வேளையில், 'நீங்களே மானியின் முத்திரையை உடைத்து விட்டு எங்கட ஊழியர்களின் மேல் குற்றத்தை சுமத்துவதை என்னால் அனுமதிக்க முடியாது. நான் உங்கள் விண்ணப்பத்தை பிரதேச பொறியியலாளருக்கு அனுப்பவுள்ளேன் நீங்கள் இனிமேல் அவரை தொடர்பு கொள்ளுங்கள்' என்றார்.

மேலும் அலுவலர் எப்படியும் தனது காதில் பூவை சுத்த முயற்சிக்கின்றார் என்பதை வாடிக்கையாளர் தெளிவாக புரிந்து கொண்டு பிரச்சினையின் முழு விபரத்தையும் எழுத்து மூலம் பிரதேச வெளிச்சத்துக்குப் பொறுப்பான சபையின் பொறியியலாளருக்கு தெரியப்படுத்தினார். எந்தவொரு விடயத்திலும் ஓர் அதிகாரி இன்னுமொரு அதிகாரியின் பக்கம் சார்ந்து நிற்பதும், ஒருவரின் பேச்சை கேட்பதும், தவறு இழைத்தால் மூடி மறைப்பதும், சகல தவறுகளையும் முறைப்பாடு செய்பவரின் மேல் சுமத்துவதும் அன்று தொட்டு இன்றுவரை சகல நிர்வாகங்களிலும் இடம்பெற்றுவரும் சர்வசாதாரண நிகழ்வுகளே.

சுமார் இரு வாரங்கள் கழித்தும் பொறியியலாளரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. அந்த அலுவலர் குறிப்பிட்டது போலவே அவரும் குறிப்பிடுகின்றார் என



உணர்ந்த வாடிக்கையாளர் அவரையும் நேரில் சென்று சந்தித்தார்.

'எங்களின் விசேட விசாரணைக் குழவின் நடவடிக்கைகள் மிகவும் கடினமானது. அவர்கள் தலைமையகத்தில் இருந்து வருவதால் ஏதும் பிரச்சினை ஏற்படும் பட்சத்தில் எங்களால் கூட உங்களைக் காப்பாற்ற முடியாது. நீங்கள் புகார் செய்த ஊழியனைப் பற்றி எங்களுக்கும் தெரியும். அவர் படு மோசமானவர். அவரைப் பற்றி ஏற்கனவே பல புகார்கள் உண்டு. இன்னும் இரண்டு மாதங்களில் அவர் சென்றுவிடுவார். ஆகவே இதனைப் பெரிதுபடுத்தாமல் மானியின் முத்திரை உடைப்புக்கான கட்டணமான ரூ5000 த்தை செலுத்தி விட்டு உங்களது மானியை இடம் மாற்றிக் கொள்ளுங்களேன். என்று கூறி ஒருவாறு வாடிக்கையாளரை சாந்தப்படுத்தி அனுப்பி வைத்தார்.

ஆனாலும் வாடிக்கையாளர் தளர்ந்து விடவில்லை. மீண்டும் அச்சபையின் பிரதி பொது முகாமையாளருக்கு கடிதமொன்றை தபாலிட்டார். சுமார் மூன்று வாரங்கள் கடந்தும் குறித்த மாகாணத்திற்கு பொறுப்பான அவ்வுயர் அதிகாரியிடமிருந்து எந்தத் தகவலும் கிடைக்காததினால், அவரின் அலுவலகம் சென்று அவரையும் சந்தித்தார்.

அவரும் வழமையான பல்லவியையே பாடினார். வாடிக்கையாளருக்கு சாந்தமான, சாதகமான தீர்வு அங்கும் கிட்டவில்லை. எப்படியும் வாடிக்கையாளர் சந்தித்த மூன்று அதிகாரிகளினதும் முடிவு எந்தவித ஏற்றம் இறக்கமின்றி ஒரே மாதிரியாக இருந்தது. எந்தவித விசாரணையும், பரிசீலனையும் இன்றி தண்டப் பணம் ரூ5000 த்தை எப்படியும் அவர்கள் கரந்து விடுவதிலேயே கண்ணாக இருந்தனர்.

பின்னர் வாடிக்கையாளர் பிரதி முகாமையாளரைச் சந்தித்த அடுத்தநாள் சபையின் தலைமையகத்திலிருந்து விசேட விசாரணைக் குழு அவரின் வீட்டுக்குச் சென்று மானியை பரிசீலனை செய்துவிட்டு உடைக்கப்பட்டிருந்த மானி முத்திரைக்கு பதிலாக பதில் முத்திரையை பொருத்திவிட்டு, இனிமேல் நீங்கள் ரூ5000 செலுத்தத் தேவையில்லை. இப்படியான தில்லுமுல்லுகளினால் உங்களை யாரும் தொந்தரவு செய்தால் பொதுமக்கள் பாவனை தொடர்பான ஆணைக்குழுவுக்கு நீங்கள் முறைப்பாடு செய்யலாம் என அறிவுரை வழங்கினார்.

இது ஒரு சாதாரண விடயம். இதை மிகைப்படுத்தல் உங்களிடம் பணம் பறிப்பதனையும், எங்களைப் பற்றி வாடிக்கையாளர்கள் மத்தியில் பூச்சாண்டி காட்டி, தங்கள் கடமைகளை ஒழுங்காக செய்யாத பெரும் முதலைகளை நீங்கள் காப்பாற்ற முயற்சிக்கலாகாது. உங்கள் பக்கம் நியாயம் இருப்பின் நீங்கள் எவருக்கும் பயப்படத் தேவையில்லை என மேலும் அறிவுரை வழங்கினார்.

அனேகமாக திருட்டு சேவை பெறுபவர்களும், அதற்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களும் அங்கு பணி புரியும் ஊழியர்களும், உத்தியோகத்தர்களும், உயர் அதிகாரிகளுமே என்பது அங்கு வந்திருந்த விசாரணைக் குழுவின் ஆலோசனைகளிலிருந்து தெளிவாக தெரியவந்தன. அன்று அந்த வாடிக்கையாளனிடமிருந்து பணம் தட்டிப் பறிப்பதற்காகவே குறித்த ஊழியர் மானியை இடமாற்ற வேண்டும் என்று வீண் தகராறு செய்தார். அது பற்றிப் புகார் செய்த போது அலுவலர் புகாரை மறைத்து அவரை காப்பாற்றியதற்கு காரணம் பல கூட்டு திருகு தாலங்கள் எங்கே வெளியில் வந்துவிடுமோ என்ற பயமே.

வாடிக்கையாளர் வீட்டுக்கு வந்து மானியை இடமாற்றுவதற்காக நில அளவை எடுத்துச் சென்றவர்களே குறித்த முத்திரை உடைக்கப்பட்டுள்ளதாக புகார் செய்திருந்தனர். அப்படி உடைக்கப்பட்டிருந்தால் அதை தன்னிடம் ஏற்கனவே காட்டியிருக்கலாமே என்பது தான் வாடிக்கையாளர் வாதமாகும்.

ஒட்டு மொத்தமாக பார்க்கும் பொழுது சில ஊழியர்களும், அதிகாரிகளும் ஒத்தாசையாக இருந்து கொண்டு வாடிக்கையாளர்களிடமிருந்து



பணம் பறிப்பதை வழமையாகக் கொண்டுள்ளார்கள் என்பதை மிக தெளிவாக கூறலாம். மேலும் குறித்த தண்டப்பணம் எழுத்து மூலம் கோரப்படவில்லை. அது வாய் மூலமே கோரப்பட்டிருந்தது. எது எவ்வாறாயினும் அவரது மானி இன்னும் மாற்றிக் கொடுபடவில்லை என்பதே உண்மையாகும்.


யேசுபிரான் வீதியால் சென்று கொண்டிருந்த பொழுது ஓர் அபலைப் பெண் அவரின் காலில் விழுந்து 'யேசுவே என்னைக் காப்பாற்றும்' என கெஞ்சினாள். யேசு நிமிர்ந்து பார்த்த பொழுது பலர் அங்கு கைகளில் கற்களை ஏந்தி நின்றனர். 'ஏன் இவளை துன்புறுத்துகிறீர்கள்?' என யேசு வினவிய போது 'யேசுவே இவள் ஒரு விபச்சாரி' என பதிலளித்தனர். அதற்கு அவர் 'உங்கள் மேல் குற்றமில்லாதவர்கள் இவள் மீது முதலில் கற்களை வீசட்டும்' என்றார். சகலரும் கற்களை கீழே போட்டுவிட்டு அசடு வழிய அமைதியாக அந்த இடத்தை விட்டு அகன்றனர்.





## ஏன் இப் பொல்லாப்பு

ஜேர்மனியில் முதியவர் (57) ஒருவர், பெண்கள் அணியும் உள்ளாடை மற்றும் காலணிகளை அணிந்து, தனது வீட்டின் சமையலறையின் கதவு அருகில் நின்று, சுய இன்பம் பெற முயற்சித்துள்ளார். அப்போது எதிர்பாரதவிதமாக அவர்



தனது இருப்புநிலையை தவறியதால், கீழே விழுந்துள்ளார். இவரது வீட்டின் வெளியே சில நாட்களாய் நாளிதழ்கள் குவிந்த வண்ணம் இருந்ததால், அண்டை வீட்டுக்காரர் பொலிசில் புகார் அளித்ததால் பொலிசாரால் இவர் காப்பாற்றப்பட்டார்.

## இதுதான் பாசமா??



பிரித்தானியாவில் ஜேசன் என்பவர் தனது மகள் மெடிலினை, துருக்கி நாட்டிற்கு சுற்றுலா அழைத்துள்ளார். இதற்குத் தடையாக தன்னுடைய வேலை இருந்ததினால் அத்தந்தை தனது வேலையை ராஜினாமா செய்துள்ளார்.

## 365 + 365 உணர்வுகள்





ஜெர்மனியை சேர்ந்த ஒரு நாடக நடிகர் புதுவிதமான ஆராய்ச்சியில் இறங்கியுள்ளார். வருடம் முழுவதும் தினமும் வெவ்வேறு நபர்களுடன் செக்ஸ் உறவு புரிந்தால் என்னவிதமான உணர்வுகள் கிடைக்கும் என்பதை ஆராய்ச்சி செய்ய உள்ளாராம். இதற்காக தனக்கு உதவும்படி அவர் டுவிட்டரில் ஆதரவு கேட்டுள்ளார். ஒருசிலர் அவருக்கு வாழ்த்தும், மற்றும் சிலர் அவருக்கு எச்சரிக்கையையும் கொடுத்துள்ளனர்.

## காதல்!

இங்கிலாந்து நாட்டை சேர்ந்த ஒருவருக்கு சமீபத்தில் நடந்த கார் விபத்து ஒன்றில் தனது பழைய வாழ்க்கை முழுவதையும் மறந்துவிட்டார். அவருடைய மனைவி அவருடைய ஞாபகத்தை மீண்டும் வரவழைக்க தீவிர முயற்சி செய்தும் முடியவில்லை. ஆனால் கோமாவில் மீண்ட அந்த நபர், "உன்னை எனக்கு தெரியாது. உன்னை நான் முன்பின் பார்த்ததே இல்லை. ஆயினும் நான் உன்னை காதலிக்கின்றேன்" என்று கூறிய ஒரு அதிசய நிகழ்ச்சி

## அதிக நிறை மூளை உள்ளோர்



சிங்கப்பூரில் இருந்து சிட்னி நகருக்கு செல்ல இரண்டு இளைஞர்கள் சிங்கப்பூர் விமான நிலையத்திற்கு வந்தனர். அவர்கள் கொண்டு வந்திருந்த லக்கேஜ் எடை இலவசமாக கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த எடையை விட அதிகமாக இருந்ததால் கூடுதல் கட்டணமாக $130 கொடுக்க வேண்டும் என விமான நிலைய அதிகாரிகள் வலியுறுத்தினர். உடனே லக்கேஜை திறந்து அதில் வைக்கப்பட்டிருந்த உடைகள் அனைத்தையும் தங்கள் உடலில் அணிந்து கொண்டனராம் அவ் இரு இளைஞர்களும்.

## சிரி ஆப்ஸ் வைத்த ஆப்பு



புளோரிடோவை சேர்ந்த Pedro Bravo என்ற 20 வயது இளைஞர் ஒருவர், தன்னுடன் தங்கியிருந்த தனது நண்பர் தனது முன்னாள் காதலியுடன் தொடர்பு வைத்திருப்பது தெரிந்து அவருடன் வாக்குவாதம் செய்துள்ளார். வாக்குவாதம் முற்றி ஆத்திரத்தில் தனது நண்பரை அடித்து கொன்றுவிட்டார். பின்னர் பிணத்தை எப்படி மறைத்து வைப்பது என்று அவருக்கு தெரியவில்லை. தனது ஆப்பிள் ஐபோனில் சிரி ஆப்ஸில் தான் ஒருவரை கொலை செய்துவிட்டதாகவும், அந்த பிணத்தை எப்படி யாருக்கும் தெரியாமல் மறைத்து வைக்க வேண்டும் என்று தனது சந்தேகத்தை கேட்டுள்ளார். சிரி ஆப்ஸில் பதிலளிப்பவர்கள் இந்த கேள்வியால் அதிர்ச்சி அடைந்து உடனடியாக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் வெளியே போய்விட்டு வரலாமா, சிகா என்று சொல்ல வேண்டியதுதான். சிகாமணி உடனே புறப்பட்டு விடுவாள். நான் அவளை எங்கே கூப்பிட்டுக்கொண்டு போவேன் என்றும் அவளுக்குத் தெரியும். "வரும்போது காய்கறி வாங்கிக்கொள்ளலாமா" என்ற கேட்பாள். சட்டைப் பையைத் துளாவிக்கொண்டு பணம் இருக்கிறதா என்று பார்ப்பேன். "பர்ஸ் எடுத்துக்கிட்டேன்" என்று சிரிப்பாள்.

எத்தனை வருஷமாகச் சிகா இப்படியே சிரித்துக் கொண்டிருக்கிறாள். ஒரு கீரைத் தண்டைப் போலக் கணுக்கணுவாக முற்றி, கல்யாணமாகி இத்தனை வருஷமாகியும் அப்படியே இருப்பது இவளாகத்தான் இருக்கும். கனகராஜ் நல்ல குண்டு என்றுதான் சொல்ல வேண்டும்.

அம்பலவாணபுரத்திலிருந்து அம்பை ஆர்.எஸ் வரமிஞ்சிப் போனால், பஸ்ஸில் பதினைந்து நிமிஷம் ஆகும். சிகாவும் இதை எத்தனையோ தடவை என்னிடம் சொல்லியிருக்கிறாள். அப்படி எல்லாம் தோன்றச் செய்தது எது. தூரத்தில் தெரிகிற மலைகளா, எங்கோ ஓடிக்கொண்டிருக்கிற ஆறா. இரண்டு பக்கமும் திறப்பாகக் கிடக்கிற வெளியா. "அழக் கூடாது மணி, பச்சை பிள்ளையா நீ" என்று பின் சீட்டில் இருந்து சிகாமணியின் அம்மா சொல்லிக் கொண்டே வந்தார்கள். சிகாவின் தங்கை பொன்னுக்குட்டியும் அழுது கொண்டிருந்தாள். இத்தனையிக்கும் பஸ் ஏறுகிற வரை அத்தானைக் கிண்டல் செய்து கொண்டு இருந்தவள் தான் அவள்.

கனகராஜ் இது எல்லாம் இப்படித்தான் இருக்கும் என்பதுபோலக் கைக்குட்டையால், முகத்தைக் துடைத்துக்கொண்டு, "ரவி அடுத்த ஸ்டாப்பில் இறங்க



வேண்டுமல்லவா" என்று கேட்டார். ஆமாம் என்ற சூட்கேஸ்களை எல்லாம் நகர்த்திக் கொண்டே சிகாவைப் பார்த்தேன். ஈறு தெரியச் சிரித்தால், சிகா மனதாரச் சந்தோஷமாக இருக்கிறதாகத்தானே அர்த்தம்.

சிகா ஒரு ஓல்லிப் பாச்சா போலக் கூடவே போய்க் கொண்டிருந்தாள். சிவப்புக் கலர் வெல்வெட் செருப்பு பளிச்பளிச்சென்ற மாறிக் கொண்டிருந்தது. பொன்னுக்குட்டி சேலைகட்டி அக்காவையிடப் பெரிய மனுஷி மாதிரி இருந்தாள். "ஏ" இந்தப் பையை வாங்கு" என்று பொன்னுக்குட்டியை சிகாவின் அம்மா தன்பக்கம் கூப்பிட்டுக் கொண்டதற்குக் காரணம் இருந்தது. கல்யாணம் முடிந்து கோவிலை விட்டு வெளியே வருவதற்குள்ளேயே தனத்துச்சித்தி, "பேசாமல் பொன்னுக்குட்டியை கட்டி வச்சிருங்க. அவதான் பொருத்தமா இருக்கா வளர்த்தியும் சதையுமா" என்று, சொல்லிவிட்டாள். கைக்கு ஏழெட்டுத் தங்க வளையல் போட்டிருக்கிறவள். சொன்னால் எல்லோரும் சும்மா இருப்பார்களா? கீற்றுப்போல ஒரு தடவையும் ஈறு எல்லாம் தெரிகிறதுபோல இன்னொரு தடவையும் சிரிக்கிறது. எல்லாவற்றையும் விட, சிகாவின் முகத்தில் இருக்கும் ஈரம் முக்கியமானது. அது லேசில் அமையாது. ரயில் புறப்படும்போது நானும் ஏறினேன். "என்ன ரவி" என்றுக் கேட்டுக் கொண்டே "வண்டி நகர்ந்துட்டுது, இறங்கு என்றாள். பொன்னுக்குட்டியைப் போல எனக்கு அழ முடியவில்லை. "ஜங்ஷன் வரைக்கும் வாரேன்" என்று சொன்ன என்னைப் பார்த்த கனகராஜ் "உட்காருங்க ரவி" என்றார். ஆற்றப் பாலத்தைத் தாண்டும் போது சிகாமணியைப் பார்த்தேன். சிகா ஆற்றையே பார்த்துக் கொண்டிருந்தாள், ஆறு சற்று உள் ஒடுங்கி பாறைகள் முளைக்க ஓடிக் கொண்டிருந்தது.

"ஏன் ரவி வேலையை விட்டே? மில்லூல பெர்மனண்ட் ஆச்சுண்ணா நல்ல சம்பளம்லா" சிகா ரொம்ப அக்கறையோடுதான் கேட்டாள். பாலிடெக்னிக் படித்துவிட்டு ஒரு வருஷம் சும்மா இருந்தபின், ஓர்க்கராகச் சேர்ந்து சைக்கிளும் தூக்குச்சட்டியுமாக வந்து கொண்டிருக்கும்போது, சிகா, சிகாவின் அம்மா, லீவுக்கு வந்திருந்த அக்கா பிள்ளைகள் எல்லாம் தாய்சீனிஸில் சினிமா பார்த்துவிட்டு நடந்து வருகிறார்கள். சிகாவிடம் என்ன மாயமிருந்தது. அக்காவுடைய இரண்டு பையன்களும் சிகாவின் கையைப் பிடித்து என்னென்னவோ பேசிக் கொண்டு வருகிறார்கள். பொன்னக்குட்டியைப் பார்த்து சிகா சத்தம் கூடப் போடுவாள். "அதென்ன பழக்கம். எப்ப பார்த்தாலும் தொட்டுத் தொட்டு பேசிக்கிட்டு" என்று. பின் எப்படி சூரிய வெளிச்சம் மாதிரி ஒவ்வொருத்தரையும் அவளால் பளிச்சென்று ஆக்கிவிட முடிகிறது.

"உன்னை மாதிரிக் கிறுக்கன் உண்டா, உள்ளூர்ல கிடைச்ச வேலையை விட்டுட்டு, மெட்ராஸ்லே வேலை கிடைக்குமென்று ஓடிவார புத்திசாலி நீதான்" - சிகா தட்டில் சாதத்தைப் போட்டுக்கொண்டே சொன்னாள். சிகாவின் கைகள் எந்த மாறுதலும் இன்றி அப்படியே மெலிவாக இருந்தன.

"ட்ரை பண்ணும்வோம் ரவி" என்று கனகராஜ் சொன்னார், ஒரு டர்க்கி டவலை உடம்பு முழுவதும் மறைக்கிற மாதிரி அவர் போட்டிருந்ததை எடுத்து, "துடைச்சுக்கோ" என்று, கைகழுவிவிட்டு வந்த எனக்குச் சிகா கொடுத்தாள். கையைத் துடைத்த பிறகு அந்தக் துண்டை இன்னும் முகர்ந்து பார்க்கத் தோன்றியது. ஒருவித கிளர்ச்சியுடன் அதைச் சிகா தோளில் போட்டேன். அவள் தோளில் கிடந்த துண்டை எடுத்து மறுபடி அவள்மேல் வீச வேண்டும்போல இருந்தது. சிகா அவ்வளவு அழகாக இருந்தாள்.

# எழுதி வைக்காததை

**சிறுகதை**

"நம்ம ஊர் ஸார் இங்கேதான் இருக்காங்க" சிகா என்னிடம் சொன்னாள். "யாரு நம்ம கணக்கு ஸாரா" - எனக்கு நம்ப முடியவில்லை. சிகா தலையை அசைத்தாள். "டிரில் வாத்தியாரா இருந்தானே அவரு பையன், அவரு கூட இருக்கிறதாக அல்லவா சொன்னாங்க"

"ஆமா மயில்சாமி கூடத்தான். இங்கே தானே, இருக்கான் அவன்"

"தெரியும் தெரியும்" சிகா ஒரு மாதிரியாகச் சிரித்தாள். சிகாமணி போகிற இடமெல்லாம் மயில்சாமி கொஞ்சநாள் அலைந்து கொண்டு இருந்தான். தினசரி விடியற்காலம் ஆறுமணிக்கு என்ன அல்வாவா சாப்பிடமுடியும். அது எல்லாம் காய்ச்சல் அடித்துக் குணமாகிற மாதிரி தன்னாற் போல சரியாகிவிட்டது.

வெள்ளை அரைக்கால் சட்டையும் கான்வாஸ் காலணியுமாக சைக்கிளில் பந்து விளையாட போகும்போது சிகா வாசலில் கோலம் போட்டுக் கொண்டு இருந்தால். வீட்டுச் சுவரில் உதயசூரியன் சின்னத்திற்கு ஓட்டுச் செய்யுங்கள் என்று பெரிதாக எழுதப்பட்டிருந்தது. மயில்சாமி பேசுவான் என்றுதான் சிகாமணி நினைத்தாள். கிணிங் என்று அவள் பக்கத்தில் வரும்போது ஒரு பெல் கூட அடிக்கவில்லை. சிலபேர் எப்படி இப்படி மாறிவிடுகிறார்கள்.

இவ்வளவு தெரிந்தபிறகு துரைப்பாண்டி ஸாரை பார்க்காமல் இருக்கமுடியுமா. மயில்சாமி வீட்டை சிகாவும் நானும்தான் நடந்து போய்க் கண்டுபிடித்தோம். கொஞ்சம் தூரம்தான். போகவரவே அரைமணிநேரம் கிட்டதட்ட ஆகிவிடும். மயில்சாமி சம்சாரம் அருமையான மனுஷி. "இவ்வோ இன்னும் வரலை. மாமா ட்யூஷன் எடுக்காஹ. இதை சொல்லும்போது ஒரு தட்டில் கொழுக்கட்டையும் தண்ணீரும் வந்தது.

"நமக்கே குத்த வச்சு ஒரு இடத்தில் சும்மா இருக்க முடியலே. இதிலே அந்தக் காலத்து ஆட்கள் எப்படி இருப்பாஹ? - மயில்சாமி சம்சாரம் பேச்சை நிறுத்துகிறதாக இல்லை.

என்றைக்கு வெளியே போகவேண்டும் என்று தோன்றினாலும் எனக்கும் சிகாவுக்கும் துரைப்பாண்டி ஸார் வீட்டிற்குத்தான் போகத் தோன்றும். இப்போதாவது என்னென்னவோ பேச்சு வந்துவிட்டது. ரேஷன் கடையில் கூட நான் கனகராஜ் இல்லை என்று தெரிந்து கொண்டே, "கனகராஜ் ஸாருக்கு கோதுமைக்கு பில் போட்டாச்சா" என்று கேட்டபடி என்பையில் கோதுமையை அளந்து போட்டிருக்கிறார்கள்.

இதற்கு எல்லாம் முந்தி நாங்கள் மூன்று பேருமே நடந்து, பெருமாள் கோவில் தாண்டி, போலீஸ் ஸ்டேஷன் பக்கமாய்ப் போய், ஏரிக்கரையில் நடந்து, நடுவில் பட்டம் விடுகிறவர்களைச் சற்றுப் பார்த்து, சர்வ சாதாரணமாக நடக்கிற சாராய வியாபாரத்தைக் கண்டுகொள்ளாமல் விலகி, ஒரு நீண்ட விசில் சத்தத்தின் கேலி ஒலிக்க - வேலிக்காத்தான் செடிகளுக்கு அப்புறமாகப் போய் ஸார் வீட்டை அடைந்தபோது, அன்றைக்கு கணக்கு ஸார் வீட்டில் இருந்தார்கள்.

கணக்கு ஸார் எவ்வளவு அருமையான மனிதர். எங்கள் பள்ளிக் கூடத்தின் சொத்தே அவர் அல்லவா. உலகம் என்ன என்ன முடிச்சை எல்லாம் எங்கெங்கு போடுகிறது. என்னுடைய தாத்தாவும் அவருடைய அப்பாவும் எஸ்டேட்டில் ஸ்டோர் கீப்பராக இருந்தார்களாம். ஏதோ ஒரு முக்கியமான சிறு உதவியை எங்கள் தாத்தா செய்திருப்பார் போல. " அவர் பொருத்திவச்ச விளக்கு அல்லவா எங்க வீட்டில் இன்றைக்கும் எரியுது" என்று என்னுடைய அப்பாவிடம் ஸார் சொலலிக் கொண்டிருந்தார். பேசிக் கொண்டிருந்துவிட்டு அப்பா போனபிறகு அன்றைக்கு ஸார் எனக்குக் கணக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. குளிர்ந்த ஓடைகளும் பெரணிச் செடிகளுமாக இருக்கிற அவருக்குப் பிடித்த ஒரு பாறையைப் பற்றிச் சொல்கையில், நான் அந்த ஓடையில் இருந்து கூழாங்கற்கள் பொறுக்கினதுண்டு.

ஒரு சமயம் இங்கிலஷ் பீரியட் ஸார் வராதபோது துரைப்பாண்டி ஸார் வந்து "இங்கிலீஷ் பொயட்ரி" எடுத்தார். ஒரு படுகை பூராவும் மலர்ந்திருக்கிற ஒரு மலரைப் பற்றிய அந்தக் கவிதையைச் சொல்லிக் கொடுப்பதற்கு முற்றிலும் பொருத்தமானவர் என்பது அவர் பேசின மற்றப் பேச்சிலிருந்தே எனக்குதெரிந்தது. எனக்கும் கூட சமபங்கு கணிதமும் வேண்டியிருந்தது. இதுபோல சொல்லிக் கொடுக்கப்படுகிற கவிதையும் வேண்டியிருந்தது. நான் பாலிடெக்னிக்கில் சேருவதற்குப் போதுமான கணக்கையும், சிகாமணியைக் கண்டடைவதற்கான மெல்லுணர்வையும் அவரிடமிருந்துதானே பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

நாங்கள் மூன்று பேரும் போன தினத்தில் சிகாவிடமும், என்னிடமும், ஊருக்குப் போனீர்களா, சமீபத்தில் மழை உண்டா, மில்லில் ஆள் எடுக்கிறார்களா, எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டியதிருக்கிறது. ஹைஸ்கூலில் போனவருஷம் எத்தனை சதம் தேறினார்கள். கணக்கில் சென்ட்டம் எத்தனைபேர், சொரி முத்தையன் கோவிலுக்கு இப்போது ஆடி அமாவாசைக்கு முன்னை போலக் கூட்டம் வருகிறதா. காணிக்குடியிருப்பில் ஸ்கூல் ஒண்ணு உண்டே அது நல்ல பெருசா வளர்ந்துட்டுதா, இப்போ ஸ்ட்ரெங்த் எவ்வளவு இருக்கும் என்று எல்லாம் சற்று நேரம் கேட்டவர், ஒரு கேவலைப்போல நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு, இதுவரை பேசாமல் கவனித்து கொண்டிருந்த கனகராஜைப் பார்த்து.

"உங்களுக்கு இசையில் ஆர்வம் உண்டு என்று கேள்விப்பட்டேன்" என்று அவருடனான தன் முதல் உரையாடலைத் துவக்கினார். அவர்கள் பியானோ இசையைப் பற்றி அப்புறம் அதிக நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். கனகராஜ் ஒரு கட்டத்தில் பியானோ வாசிப்பதையே போன்று தன் பத்து விரல்களையும் ஒரு இசைவுடன் அசைத்துக் கொண்டு, காற்றில் சில நிமிடங்கள் அந்தரத்தில் கைகளை நிறுத்திக் கண்களை, மூடிக்கொண்டபோது, துரைப்பாண்டி ஸார் தன் பக்கத்தில் இருந்த சிகாமணியின் கைகளில் ஒன்றை எடுத்துத் தன் நெஞ்சோடு வைத்துக் கொண்டார். சிகாவின் மெலிந்த கையின் மேல், வழுவழுப்பு நிறைந்த சேலை நினைத்து நினைத்துச் சரிந்து இறங்கியது.



அப்புறம் நாங்கள் எத்தனையோ தடவை போயிருப்போம். ஒரு சில நெகிழ்வில் உள்ளங்கைக்குள் புரண்டு கொடுக்கிற கற்பனையான வைரக்கற்களைப் போல, மனிதர்களுக்குள்ளும் நிகழ்ந்து விடத்தானே செய்கின்றன. எல்லாம் காதுக்கு வந்த பிறகு மயில்சாமியின் மனைவி ஒரு சிறு வித்தியாசம் கூடப் பாராட்டாதது எப்படி என்று இன்னும் புரியவில்லை. நானும் சிகாவும் போயிருக்கும் போது, இரண்டு பேரையும் வைத்துக் கொண்டு மயில்சாமி ஒரு தடவை சொன்னான்.

"உங்க ரெண்டு பேரையும் கண்டிச்சு சொல்லணும் போலவும் இருக்கு. சொல்லவும் முடியலை". இதற்கு மேல் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் எப்படி அவனால் நிறுத்திக் கொள்ள முடிந்தது. அவன் வீட்டிலே உட்கார்ந்து டி.வி. பார்க்கிறோம். "சிகா, உனக்குக் கார்ட்டூன்ஸ் பிடிக்கும் என்று சொன்னாயே" என்று சொல்லி காஸெட்டைப் போடுகிறான்.

"ரவி மீன் சாப்பிடுவியா நீ" என்று அவன் மனைவி வந்து கேட்டுவிட்டுப் போன சிறிது நேரத்தில் அம்மி தட்டுகிற சத்தம் கேட்டது.

"அம்மி தட்டுகிற சத்தம் கேட்டு எவ்வளவு நாளாச்சு" சிகாமணி உட்பக்கம் எழுந்து போகிறாள். திரையில் பூனை எலியிடம் படாதபாடு பட்டுக் கொண்டிருக்க மயில்சாமி அப்படிச் சிரிக்கிறான். சின்னப்பிள்ளை மாதிரி. சொல்ல முடியாத ஒரு கணத்தில் எல்லோரையும் விட்டுவிட்டு நான் மட்டும் எங்கேயாவது போய்விட வேண்டும் என்று தோன்றுகிறது.

"மயில் அப்ப நான் வர்ரேன்"

"ச்சூ. இருந்து சாப்பிட்டுப் போகலாம் ரவி"

இல்லை போறேன்" - எனக்கு என்னைத் தூக்கி யாராவது எறிந்து நொறுக்கிவிட மாட்டார்களா, சுக்கல் சுக்கலாகி, யார் காலிலும் குத்தாமல், மண்ணோடு மண்ணாகிவிட மாட்டேனா என்று இருக்கிறது. வெயிலின் கீற்றில் கரைந்து அரூபமாகி, ஏரிக்குள் பறக்க விடுகிற பட்டம் மாதிரி உச்சிக்கு எவ்வி எவ்வி உயிர் அறுந்து திரிந்து கொண்டிருக்க வேண்டும்.

"சிகா சாப்பிட்டுட்டு வரட்டும். நான் போறேன்" எழுந்திருந்தேன்.

"இந்த பாரும்மா. ரவி போறானாம்" - அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நான் வெளியே வந்தேன். ஹிண்டு பேப்பர் தரையில் சருகியது. நாய் கட்டிப் போட்டிருந்த இடத்தில் சூட்டு வாடை அடித்தது. தபால் பெட்டில் யாரோ டூத் பிரஷ் காலி டப்பாவைச் செருகியிருந்தார்கள்.

"என்ன ஆச்சு ரவி" - சிகா வந்து கையைப் பிடித்தாள். மேலும் பிடித்தபடியே என்னுடனே நடக்க ஆரம்பித்தாள். மெலிந்த அவளுடைய கைகள் எனக்கு நிரம்பவும் வேண்டியிருந்தது. சேலையின் விசிறல் பக்கவாட்டில் நகர்ந்தபடி வந்தது. சிகாமணி சேலைத்தலைப்பால் முகத்தை ஒற்றிக் கொண்டாள். "நல்ல வெயில்" என்றாள்.

எதிரே துரைப்பாண்டி ஸார் வந்து கொண்டிருந்தார். தூரத்தில் இருந்து எங்களைப் பார்க்கும் போதே சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

துரைப்பாண்டி ஸாருக்கு எல்லாம் தெரியும்.

"சாப்பிட்டீங்களா" - மரத்தடிக்கு வாருங்கள் என்று கூப்பிடவில்லை. அவர் ஒரு மரத்தடிக்கு நகர்வது மூலம் எங்களையும் நிழலுக்கு உட்படுத்திக் கொண்டார்.

மணி ஒண்ணரைதானே ஆகுது"

"ஒண்ணரை மணிக்குச் சாப்பிடக் கூடாதுன்னு என்ன எழுதியா வச்சிருக்கு?" -ஸார் எங்களைப் பார்த்தார்.

நாங்கள் நின்றிருந்த வேலிக்கருவை மரம் நிறையக் காய்த்திருந்தது. குஞ்சம் குஞ்சமாகப் பூத்திருந்தது.

மறுபடியும் கேட்டார் - "எழுதியா வச்சிருக்கு"

சிகா தலையை ஆட்டினாள்

"எழுதி வைக்கலையில்லா?" - இப்போது என்னைப் பார்த்துக் கேட்டார். நான் இல்லை என்று தலையை ஆட்டினேன்.

"பின்னே?" - இதைச் சொல்லிவிட்டு துரைப்பாண்டி ஸார் முன்னால் நடந்தார். நாங்கள் பின்னால் வருவோம் என்று

*நன்றி - சந்திரக் கற்கள்.. ..*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பாயே!

படித்தவன் - பதவியேற்று
பலர் போற்றும் பணிகளாற்றி
முடிக்குமுன் நோய்க்குட்பட்டு
முடங்கியே கிடக்கலாமோ?
படிக்கருகுள்ள வாயில்
பழமரமான ஜேமின்
அடிக்குள்ளே அமர்ந்த பிள்ளை
அப்பனே, அருளுவாயே!

அவ்வையைக் காத்தாய் அன்று!
ஆம்கயமுகனை மாய்த்தாய்
செவ்வை நூல் பாரதத்தைத்
திறம்பட எழுதிவைத்தாய்!
ஒவ்வுலகென்று பெற்றோர்
உலாவி மாங்கனியும் பெற்றாய்!
இவ்வகை ஆற்றல் பிள்ளாய்,
இரா.செழியனைக் காப்பாயே!

– தாமரைத்தீவான் –
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

## நாட்டிலின்று நடப்பவை

நாளாந்தம் அத்துமீறல்
நாட்டிலின்று தொடர்கதைகள்
ஆட்கடத்தல் அடாவடிகள்
அடிக்கடி ஆர்ப்பாட்டங்கள்!


தீர்வில்லா யோசனைகள்
செயலற்ற பேச்சுக்கள்
நேர்வழிகள் கதவடைப்பு
நீதி கேட்போர் அதிகரிப்பு!

பறை தட்டி ஊர்கூட்டி
குறை சாட்டும் எதிர்த்தரப்பு
கறை காணக் களமாடும்
விசாரணைக் குழு அயல்நாட்டில்!

அபிவிருத்திப் பணிகளின்று
ஆர்ப்பரித்து பர பரப்பு மரக்கறிகள்
தலை தெறிக்கும் விலையுயர்வு
நுகர்வோர்கள் முகம் சுழிப்பு

வடகிழக்கில் கடும் வரட்சி நீர்
வளங்கள் எல்லாம் வரண்ட காட்சி
கடல் நீரைக் குடிநீராக்க
காரியங்கள் நடக்கின்றது!

– சேனையூரான் –



## அதிகாரம் வரம்பு மீறினால்....?

ஆதிக்க வெறி
அத்து மீறுமானால்
அமைதி கெடும்!
அன்புப் பிணைப்பு
ஆழமாக பதியுமானால்
ஆனந்தம் மலர்ந்து நிலைக்கும்!
அதிகாரம் வரம்பு மீறினால்
ஜனநாயகம் ஒருபோதும்
பூத்துக் குலுங்காது!

– சேனையூரான் –

## பால்யத்தின் கொலை

திருஞானசம்பந்தன் லலிதகோபன்

குளிரின் கதகதப்பை நெருப்புக்கு
பேரம் பேசியபடி அடுப்பங்கரையில்
எனது பால்யம் படுத்துக்கிடந்தது...

ஒரு சில பாடப்புத்தகங்கள்
கேசம்வருடும் அன்னையின் கரங்கள்
பசிக்காத போதிலும் உணவு
வாய்கால் ஓரங்களின் தும்பிகள்
வேலியோரங்களின் ஓணான்கள்
இவைதவிர ஒரு நாய்க்குட்டியும்
நண்பன் சீலனும் மட்டுமே உலகாய்
இருந்தது பால்யத்துக்கு....

நெருப்பை உமிழ்ந்த கடும்
கோடை நாளொன்றில் அயல் வீட்டு
அழகியை திருடிய விழிகளிலும்
அரும்பிய மீசையினை தடவிய
விரல்களிலும் படிக்க சொன்ன
அப்பாவை சுட்ட மனசுள்ளும்
நான் பிரியமாய் வளர்த்த அந்த
பால்யம் கொடூரமாய் கொலை
செய்யப்பட்டது...

பால்யத்தின் பெறுதி உணராது
முறுக்கேறி திரிந்த நாட்களை
சபித்து கொண்டே தள்ளாத இந்த
அறுபதுகளில் பால்யத்துக்கான
சிரார்த்த தினமொன்றை பிண்டம்
செய்து கரைத்து கொள்கிறேன்
இன்னமும் மிஞ்சியிருக்கும்
நான் குளித்த நதியோரத்தில்....

## பேச்சற்றுப்போய்

எதுவும் பேசாத மௌனம்
நீண்டு.... நீண்டு
எம்மிடையே நீண்டு போகும்!

நீட்சி
நிமிடங்களிற் தொடங்கி
வருடங்களாகும் - வரை
மௌனம்

விழிகளூடே பாயும்
உணர்வுகள்
பரிமாறும்
உயிரை.... நீ
நானாகி – நான்
நீயாகிப் பின்
நாமாகி....

எதுவுமற்றுப்
போவோம் - இப்
பிரபஞ்ச உலகில்

எதுவுமற்றுப்
போனபின்பும்

இம் மௌனம்
தாங்கி நிற்கும்
நம்
காதலை ...

உலகில்
காதலாகிப் பேசாதிருக்கும்
மாந்தரிடையே
நில்வும் மௌனத்தில்

நானும் நீயும்
நம் காதலும்

மௌனமொழியாய்

அகவைகள் தாண்டி
ஆண்டுகள்....
ஆண்டுகளாய் வாழ்வோம்...



– மாயன் –

## மண்ணின் மைந்தர்கள்

கலையுலகின் முதன் மனிதன்
கற்பனையில் சிறந்த நடிகன்
நாடகத் தந்தை ஸ்ரீ அபிநய சிகாமணி
தமிழ் சிங்கள மொழி நாடகவல்லுனர்
இருமொழி பேசி இதயத்தை வென்றவர்
சிறுகதை எழுத்தாளன் பட்டுச்சட்டை
பவனிவர பார்போற்ற நின்ற
கலைவேந்தன் விஸ்வலிங்கம் ஐயா.


– சீ.என்.துரைராசா –

# இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்லூபால வன்னிபத்தின் உயில்:

பாகம் 07

### திருகோணமலை வன்னிபங்களும் அதன் தேசவழமைகளும்

கடந்தவார தொடர்ச்சி.. ..



"சொல்லூற்ற சீர்க் குளக்கோட்டு மன்னன் சொற்படி சொல்லெனவே" முன்னே குளக்கோட்டு மன்னன் கூறியபடியே கூறுவீராக என்று ஒருவர் கேட்க அதற்கிசைந்து கவிராசவரோதயரால் பாடப்பட்ட கோணேசர் கல்வெட்டில் வன்னிபம் தொடர்பாக சொல்லப்பட்டிருக்கும் பல வழமைகளை ஆதாரப்படுத்தும் பெறுமதிமிக்க (இற்றைக்குச் சுமார் 120 வருடங்களுக்கு முந்திய) ஆவணமாக இந்நியமன உயில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு பழமையான இலக்கியங்க ளையும் ஆவணங்களையும் அக்கறையுடன் தேடிப் பாதுகாக்கப்பட வேண்டியதின் அவசியத்தை இவ்வுறுதி உணர்த்துகிறது. மிகவும் உருக்குலைந்த நிலையில் கிடைக்கப்பெற்ற இந்நியமன உயிலின் பிரதி சில மாதங்களுக்கு முன் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் திரு.சி.பத்மநாதன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. வரும் நாட்களில் இந்நியமன உயில் தொடர்பிலான மேலும்பல ஆதாரங்கள் வெளிப்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் பண்டைய கோணேசர் கல்வெட்டுப் போன்ற நூல்களை அறிவியல் சார்ந்து அணுகவேண்டியதின் அவசியத்தை இது



அடுத்த வாரம் புதிய கோணத்தில், புதிய பல சான்றுகளுடன் எமக்குத் தெரிந்த, தெரியாத பல விடயங்களுடன் தொடரும்.. ...

முற்றும் .. வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்



# புதிய ஆபத்தில் – தமிழ் மொழி

வரலாறு நெடுகிலும் நம் தமிழ்த் தாய் ஆபத்துகள் சூழவே வாழ்ந்து வருகிறாள். ஆனால் இப்போது எதிர்பாராத வகையில் தமிழுக்கு ஒரு புதிய ஆபத்து வந்துள்ளது. பெருந்திரளான தமிழ் மக்கள் உணரவில்லை என்பதால் இந்தப் புதிய ஆபத்து இன்னுங்கூட பெரிய ஆபத்தாகி விட்டது.

சமஸ்கிருத, ஆங்கில, இந்தித் திணிப்புகளாலும், கலப்புகளாலும் தொடர்ந்து அடுத்தடுத்து வந்துள்ள தாக்குதல்களுக்கு முகங் கொடுத்துச் சில பல இழப்புகளுக்கும், சிதைப்புகளுக்கும் உள்ளான போதிலும் சீரிளமைத் திறங்குன்றாச் சிறப்பை அறவே இழந்து விடவில்லை நம் அன்னை.

இயற்கை மொழிகளின் மூல வடிவம் ஒலியே. வளர வளர வரப்பெற்று மொழிக்கு முழுமை தருவது வரி வடிவமாகும். தமிழுக்கே உரித்தான ஒலி வடிவத்தையும், வரி வடிவத்தையும் "கிரந்த எழுத்துகள்" எனப்படுகிறவற்றைக் கொண்டு சிதைக்கும் முயற்சிகள் சில நூற்றாண்டுகள் முன்பே தொடங்கி விட்டன. இந்த முயற்சிகள் கணி உலகிலும் (கணினி) பரவி விட்டதுதான் இப்போது புதிய செய்தி. இச்செய்தியைப் புரிந்து கொள்வதற்குச் சில இலக்கண வரையறைகளை அறிந்து கொள்ள வேண்டும்.

கிரந்த எழுத்துகள்: நமக்கு நன்கு தெரிந்த சில கிரந்த எழுத்துகள் ஜ, ஷ, ஸ, ஹ ஆகியவை. ஸ்ரீ ஆகியவை நாமறிந்த கிரந்தக் கூட்டெழுத்துகள் ஆனால், இவை மட்டுமல்ல, கிரந்தத்தில் 16 உயிர் எழுத்துகளும் 34 மெய் எழுத்துகளும் உள்ளன. தமிழுக்கென்று தனி எழுத்துமுறை உள்ளது. திராவிட மொழிக் குடும்பம் என்று தவறாகப் பெயரிட்டழைக்கப்படும் தமிழ் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி எழுத்து முறைகள் உள்ளன.




மொழிக் கலப்பில் நாட்டம் கொண்டவர்கள் அல்லது அது பற்றிக் கவலைப்படாதவர்களான பல தமிழர்கள் கிரந்த எழுத்துகளைத் தமிழ் எழுத்துகளோடு கலந்து எழுதும் வழக்கம் இருந்தாலும், தமிழ் நெடுங்கணக்கில கிரந்தத்தை நாம் சேர்த்துக் கொள்ளவில்லை. கிரந்தம் இருந்தாலும் கிரந்தமாகவே இருக்கிறது, கலந்தாலும் கிரந்தரமாகவே கலக்கிறது. இப்போது கணியுலக அளவிலாவது கிரந்தத்தைத் தமிழ்க் கணக்கிலும், தமிழைக் கிரந்தக் கணக்கிலும் சேர்க்க ஒரு முயற்சி நடைபெறுகிறது. இதையே தமிழுக்கு வந்துள்ள புதிய ஆபத்து.

ஒருங்குறி: கணி(னி) வழியாக ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதற்குத் தோதாக ஒவ்வொரு மொழிக்கும் ஒரு பொதுவான எழுத்துமுறை தேவைப்படுகிறது. இவ்வாறான பல எழுத்துமுறைகளை உள்ளடக்கிய பன்மொழி எழுத்துமுறைதான் ஒருங்குறி எனப்படுகிறது. உலக மொழிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் எழுத்துக்கும் ஒரு தனிக் குறியீடு ஒதுக்கப்படுகிறது. இக்குறியீடு எல்லா வகைக் கணிகளிலும் ஒன்றாகவே இருக்கும்.

தொடரும் ..

-- சமூக நீதித் தமிழ்தேசம் --

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விவகாரத்தில் டாட்டூ

ஜெயம் ரவியின் பாக்ஸிங் உருவங்களை உடல் முழுவதும் டாட்டூ குத்த வேண்டும் என்று இயக்குனர் கூறியபோது தற்காலிக டாட்டூதானே என முதலில் சம்மதம் தெரிவித்த த்ரிஷாவுக்கு பின்னர்தான் தெரிந்தது உடலின் முக்கிய பாகங்களிலும் டாட்டூ குத்த வேண்டும் என்பது. இயக்குனர் கல்யாண கிருஷ்ணன் த்ரிஷாவின் தொடை, மார்பின் கீழ்பகுதி போன்ற விவகாரமான பகுதிகளிலும் டாட்டூ குத்த வேண்டும் என வற்புறுத்தியதால் ஒரு சிறு கலகமே ஏற்பட்டு பின்னர் ஜெயம் ரவியின் சமாதானத்திற்கு பின்னர் த்ரிஷா டாட்டூ குத்த சம்மதித்துள்ளதாக கூறப்படுகிறது.

## மீண்டும் தனுஷ் ஆட்டம் ஆரம்பம்



தமிழ், இந்தி என கலந்து நடிக்கத் தொடங்கி விட்டார் தனுஷ். தமிழில் வேலையில்லா பட்டதாரி, அனேகன் படங்களில் நடித்துக்கொண்டிருந்தபோதே, இந்தியில் பால்கி இயக்கும் ஷமிதாப் என்ற படத்தில் கமிட்டாகி நடித்து வருகிறார். அமிதாப்பச்சனும் முக்கிய வேடத்தில் நடிக்கும் அப்படத்தில் ஒரு மாற்றுத்திறனாளியாக நடிக்கும் தனுசுக்கு ஜோடியாக கமலின் இளைய மகள் அக்ஷரா நடிக்கிறார்.

## நீங்களா! - மர்மம்

தன்னை அறிமுகப்படுத்திய குருவின் படத்திலேயே வில்லனாக நடிக்க மறுத்த அரவிந்த்சாமி, தற்போது ஜெயம் ராஜா நடிக்கும் தனி ஒருவன் என்ற திரைப்படத்தில் ஜெயம் ரவிக்கு வில்லனாக நடிக்க சம்மதித்துள்ளார். இந்த கேரக்டர் வில்லன் போன்றே தெரியாது. நல்லவர் போன்ற ஒரு நெகட்டிவ் வேடம். படத்தின் கதையை கேட்டதும் மறுப்பு சொல்லாமல் அரவிந்த்சாமி ஒப்புக்கொண்டார் என ஜெயம் ராஜா கூறியுள்ளார்.



## த்ரிஷா மறுப்பு ரஜனி அதிர்ச்சி



கே.எஸ்.ரவிகுமார் விடம் லிங்கா படத்தில் ஒரு பாடலுக்கு நடனம் ஆடுமாறு கே.எஸ்.ரவிகுமார் கேட்டதாகவும், அவர் கேட்ட தேதிகளில் ஜெயம் ரவியுடன் நடிக்க ஏற்கனவே கமிட் ஆகியிருந்ததால், தன்னால் அந்த பாடலுக்கு நடனம் ஆட முடியாது என்று த்ரிஷா மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது. ரஜினி படத்தில் ஒரு காட்சியிலாவது நடிக்க வாய்ப்பு கிடைக்காதா? என்று பல நடிகைகள் ஏங்கிக்கொண்டிருக்கும் நிலையில் ரஜினியுடன் ஒரு பாட்டுக்கு நடனம் த்ரிஷா மறுத்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அஞ்சான் எப்போ வரும்??



படத்தில் இரண்டு சூர்யா இல்லை, ஒரே சூர்யா தானாம். தன் நண்பர் வித்யூ ஜம்வாலை கொலை செய்ததற்காக, டானாக இருந்த ராஜு பாய் சாதுவாக மாறி எதிரிகளை பலி வாங்குவது தான் கதை என்று நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றது. இச்செய்தி வெளியே தெரிந்ததால் படக்குழு அதிர்ச்சி மட்டுமில்லாமல் யார் இதை வெளியே சொன்னது என்று கோபத்தில் இருக்கிறது. மேலும் நாம் முன்பே சொன்னது போல் பாஷா படத்தின் சாயலில் தான் படமும் வந்துள்ளது, இதை லிங்குசாமியே ஒரு பேட்டியில் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சினிமுரசு

## சினிமா குறுஞ் செய்திகள்



ராஜபக்சேவின் நண்பர் சுபாஸ்கரன் அல்லிராஜா தயாரிக்கும் கத்தி படத்தில் நடிப்பதன் மூலம் நடிகர் விஜய்யும், கத்தி படத்தை இயக்குவதன் மூலம் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ்/ம் தமிழ் இனத்துக்கே துரோகம் இழைத்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டுக்களோடு, கத்தி படத்துக்கு தொடர்ந்து எதிர்ப்புக் குரல் கொடுத்து வருகின்றர் மாணவர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள்.

திருமணத்திற்கு பின்னர் ஏ.எல்.விஜய் இயக்கும் முதல் படம் இது. இந்த படத்தில் விக்ரம் பிரபுவுக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் என்ற நடிகை நடிக்கவுள்ளார்.

அரிமா நம்பி வெளியாகி ஹிட்டடித்து விட்டதால் உற்சாகமாக இருக்கிறார் ப்ரியா ஆனந்த். அதோடு, இரும்புக் குதிரை, வை ராஜா வை, ஒரு ஊர்ல ரெண்டு ராஜா என நான் நடித்துள்ள 3 படங்கள் அடுத்தடுத்து திரைக்கு வர உள்ளன. அந்த வகையில், நான் சினிமாவுக்கு வந்து இத்தனை ஆண்டுகளில் 2014ம் ஆண்டுதான் எனக்கு சிறப்பான வருடம் என்கிறார்.

பாகிஸ்தானில் பிரபல மாடல் அழகி "ஹுமாய்மா மாலிக் பாகிஸ்தானை சேர்ந்த பிரபல கிரிக்கெட் வீரர் வாசிம் அக்ரம் தான் இவரின் காதலராம், மேலும் இவர் 18 வயதில் திருமணம் முடிந்து விவாகரத்து ஆனவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர் பார்த்தது போலவே தெனாலிராமன் படமும் வடிவேலுவின் நகைச்சுவையும் ரசிகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. தற்போது வடிவேலு மீண்டும் ஒரு புதியபடத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

இசையை தவிர அனிருத் தற்போது சைக்கிள் ஓட்டுவதில் ஆர்வம்காட்டி வருகிறார். இவர் புதியதாக டுகாட்டி சைக்கிளை வாங்கியுள்ளார். ஏற்கனவே டுகாட்டி சைக்கிளை அஜீத் தனது நீண்ட தூர பயணத்திற்கு பயன்படுத்தி வருகிறார். அதேபோல் ஆர்யாவும் மிகாமன் படப்பிடிப்பு தளத்தின்போது உடலை சரியாக வைத்துக் கொள்ள டுகாட்டி சைக்களை உபயோகித்து வருகிறார். இந்த வரிசையில் தற்போது அனிருத்தும் இணைந்துள்ளார்.



"கதையும், கதாபாத்திரமும் பிடித்ததால் தான் இப்படத்தில் நடிக்கிறேன். அதனால் தான் சிம்புவுடன் மீண்டும் இணைந்திருக்கிறேன். உடன் நடிப்பதால் அவரிடம் பேசுகிறேன். மற்றபடி மீண்டும் சிம்புவுடன் எனக்கு காதல் வருவதற்கு சான்சே இல்லை" என்று கோபமாக கூறியுள்ளார்.

நிச்சயதார்த்தத்திற்கும் திருமணத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒருவருக்கொருவர் பழகி தங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை தீர்த்துக்கொள்ளும் திரைக்கதையுடன் உருவாகி வருகிறது 'கபடம்' திரைப்படம்.

தமிழ் சினிமாவில் தன் சாதனையை தானே முறியடிப்பவர் ரஜினி. ரஜினி நடித்த "சிவாஜி" திரைப்படம் சென்னையில் 18 திரையரங்குகளில் ரிலிஸ் ஆகின, தற்போது "அஞ்சான்" படம் 37 திரையரங்குகளில் வெளிவருகிறது.

## அனுபவம் பேசுது



பி.கே என்ற படத்தில் இவர் நிர்வாணமாக போஸ் கொடுத்திருக்கும் போஸ்டர்தான் இப்போது இந்தியா முழுக்க பரபரப்பை ஏற்படுத்தி விட்டுள்ளது. அதையடுத்து இந்த படத்தை பார்க்கும்போது அப்படியொரு காட்சி தேவைதான் என ரசிகர்களே சொல்வார்கள் என்று அமீர்கான் ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார். இருப்பினும், அதற்கு எதிர்ப்பு, ஆதரவு இரண்டும் மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில், அமீர்கானுடன் ரங் தே பஸந்தி என்ற இந்தி படத்தில் இணைந்து நடித்த தமிழ் நடிகரான சித்தார்த் அதுபற்றி தனது கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில், நிர்வாணமாக நடிப்பது ஒரு கலை. அதை தப்பான கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடாது. மேலும், ஒரு படத்தின் போஸ்டரைப் பார்ததே அது ஆபாசமான படம் என்று சித்தரித்து விடக்கூடாது என்றுள்ளார்.

## பிரபுவுடன் இணைகிறார்



நெனோகடைன் எனும் தெலுங்கு படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை கிருத்தி சனோன். பிறகு இந்தி சினிமாவிற்கு சென்றவர் அடுத்தப்படியாக பிரபுதேவா அக்ஷ்ய் குமார் இணையும் 'சிங் இஸ் பிளிங்' எனும் படத்தில் நடிக்க கமிட்டாகியுள்ளார். இப்படம் அதிரடி ஆக்ஷன் மற்றும் காமெடி படமாக உருவாக இருக்கிறது. இந்நிலையில், இப்படத்திற்காக தீவிர நடன பயிற்சியில் இறங்கி இருக்கிறார் கிருத்தி சனோன்.

திரை விமர்சனம்

## அருண்மோகனின் சரபம்



பிரபல தொழிலதிபர் நரேனிடம் சாப்ட்வேர் தொழில்நுட்பம் குறித்த ஒரு புராஜக்டை நாயகன் நவீன் சந்திரா விளக்குகிறார். ஆனால் கஷ்டப்பட்டு தயார் செய்த புராஜக்டை நரேன் ஒருசில காரணங்கள் கூறி நிராகரித்துவிடுகிறார். இதனால் நவீன்சந்திரான் நரேன் மீது கோபம் அடைந்து பழிதீர்க்க முடிவு செய்கிறார்.

இதனிடையே தொழிலதிபர் நரேனின் மகள் சலோனியை தற்செயலாக சந்திக்கும் நவீன், சலோனி போதை மருந்துக்கு அடிமையானவர் என்பதையும், சலோனிக்கும் அதிகளவு பணம் தேவை என்பதும் தெரியவருகிறது

அதன்பின்னர் நவீன் சந்திராவும், சலோனியும் திட்டமிட்டு சலோனியின் தந்தையிடம் இருந்து பணம் கறக்க முடிவு செய்கின்றனர். ஓரே மகள் சலோனியை கடத்திவிட்டதாகவும், அதனால் ரூ.30 கோடி கொடுக்கவேண்டும் என்றும் நரேனை மிரட்டுகின்றனர்.

மகள் கிடைத்தால் போதுமென நரேன் ரூ.30 கோடியை கொடுத்துவிடுகிறார். தன்னுடைய பங்குப்பணத்தை வாங்கிக்கொண்டு சலோனி வீட்டுக்கு செல்கிறார். மறுநாள் யாருக்கும் தெரியாமல் வெளிநாட்டுக்கு சென்றுவிட சலோனி திட்டமிடுகிறார். இந்நிலையில் மறுநாள் காலை கடற்கரையில் சலோனி கொல்லப்பட்டு இருப்பதாக நவீன் சந்திராவுக்கு தெரிய வருகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த நவீன் சந்திரா என்ன நடந்திருக்கும் என யோசித்துக்கொண்டிருக்கும்போது திடீரென நரேனும், சலோனியும் நவீன் சந்திரா முன் தோன்றுகின்றனர். இறந்த சலோனி எப்படி உயிரோடு வந்தார்? என்பது யாரும் எதிர்பாராத சஸ்பென்ஸ்?

பெரும்பாலான படங்களில் கிராமத்து பெரியவர் மற்றும் வில்லனாக வந்த நரேன், இந்த படத்தில் தொழிலதிபராக கோட், சூட்டுடன் வித்தியாசமாக வருகிறார். இவருக்கு கொடுத்த கேரக்டரை நன்றாக செய்துள்ளார். இடைவேளை வரை விறுவிறுப்பாக படத்தை கொண்டு சென்ற இயக்குனர் இடைவேளைக்கு பின்னர் திடுக்கிடும் திருப்பங்களை அதிகம் வைத்துள்ளார். நான்கே கதாபாத்திரங்கள்தான் படத்தில் இருக்கின்றது என்றாலும் திரைக்கதையில் ஏகப்பட்ட குழப்பம்.

மொத்தத்தில் சரபம் சலிப்பைத்தான் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுக்கடியிலும் 'கேம்'



நீரிற்கு அடியில் இருக்கும் போதும் கேம் விளையாடி மகிழக் கூடிய புதிய அப்பிளிக்கேஷன் ஒன்றினை சோனி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. நீர் உட்புகாத ஸ்மாட் கைப்பேசிகளுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த அப்பிளிக்கேஷனினை Sony Xperia ஸ்மாட் கைப்பேசி போன்றவற்றிலும் பயன்படுத்த முடியும். இந்த அப்பிளிக்கேஷன் ஆனது கேம் பிரியர்களுக்கு புதிய அனுபவத்தினை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரேஸ்லெட்டில் தொடுதிரை



ஸ்மாட் கைக்கடிகார உற்பத்தியில் பல்வேறு நிறுவனங்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில் தற்போது Elemoon எனும் நிறுவனம் புதிய ஸ்டைலை வழங்கக்கூடிய ஸ்மாட் பிரேஸ்லெட்டினை வடிவமைத்துள்ளது. இதில் தொடுதிரைத் தொழில்நுட்பம், சென்சார் என்பன காணப்படுவதுடன் LED மின்குமிழ்கள் மூலமாக அறிவிப்புக்களை வழங்கக்கூடியதாக காணப்படுகின்றது. இச்சாதனமானது தற்போது விளம்பரப்படுத்தல் மற்றும்

# விளையாட்டுப் பையன்

## Chromebook 13

Acer நிறுவனம் தனது புத்தம் புதிய மடிக்கணனியான Chromebook 13 Tegra K1 இனை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்துள்ளது. 13 அங்குல அளவு, 1366 x 768 Pixel Resolution உடைய திரையினைக் கொண்டுள்ள இம் மடிக்கணனியானது பிரதான நினைவகமாக 2GB RAM மற்றும் 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது. தொடர்ச்சியாக 11 மணித்தியாலங்கள் மின்னை வழங்கக்கூடிய மின்கலத்தினை கொண்டுள்ளது. மேலும் 2 x USB 3.0 Ports, Bluetooth 4.0, HDMI Port, SD Card Slot ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ள இக்கணனியின் விலையானது 279 டொலர்கள் ஆகும்.




கூகுள் நிறுவனம் கடலடி இணைப்பினூடான இணைய வேகத்தினை அதிகரிக்கும் திட்டத்தை செயற்படுத்த தயாராகி வருகின்றது. இதன் முதற்கட்டமாக அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான கடலடி இணைய இணைப்பின் வேகத்தினை அதிகரிக்கவுள்ளது. இதற்காக 6 பைபர் ஒப்டிக்கல் கேபிள்களை பயன்படுத்தி 60Tbps வேகம் கொண்ட இணைய இணைப்பினை வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்செயற்திட்டத்தில் China Mobile International, China Telecom Global, Global Transit, KDDI, மற்றும் Singte ஆகிய நிறுவனங்கள் கூகுளுடன் இணைந்து பணியாற்றவுள்ளன.

## நிற மாற்ற வைரஸ்

பேஸ்புக் கணக்கு பக்கத்தில் நிறத்தை (Colour Scheme) மாற்ற முயற்சித்திருப்பின் அதை உடனடியாக கருவியிலிருந்து நீக்கிவிடவும். இதன் மூலம் புதிய வைரஸ் உலா வந்து கொண்டிருக்கிறது, உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 10,000 பேரின் பேஸ்புக் கணக்குகள் பாதிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்த வைரஸ், பயனீட்டாளர்கள் தங்களது கணக்கின் நிறத்தை மாற்றமுடியும் என்ற செய்தியுடன் இருக்கும் செயலியின் விளம்பரமாக தொடங்குகிறது. இதனை பதிவிறக்கம் செய்தபின், வைரஸுடன் கூடிய வலைதளத்திற்கு திசை திருப்பப்படுகிறது.



கணக்கில் எப்படி நிறம் மாற்றுவது என்பதை விளக்கும் வீடியோவைப் பார்க்குமாறு கூறும் இந்த வலைதளம், பயனீட்டாளர்களின் கணக்கையும், பயன்பாட்டையும் திருடுகிறது. ஒருவேளை பயனீட்டாளர் இந்த வீடியோவை பார்க்கவில்லையெனில், இந்த வலைதளம் அவர்களை வைரஸுடன் கூடிய செயலியைப் பதிவிறக்கம் செய்யுமாறு தெரிவிக்கிறது. இந்த செயலியை நீங்கள் பதிவிறக்கம் செய்திருந்தால் அழித்துவிட்டு, பேஸ்புக்கின் பாஸ்வோர்ட்டை மாற்றவும் என்று சீனாவில் இணையம் நிறுவனமான சீட்டா மொபைல் தகவல் வெளியிட்டுள்ளது.

## வைரஸ் அபாயம்




கணனியை வைரஸ் தாக்கியவுடனே, கணனியின் செயல்பாடுகள் படிப்படியாக முடக்கப்படும். நம் தனிப்பட்ட தகவல்கள் திருடப்பட்டு, வைரஸ் புரோகிராமினை அனுப்பிய சர்வருக்கு அவை கொண்டு செல்லப்பட்டு இறுதியில் மொத்தமாக முடக்கப்படும்.

பயன்படுத்தும் ஆண்ட்டி மால்வேர் புரோகிராம்களும் இதனையே செய்கின்றன. சிஸ்டம் வழக்கத்திற்கு மாறான வழிகளில் செயல்படுகிறதா (heuristics) என்பதனைக் கண்காணிக்கின்றன. முற்றிலும் மாறான இயக்க வழிகள் தென்படுகையில், இந்த ஆண்ட்டி மால்வேர் புரோகிராம்கள் இயங்கி, புதிதாக வந்திருக்கும் மால்வேர் புரோகிராமின் தன்மை, செயல்பாடு ஆகியவற்றைக் கண்டறிந்து நமக்கு தகவல் தருகின்றன.

அதாவது பாதுகாப்பு வழிகளை எப்படி தகர்த்தன என்று அறிந்து, அதற்கான புதிய பாதுகாப்பு வளையங்களை "பேட்ச் பைல்" என்ற பெயரில் நமக்குத் தரப்படுகின்றன. இந்த வழக்கத்திற்கு மாறான இயக்க செயல்பாடுகளே, நமக்கு நமது கணனியில் மால்வேர் அல்லது வைரஸ் புரோகிராம்கள் இயங்கத் தொடங்கியுள்ளன என்பதற்கான அறிகுறிகள்.

## புதிய Galaxy Alpha



சம்சுங் நிறுவனம் தனது புதிய ஸ்மாட் கைப்பேசியான Galaxy Alpha இனை அறிமுகம் செய்வது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளது. 4.7 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution உடைய HD தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது 1.8Ghz வேகத்தில் செயற்படக்கூடிய 8 Core Processor, 1.3GHz வேகத்தில் செயற்படக்கூடிய Quad Core Processor ஆகியவற்றினை ஒருங்கே கொண்டுள்ளது. இவை தவிர 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2.1 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

# ஒரு கொலையின் கதை

3-3 மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

கடந்த வாரம் ......

அந்த முகவரின் பெயர் வந்திரன்.... அவரது வர்த்தக நிலையத்தின் முகவரி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது....

புலனாய்வாளர்களுக்குப் புதியதோர் சாட்சி அங்கு கிடைத்தது.

.........................................................................

உடனடியாகவே அந்த சாட்சியை நோக்கிக் கழுகுகள் பறக்கத் தொடங்கின....

காலம் தனது வேலையைச் செய்தது.....

தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்பு 6 பகுதியில் வந்திரனின் அலுவலகமும் வீடும் அமைந்திருந்தது. அவரின் வீட்டு அழைப்பு மணியை இரண்டு "டிப்டொப்" ஆசாமிகள் அளுத்தினர்.....

மனங்கவர் இசையுடன் கூடிய அழைப்பு மணியை விட அந்த அழைப்பு மணிச்சத்தத்தால் அதிர்ச்சியடைந்த பொமினேரியன் நாய்க்குட்டியின் குரல் அபஸ்வரமாக ஒலித்தது.....

கதவின் முகம் பார்க்கும் இடுக்கின் ஊடே வயதான மனிதர் ஒருவரின் முகம் சற்று வெறுப்பாகத் தெரிந்தது.... பொருட்களை விற்வ வருபவர்களின் அழைப்பாக இருக்கலாமோ... என்பதாலேயே அந்த முகத்தில் அருவருப்பு வரைந்திருந்தன கோடுகள்....

"என்ன வேணும்...." என்ற அவரது காட்டமான குரலின் முதல்பாதியிலிருந்த அழுத்தம் இவர்கள் இருவரினதும் "டிப்டொப்பால்" பின்பாதியில் கலைந்து போனது.... அவர்கள் இருவரும் எதையும் பேசாமல் இருக்க ஒருவர் தனது அடையாளத்தை அவருக்கு உறுதிப்படுத்தினார்.

கதவு அகலத் திறந்தது......

" சொல்லுங்கோ வந்திரன்..... " அவர்கள் இருவரும் அந்த வீட்டின் வரவேற்பறையில் இருந்த சொகுசு




சோபாவில் தங்களது உடலைப் புதைத்துக்கொண்டு அவருடன் பேசத் தொடங்கினர்.

குரலில் கடுமையிருந்தாலும் குழந்தைத்தனமான பண்பைக் கொண்டிருந்த அந்த மனிதர் பீர்வாங்கத் தகவல்களான 57 வயது, திருமணமான இந்து, குழந்தை................ போன்ற பூர்வாங்க விடயங்களைக் கூறிய பின்னரே புலனாய்வாளர்கள் "சொல்லுங்கோ வந்திரன்" என்ற ஆத்தம் பொதிந்த கேள்வியை அவரை நோக்கி எறிந்தனர்...... தனக்குத் தெரிந்தவற்றை அவர் கொட்டத் தொடங்கினார்.

" ஹிம்சா எனது உறவினர். அவர் லண்டனுக்குச் சென்றது முதல் என் மூலமாகவே பணக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்து வந்தார். ஹிம்சா, கேதீஸ் அவர்களின் மனைவி என்பதும் எனக்குத் தெரியும்.

ஹிம்சா எனக்கு மார்ச் மாதம் 22ம் திகதி தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார். சுகநல விசாரிப்புக்களின் பின்னர் தான் ஒரு தொகைப் பணத்தை இங்கு கொடுக்க வேண்டியிருப்பதால் அத்தொகையை கொடுக்க முடியுமா எனக் கேட்டார். நான் அவ்வளவு தொகையைக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டேன். அதற்கு அவர் 1750 பவுண்களை தான் பணிக்கும் நபருக்குக் கொடுக்கும் படிக் கூறினார்.

அன்றைய தினத்தின் பரிமாற்று விகிதப்படி 1750 பவுண்களுக்கு 355,250 ரூபாவைச் செலுத்த வேண்டியிருக்கும் எனக் கூறினேன். அதற்கு அவரும் ஒப்புதலளித்தார்.

அத்துடன் அவாது தொடர்பாடலை முடித்துக் கொண்டேன்....

பின்னர் சில மணித்தியாலங்களின் பின் தொடர்பு கொண்ட அவர் பணத்தை வங்கியிலிட முடியுமா எனக் கேட்டார். நான் அதற்கு ஒப்புக்கொண்டதை அடுத்து மக்கள் வங்கிக்குரிய கணக்கிலக்க மொன்றை எனக்கு அனுப்பி வைத்தார். அவ்விலக்கம் குமாரி என்பவருடையதாக இருந்தது.

23ம் திகதி நான் அத் தொகையை வங்கியில் வைப்பிலிட்டேன். நான் 150,250 ரூபாவையும் எனது உதவியாளரான குமார் எஞ்சிய 205,000 ரூபாவையும் வைப்பிலிட்டோம். எனக்குச் சேர வேண்டிய தொகையை எனது உறவினர் இலண்டனில் வசிப்பதால் அவரிடம் அத்தொகையைக் கொடுக்கச் சொன்னேன். ஹிம்சா அதனைச் செலுத்தியதைப் பின்னர் உறுதிப்படுத்திக் கொண்டேன்"

அவர் ஒரே மூச்சில் இவ்வளவற்றையும் சொல்லிவிட்டு அவர்களை நிமிர்ந்து பார்த்தார். அருகே அவரது பொமினேரியனும் இவர்களைப் பார்த்துக்கொண்டே இருந்தது......

புலனாய்வாளர்கள் இருவரும் அவர் சொன்னதைக் கிரகித்துக் கொள்ள சில நிமிடங்களைக் கரைத்தார்கள்....

"உங்களுடைய உதவியாளர் எங்கே?...."

" அவர் வர்த்தக விடயமாக வெளியே சென்றிருக்கின்றார்..... " ... " அவரைஅலைபேசியில் கூப்பிடுங்கள்..." என்றவாறே அடுத்த கேள்வியொன்றை அவர் மீது புலனாய்வாளர்கள் வீசினர்... அந்த கேள்வி...

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் -14




# குழுவும் குரோதமும் கோஷ்டியும் மோதலும்

தேசிய பாடசாலை ஒன்றில் உயர்வகுப்பு படிக்கும் அயல் வீட்டு சிறுமி ஒருத்தி காலை விடிந்தும் விடியாததுமாக என்னிடம் ஓடி வந்தாள்' அங்கிள் இப்போதெல்லாம் உலகில் அடாவடித்தனங்கள் மிகவும் அதிகரித்திருப்பதற்கு காரணமானவர்கள் யார்?' என்று அக்கறையுடனும் ஆவலுடனும் கேட்டாள். அவளது கற்கை நெறிக்கு என்னிடம் இருந்து சில தகவல்களை அவள் எதிர்பார்த்திருக்கலாம். எனவே பொறுப்புடன் பதில் கூறினேன். 'குழுக்கள், கோஷ்டிகள், கும்பல்கள்! அவை பற்றிய விளக்கத்தையும் கூறினேன்.

இம் மூன்று சொற்களுமே மக்கள் குழுக்களையே சார்ந்ததாயினும் இவற்றுக்கிடையே பாரிய வித்தியாசம் இருக்கின்றது. "குழு" என்பது குறிப்பிட்டதொரு நல்ல நோக்கத்திற்காக அமைக்கப்பட்டு செயல்படுவதுடன் நோக்கம் பூர்த்தியானதும் கலைந்துவிடும். 'Team', 'Committee', 'Group' ஆகிய ஆங்கில சொற்கள் அதன் பொருளை நன்கு விளக்கவல்லது. நடைமுறையில், விளையாட்டு வீரர்கள் கொண்ட குழு 'Team' என்றும் சங்கங்கள் சார்ந்த நிர்வாக குழு 'committee' என்றும் பாடசாலையில் விளையாட்டு போட்டியில் மாணவர்களை பிரிப்பதானது 'group' என்றும் குறிப்பிடலாம். தமிழ் மொழியில் அனைத்துமே குழுக்கள்தான். இந்த குழுக்கள் நல்ல எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்டாலும் இவற்றுக்கிடையே நிலவும் குரோதம், பகை, பழிவாங்கும் உணர்வு ஆகியன சகிக்க ஒண்ணாதவை!

அண்மையில் நடந்த உலக கால்பந்தாட்ட போட்டியில் ஒரு வீரர் மற்றொரு வீரரை தனது பற்களால் கடித்து குதறியமையை எவரும் மறக்க முடியாது! அதே போன்று சங்கங்கள், அலுவலகங்கள், கல்லூரிகளில் குழுக்கள் செய்யும் அட்டகாசங்களால் பலர் படுகாயமடைவதும் உயிராபத்துக்கள் நிகழ்வதும் தவிர்க்க முடியாதபடி உள்ளன!

இனி, 'கோஷ்டி' என்பது, அந்நாட்களில் தெட்சணமூர்த்தி (தவில்) கோஷ்டி, இராசரத்தினம் கோஷ்டி (நாதஸ்வரம்) இன்னமும் பற்பல சின்னமேள கோஷ்டிகள் பற்றி பேசப்பட்டதனை நாம் அறிவோம். அவையாவும் கோயில் திருவிழாக்களில் கொடிகட்டிப்பறந்தவை! மக்களின் இரசனைக்கும் அன்புக்கும் பாத்திரமானவை!

ஆனால் இந்நாட்களில் கோஷ்டி என்ற சொல் தரும் பொருள், திருட்டு, போதைபொருள், பாலியல் வல்லுறவு, பழிவாங்கல் ஆகிய நோக்கங்களுக்காக சில அல்லது பல தறுதலைகள் இணைந்து செயற்படுமிடத்து அவர்களை ஒரு கோஷ்டி என ஊடகங்கள் அடையாளப்படுத்துகின்றன. சில மாதங்கள் முன்னர் யாழ்ப்பாணத்தில் பெண் ஒருவரின் தலைமையில் கொள்ளைக்கோஷ்டி ஒன்று நகரையே கலக்கியடித்தது. ஊடகங்களால் குறிப்பிடப்படும் அப்படியான கோஷ்டிகளுக்கு கொள்கை எதுவும் கிடையாது. அவர்கள் எதற்கும் துணிவார்கள். இலங்கையில் பாதாள கோஷ்டியினர் மிகவும் பிரபல்யம் பெற்றவர்கள். அரசியல் வாதிகள் சிலர் அவர்களுக்கு பணம் கொடுத்து தமது அட்டூழியங்களை நிறைவேற்றும் அடியாட்களாக பயன்படுத்தினார்கள் என்றால் பாருங்களேன்.

அதே போன்று கனடா, பிரான்ஸ், சுவிஸ், இலண்டன் மற்றும் எமது இளைஞர்கள் தொழில்புரியும் பல நாடுகளில் பல கோஷ்டிகள் எம்மவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. எமது இளைஞர்கள் அவற்றை தமக்கு பெருமை சேர்ப்பன என்று கருதுவதுதான் பெரிய வேடிக்கை! திருட்டு, வெட்டுக்கொத்து, பாலியல் வல்லுறவு, போதைப் பொருள் பாவனை என்பவற்றுக்காக எல்லாம் அக்கோஷ்டிகள் எப்படி பாடுபட்டு உழைக்கின்றன என்பதை இணையதளம் நன்கு புட்டு வைக்கின்றது. எனது முகநூலில் 05.08.2014 இல் ஒரு குறும் திரைப்படம் பார்த்தேன். தனது நீண்ட நாள் காதலியின் மனதை மாற்றிய ஒரு கோஷ்டி தலைவனை பழிவாங்க மற்றொரு கோஷ்டி தலைவன் நிறைவெறியில் செல்கிறான். நண்பன் தடுத்தும் கேட்கவில்லை. முடிவு பழிவாங்க சென்றவர்களே கொலையுண்டு போயினர்.

இறுதியாக கும்பல் என்ற சொல்லை பார்ப்போம் கும்பல் என்பது ஒரு இனத்தை அல்லது மதத்தை அடையாளப்படுத்தும் மக்கள் கூட்டம் என எடுக்கலாம் இதற்கு எந்தவித ஸ்தாபன விதிகளும் கிடையாது. உணர்வுகளுக்கு தீனி கிடைத்தால் இது விஸ்வரூபம் எடுத்துவிடும். கட்டுப்பாடுகள் விதிமுறைகள் என்பவற்றுக்கு பணியாத தான்தோன்றித் தனமான செயற்பாடே அதன் இலக்கு. உடைத்தல் வெட்டுதல், நொறுக்குதல், தீவைத்தல், கொலை செய்தல் சொத்துக்களை அபகரித்தல் ஆகிய அழிவு வேலைகளை தமது சிரம் மேற்கொண்டு நிறைவேற்றுவர். அவ்வகையில் அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டு விட்டால் கோஷமிட்டபடி கலைந்து செல்வர். அண்மையில் பேருவளை பகுதி நிகழ்வுகள் கும்பலின் கைவண்ணம் தான்.

நான் தினமுரசு வாரமலருக்கு கதைகளும் கட்டுரைகளும் எழுதிக்கொண்டிருந்த கால கட்டம், எனது இல்லம் ஒரு சிங்கள கிராமத்துக்கும். தமிழ் கிராமத்துக்கும் நடுவே வீதியோரம் இருந்தது. காலையில் எழுந்தால் ஒரு தரப்பு ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுக்கும், மறுதரப்பு அதற்கு எதிராக கும்பலாக திரண்டுவிடும். ஒரு தினம் காலை எழுந்து பார்த்த போது பூரண ஹர்த்தாலுக்கான ஏற்பாடு என கூறிக்கொண்டு ஒரு கும்பல் தெரு அடங்கலும் கண்ணாடித் துண்டுகளை பரப்பி போக்குவரத்துக்கு தடையை ஏற்படுத்தியிருந்தனர். அதனை மீறுவதற்கு தயாராக மறுபக்கத்தில் மக்கள் கும்பலாக திரண்டிருந்தனர். மனைவி பிள்ளைகள் இருவருடன் வீட்டை விட்டு மாறிவிடலாமா என்று முடிவு எடுப்பதற்குள் வெடிச்சத்தங்களும் போத்தல் கல்லு பெற்றோல் குண்டுவீச்சுக்களும் ஆரம்பித்து விட்டன. குழியலறை ஒன்றே பாதுகாப்பாக இருந்தது. அப்போது எழுத்தாளர் திருக்கோவில் கவியுகன் தினமுரசு பத்திரிக்கை காரியாலயத்தில் இருந்தார் அடிக்கடி தொலைபேசியில் எனது நிலை பற்றி கேட்டறிந்து அனுதாபங்களை தெரிவித்தார். வீறாப்புடன் நின்ற ஒருபக்க கும்பலை விரட்ட பொலிஸார் எழுபதிற்கு மேற்பட்ட கண்ணீர் புகைக்குண்டுக்களை ஏவினர். அதுவே இலங்கையில் ஒரு கும்பலை விரட்டுவதற்காக ஒரே நேரத்தில் வீசப்பட்ட அதிக அளவிலான புகைக்குண்டுகளாகும் !

# குறுக்கெழுத்து புதிர் 022

முடிவுத் திகதி : 22.08.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 12 | டா | ■ | ■ |
| | ■ | ■ | 13 | ■ | 2 | | | |
| 3 | | 14 | | | 4 | | 15 கா | |
| 5 | | | | | | ■ | | ■ |
| | ■ | 6 பு | | | | | 7 | |
| 8 | | | ■ | 16 ட | ■ | 9 | | 17 |
| | ■ | | ■ | | 18 க | ■ | | |
| 10 | | தா | | | | | | |
| | ■ | | ■ | ■ | | | 11 | |

## இடமிருந்து வலமாக

1. கிழக்கில் கடல் விளையாட்டுக்குப் பிரசித்தமான குடா
2. சூர்யாவின் கடைசிப் படம் (குழம்பியுள்ளது)
3. வைத்தியம் செய்பவர்
4. படகை ஓட்டும் வலுக் கொண்டது
5. சடலங்களை வைப்பது
6. பரோபகாரி
7. துள்ளியோடும் காட்டு மிருகம்
8. முகம்சுழிப்பவர் (குழம்பியுள்ளது)
9. முற்பிறப்பில் செய்த வினை
10. சுயம்பு சிவனைக் குறிக்குச் சொல் (குழம்பியுள்ளது.)
11. யானைக்குப் பிடிக்கும்

## மேலிருந்து கீழாக

1. கமல்ஹாசனின் அர்த்தநாரீஸ்வரப் படம்
10. உப்புமா என்ற உணவுப்பொருளின் மூலப்பொருள்
12. கோழியின் குழந்தை
13. அனைவருக்கும் இருக்கும் இது கீழிருந்து மேலாக உள்ளது
14. பிரபலமான இந்திய சுல்தான்களில் ஒருவர்
15. மூலதனம் என்ற புத்தகம் வரைந்த பொருளாதாரத் தத்துவவாதி
16. மலேசியாவில் மதிப்பிற்குரிய வார்த்தையாக பெயர்களின் முன்னே பரம்பரைச் சொல்
17. மகளிராகப் பிறக்க இதைச் செய்திருக்க வேண்டும்
18. இளநங்கை

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159஗,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 020 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | த் | 14 தி | ■ | ■ | 2 த | 15 டா | 16 க | ம் |
| ■ | 3 தா | ட | 17 கை | 4 க | ட | ப் | பா | 18 றை |
| 5 கை | ரி | கா | தி | ரி | ய | சி | ல | க |
| கே | 6 ச | த் | 19 தி | ■ | ம் | ■ | ம் | ■ |
| யி | ப் | 7 தி | மி | சு | ■ | 8 அ | 20 சூ | சை |
| ■ | பி | ர | ர் | ■ | 9 அ | ட் | டு | று |
| 10 சி | 21 வ | ம் | ■ | 22 டா | தி | 11 ச | ர | ம் |
| ■ | 12 ட | ச் | சு | க் | கா | ர | ன் | ■ |
| 13 ச | ம் | ப | ல் | கா | ரி | ம் | ■ | ■ |

## பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

*செல்வி. ஜெ. ஜோயலா*
*இல. 36, கஸ்டம்ஸ் வீதி, திருகோணமலை.*

*திருமதி. ச. சறோஜாதேவி*
*[illegible] கண்டிவீதி, திருகோணமலை.*

*செல்வி. [illegible]*
*12/2, புதிய சோனகத்தெரு, திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய SMS செய்திகள்

- **யானைக் குட்டியைக் கடத்திய இருவருக்கும் விளக்கமறியல்**

மூன்று வயது யானைக்குட்டியொன்றை லொறியொன்றில் கடத்த முற்பட்டபோது, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கமாறு மாத்தளை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

- **12 வயது சிறுமி - 75 வயது தாத்தா**

12 வயதான சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய 75 வயதுடைய வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொடவெஹெர பொலிஸார் தெரிவித்தனர்.

- **மனைவியுடன் காதல் தொடர்பு வைத்திருந்த நபர் கொலை**

சந்தேக நபரின் மனைவிக்கும் உயிரிழந்த நபருக்குமிடையில் காதல் தொடர்பு இருந்ததாகவும் அதனாலேயே குறித்த இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

- **பாப்பரசரின் வருகை! பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் மன்னார் ஆயர்**

பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி மன்னார் மடுவிற்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில் பாப்பரசரின் வருகையை முன்னிட்டு மடுப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் உரையாடப்பட்டுள்ளது.

- **பாலஸ்தீனத்துக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி**

பாலஸ்தீனத்துக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ' அறிவித்துள்ளார்.

- **யாரால் கொல்லப்பட்டார்கள் என்பதை ஆணையாளரே வெளியிட வேண்டும்**

காணாமற்போனவர்கள் மரணித்துவிட்டார்கள் என ஆணையாளர் கூறுவாறாயின் அவர்கள் எவ்வாறு, யாரால் கொல்லப்பட்டார்கள் என்பதையும் இந்த விசாரணைக்குழு எதற்கு என்பதனையும் ஆணையாளர் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

- **பதுளை மாவட்டத்தில் அடையாள அட்டை இல்லை**

பதுளை மாவட்ட வாக்காளர் இடாப்பில் உள்ள 40,350 பேரது தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் பதியப்படவில்லை எனவும் 30,000 பேருக்கு அடையாள அட்டை எதுவும் இல்லை எனும் கபே அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

- **கல்வி அமைச்சரின் பயமுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை**

கல்வி அமைச்சரின் பயமுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. பந்துல குணவர்த்தனவிற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்போம் என ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக அறிவித்துள்ளன.

- **பிக்குவின் ஜீப் வண்டியை கொளுத்தியவருக்கு விளக்கமறியல்**

பௌத்த மதகுரு ஒருவருக்குச் சொந்தமான 30 இலட்ச ரூபா பெறுமதியான ஜீப் வண்டியை தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் தொடர்பாக விகாரையின்உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கட்டுள்ளார்.

- **மது போதையில் வீதியில் விழுந்து கிடந்த பல்கலை விரிவுரையாளர்**

அதிகமாக குடித்துவிட்டு கீழே விழுந்து கிடந்த ருகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார். 119 என்ற அவசர இலக்கத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், மாத்தறை - ஜம்புகஹவத்தை - மெதவத்த பிரதேசத்திலுள்ள வீடொன்றின் முன் விழுந்து கிடந்த இவரை மீட்ட பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

- **மோட்டார் சைக்கிள் திருடன் மடக்கி பிடிப்பு**

அக்கரைப்பற்று இசங்காணிச்சீமை எனும் இடத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை எட்டு மணியளவில் நிறுத்தி வைக்கப்பட்ட பல்சர் மோட்டார் சைக்கிளை திருடி செல்ல ஆயத்தமான திருடனை பொதுமக்கள் சேர்ந்து மடக்கி பிடித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

- **பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டிருந்தால் பட்டியலிடப்படும்**

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர் என ஒருவர் அடையாளம் காணப்பட்டால் உரிய ஆதாரங்களின் பிரதிகளும் அவரின் பெயர் விபரமும் தடைப்பட்டியலில் உள்ளடக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மைய பணிப்பாளருமான பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.




# பப்பாளியின் மகத்துவம்

நிறைய பேருக்கு பப்பாளிப் பழத்தின் வாசனை பிடிக்காது, ஆனால் அப்பழத்தில் அதிகமான அளவு சத்துக்கள் நிறைந்துள்ளன. பப்பாளியில் அளவுக்கு அதிகமான ஆன்டி-ஆக்ஸிடன்ட், விட்டமின் ஏ,சி மற்றும் ஈ இருக்கிறது. இத்தகைய அதிகமான அளவு ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் இருப்பதால், அவை உடலில் இருக்கும் கொலஸ்ட்ராலை கரைக்கின்றன.

பப்பாளியில் இருக்கும் நொதிப்பொருள் மற்றும் நார்ச்சத்துக்கள், குடல் இயக்கத்தை சரியாக இயக்குவதால் செரிமானம் எளிதில் நடைபெற்று மலச்சிக்கலும் குணமாகிறது. பப்பாளியில் உடலில் ஏற்படும் அலர்ஜியை எதிர்த்து போராடும் பண்புகள் இருக்கின்றன. அதனால் தான் உடலில் எரிச்சல் அல்லது புண் இருந்தால் பப்பாளியை சாப்பிடுகின்றனர். கடுமையான காய்ச்சலைக் குணப்படுத்த உதவும் பப்பாளி இலை கஷாயம் இதய நோயாளிகளுக்கும் நல்லது. முக்கியமாக அடிக்கடி இதயத் துடிப்பு அதிகரிப்பதால் அவதிப்படும் நோயாளிகளுக்கு பப்பாளி இலை கஷாயம் சிறந்த பலனளிக்கும்.

பப்பாளி இலை கஷாயம் நோயாளியை அமைதிப்படுத்தி, இதயத்துடிப்பைக் குறைத்து நிவாரணம் அளிக்கிறது. இதய நோயாளிகளுக்கு நன்றாக முற்றி பழுத்த பப்பாளிப் பழம் மிகச் சிறந்த உணவாகும். காலை உணவாக பப்பாளிப் பழத்தை மட்டுமே சாப்பிடலாம். மாலையில் தேநீர் வேளையிலும் பப்பாளிப் பழம் சாப்பிடலாம். ஆனால் இரவில் பப்பாளிப் பழம் சாப்பிடக் கூடாது.

தயாரிப்பது எப்படி?

- நிழலில் உலர்த்தப்பட்ட பப்பாளி இலையில் சுமார் 5 கிராம் முதல் 10 கிராம் வரை எடுத்துக் கொள்ளவும். அதை ஒரு கோப்பை வெந்நீரில் போட்டு 5 நிமிடங்களுக்கு நன்றாக ஊற விடவும்.
- பின்னர் வடிகட்டி அந்த கஷாயத்தை நோயாளிகளுக்குக் குடிக்க கொடுக்கவும்.



இந்த சிகிச்சையினால் நோயாளியின் உடல் வெப்ப நிலை தணியும். நாடித் துடிப்பின் வேகமும் குறையும். மேலும், பப்பாளியில் இருக்கும் போலேட், வைட்டமின் சி, பீட்டா-கரோட்டீன் மற்றும் வைட்டமின் ஈ ஆகியவையும் புற்றுநோய் உண்டாக்குவதை தடுக்கும் சத்துக்களாகும். அதில் கலோரிகள் குறைவாக இருப்பதால், இந்த பழம் டயட் மேற்கொள்வோருக்கு மிகவும் சிறந்தது. ஆகவே பப்பாளிப் பழத்தை தினமும் ஒரு துண்டாவது சாப்பிடுங்க! நல்லா பிட்டா ஆரோக்கியமா இருங்க!

# மசாலாவில் உள்ள சத்துக்கள்

நாம் அன்றாட சமையலுக்கு பொதுவாக பயன்படுத்தக்கூடிய மசாலாக்கள் உணவில் சுவை கூட்டுவதாகவும், போஷாக்கு நிறைந்த உணவாகவும் கருதப்படுகிறது. அதில் சில மசாலா பொருட்களின் மருத்துவ குணங்கள் இதோ,



### கொத்தமல்லி

உண்மையாகவே சமையலுக்கு சிறந்த நண்பனாக உதவி புரிவது கொத்தமல்லி விதைகள். இதை சமையலில் தனியாக பயன்படுத்தாமல் மசாலா பொருட்களுடன் சேர்த்து பயன்படுத்துகின்றனர். கொத்தமல்லி விதைகள் ஆயுர்வேதத்தில் உடல் மற்றும் மனதை சமநிலைப் படுத்துவதற்காக பயன்படுத்துகின்றனர். ஆரோக்கியமான உடலுக்கு நன்மை சேர்க்கும் கொத்தமல்லி விதைகள் செரிமான பிரச்சனையை தவிர்த்து சுவாச பிரச்சனைகள், சிறுநீர் கோளாறுகள், பித்தம் அதிகமாகுவதால் ஏற்படக்கூடிய தோல் வியாதி ஆகியவற்றை சரிசெய்கிறது. பித்தம் அதிகமாகி பித்த வாந்தி ஏற்பட்டால் கொத்தமல்லி விதைகளை இடித்து போட்டு காபி குடித்தால் பித்தம் தெளியும்.

### இஞ்சி

பெரும்பாலோனர் வீட்டில் இஞ்சி இல்லா சமையலை காண்பது அரிது. சமையலறையில் இருக்க வேண்டிய மிக முக்கியமான ஒரு நறுமணப்பொருள் இஞ்சி. இது உணவிற்கு சுவையை கொடுப்பதோடு மட்டுமல்லாமல் செரிமானத்திற்கும் பயன்படுகிறது. பிரபஞ்ச மருந்து என அழைக்கப்படும் இஞ்சியானது கபம் மற்றும் வாதம் தீவிரமடைவதால் ஏற்படக்கூடிய மூச்சு பிரச்சனைகளுக்கு சிறந்த நிவாரணியாக பயன்படுகிறது. காய்கறிகள் மற்றும் பயறுகள் உட்கொள்வதால் நமது உடலில் ஏற்படக்கூடிய உற்சாகத்தை, நறுமணப்பொருளான இஞ்சி நமக்கு தருகிறது. மேலும் ஜலதோ'ம், இருமலை குணப்படுத்தக்கூடிய மூலிகை தேநீராகவும் பயன்படுத்தபடுகிறது.



### சீரகம்

இது பெரும்பாலும் சுவையை கூட்டுவதற்காக ஊறுகாய் மற்றும் குழம்பு வகைகளில் சேர்க்கப்படும் நறுமணப்பொருளாக உள்ளது. இது செரிமான கோளாறை போக்கி கிருமிநாசினியின் தூண்டியாக செயல்படுகிறது. அதாவது உடலில் திரட்டப்பட்ட நச்சுகளை சுத்தப்படுத்தும் போது அவற்றிலிருந்து வெளியாகும் சிறந்த சத்துக்களை உறிஞ்சி நமது உடலை பாதுகாக்கிறது.

தொடரும்.. ..

# ஆயுளை வளர்க்கும் இஞ்சி



சுவைக்காக உணவில் சேர்த்துக் கொள்ளப்படும் இஞ்சி, ஓர் மருத்துவ மூலிகையாகும். உடலுக்கு தேவையான ரசாயனங்கள், தாதுக்கள் இஞ்சியில் நிறைந்து காணப்படுகிறது. 100 கிராம் இஞ்சி 80 கலோரி ஆற்றலை தருகிறது.

சக்தி நிறைந்த இஞ்சியின் தோல் பகுதி மட்டும் நஞ்சு போன்றது. அதனால் தோலை நீக்கிவிட்டுத்தான் இஞ்சியை பயன்படுத்த வேண்டும். பசியின்மை, வாந்தி, குமட்டல், அஜீரணம், வயிற்றுவலி போன்றவைகளை போக்கும் சக்தி இஞ்சிக்கு உண்டு. இது ஹஆன்டி ஆக்சிடென்ட் ஆக செயல்பட்டு ஆயுளை அதிகரிக்கவும் செய்யும். பாக்டீரியா, வைரஸ் கிருமிகளை அழிக்கும் ஆற்றலும் இஞ்சியில் இருக்கிறது.

# திறமையை உபயோகப்படுத்த வேண்டும்

குட்டிக் கதை



மஹாபாரதப் போர் நடந்து கொண்டிருந்தது. ஒரு வீரன் போர்க்களத்திற்குள் வந்து கொண்டிருந்ததை கிருஷ்ணர் கவனித்தார். அவனுடைய நேர்ப் பார்வையும், நிமிர்த்திய நெஞ்சும், வீர நடையும் கிருஷ்ணரை ஈர்த்தது.

தன் உருவை மாற்றிக் கொண்டு அவனை அணுகி "வீரனே எங்கு வந்தாய்?" என்று கேட்டார். "நான் போரில் பங்கேற்க வந்தேன்!" என்றான் அவன். "உனக்கு என்னப்பா தகுதியிருக்கிறது" என்றார் கிருஷ்ணர். அவன் தன்னிடம் இருக்கும் வில்லையும் மூன்று அம்புகளையும் காட்டி, "இதில் ஒன்றால் பாண்டவர்களையும், மற்றொன்றால் கௌரவர்களையும், மூன்றாவதால் அந்தக் கிருஷ்ணனையும் கொல்லும் திறமை படைத்தவன் நான்" என்றான்.

"எப்படி உன்னை நம்புவது?" என்றார் கடவுள். அவன் அவரை மேலும் கீழும் பார்த்து விட்டு தூரத்தில் உள்ள மரத்தைக் காட்டி, அதில் இருக்கும் இலைகள் அனைத்தையும் ஒரே அம்பில் வீழ்த்திக் காட்டுவதாகக் கூறினான். விளையாடிப் பார்த்து விடுவது என்று முடிவு செய்த கிருஷ்ணர், "சரி செய் பார்க்கலாம்" என்றார். அவர் கடவுளல்லவா? அவனுக்குத் தெரியாமல் மரத்தின் ஐந்து இலைகளை முதலில் தன் காலடியின் கீழே மறைத்துக் கொண்டார்.



வீரன் நாண் ஏற்றி அம்பை எய்தான். அவன் சொன்னது போலவே மரத்தில் அனைத்து இலைகளும் ஒரே அம்பின் தாக்குதலில் கீழே விழுந்து விட்டன. அதோடில்லாமல் அம்பு கிரும்பவம் வந்து ஐந்து முறை கிருஷ்ணரின் காலைத் துளைத்தது.

வீரன் கிருஷ்ணரைத் தெரிந்து கொண்டு வணங்கினான். கிருஷ்ணரும் அவனது திறமையைப் பாராட்டினார், "சரி, யாருக்காக போராடப் போவதாக உத்தேசம்?" என்று கிருஷ்ணர் கேட்டார். வீரன் "என் திறமைக்கு சவாலாக நான் எப்போதுமே தோற்கும் கட்சிக்கு ஆதரவாகவே போரிடுவேன்" என்றான். "இவன் போரிட்டால் இவன் பக்கம் உள்ள கட்சி ஜெயிக்க ஆரம்பிக்கும், உடனே இவன் எதிர் கட்சிக்குப் போய் விடுவான். பிறகு அது ஜெயிக்க ஆரம்பிக்கும். இது முடியவே முடியாதே. போருக்கு ஒரு முடிவு ஏற்படாமல் போய் விடுமே" என்று கிருஷ்ணர் யோசித்தார்.

"வீரனே எனக்கு ஒரு உதவி உன்னிடமிருந்து ஆக வேண்டியிருக்கிறது" என்று அவனிடம் சொன்னார். அவனும் செய்யக் காத்திருப்பதாகத் தலை வணங்கினான். "இந்தப் போரின் முடிவைப் பாதிக்கும் சக்தியுள்ள ஒருவன் இருக்கிறான். அவன் தலை எனக்கு வேண்டும்" என்றார் கிருஷ்ணர். "யார் அவன். சொல்லுங்கள். இப்போதே கொய்து வருகிறேன்" என்றான் வீரன்.

கிருஷ்ணர் "வீரனே, போரின் முடிவுக்காக உழைக்க எண்ணாமல் உன் திறமைக்குச் சவாலாகப் போரில் பங்கேற்க விழையும் நீதான் அந்த ஆள்" என்று அவன் தலையைக் கேட்டு விட்டார். அவனும் உடனே கொடுக்க ஒப்புக் கொண்டான். கிருஷ்ணர் அவன் பக்தியை மெச்சி, அவனுக்கு வரம் ஒன்று கொடுத்தார். அவன் "தான் இறந்தாலும் மஹாபாரதப் போரைத் தன் கண்ணால் பார்க்க வேண்டும்" என்று வரம் கேட்டான். வரத்தை அருளிவிட்டு தலையை வாங்கிக் கொண்டார் கிருஷ்ணர்.

- எந்தப் பக்கமும் சாயாமல் மதில் மேல் பூனையாக சுயநல சிந்தனையுடன் இருப்பவர்கள் எவ்வளவு திறமையிருந்தாலும் காரியத்திற்கு உதவ மாட்டார்கள்.-

# சிந்திக்க .. ..

நீங்கள் பொறுமையை இழப்பது
ஒரு நொடியாகவே இருந்தாலும்,
அந்த நொடியில் தோல்வி
உங்களை உரசிப் பார்த்துவிடும்

# சிறுவர் முரசு



## Grammar

Ex: Use the following verbs (believe, fill, get, look, put, switch, take, throw, try, turn) and the prepositions (away, out, on, off, in, for, down) form meaningful sentences.

1.Quick .................... the bus. It's ready to leave.
2. I don't know where my book is. I have to ............... it.
3. It's dark inside. Can you ............... the light, please?
4. ........................ the form, please.
5. I need some new clothes. Why don't you ........... these jeans?
6. It's warm inside ............... your coat.
7. This pencil is really old. You can ..................... it .................
8. It's so loud here. Can you ..................... the radio a little.
9. The fireman were able to .................. the fire in church street.
10. Does your little brother .............ghosts?

Your sister asks you to arrange a servant to look after her baby.. Because she is a working woman. So you write a note to your uncle to ask him to arrange. Say duty time, salary, and she should be patient and kind.

# உடல் எடை குறைக்க ஈஸி வழி

எட்டாம் நாள் எடை இயந்திரத்தில் ஏறிப் பாருங்கள். மாற்றம் தெரியும். இந்த டயட் முறைக்கு வேறு கட்டுப்பாட்டு விதிகள் இல்லை என்பது சிறப்பானது. டீ, காபி சாப்பிடுபவர்கள் பால், சர்க்கரை தவிர்த்து பருகலாம். டீயில் எலுமிச்சை பிழிந்து சாப்பிட்டால் நல்லது தான். எண்ணெய் தவிர்த்து வருவது சிறந்த பலன் தரும். முடியாத பட்சத்தில் ஒரு டீஸ்பூன் எண்ணை சேர்த்துக் கொள்ளலாம். முதல் இரண்டு நாட்களில் சேர்க்கும் பழங்கள், காய்கறிகள் உடலுக்கு போதிய ஆற்றலை வழங்கும். 3-வது நாளில் இருந்து கொழுப்பு எரிக்கும் பணி உடலில் நடைபெறுகிறது. அதை நீங்களே உணர முடியும். நான்காம் நாளில் சேர்க்கப்படும் வாழைப்பழம், உடல் இழக்கும் பொட்டாசியம், சோடியம் சத்துக்கள் கிடைக்க உதவுகிறது. 5-ம் நாள் அதிகப்படியான தண்ணீர் சேர்க்கப்படுவது உடல் உறுப்புகளை சுத்தம் செய்யும். சிறிது அரிசி சாதம் சேர்ப்பதால் 5, 6-வது நாட்களில் உடலுக்கு போதுமான சத்து கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. பிரபாவின் வயது அவர் தம்பி துஷியின் வயதிலும் 12 வருடங்கள் கூடியதாகும். மேலும் பிரபாவின் வயது துஷியின் வயதின் இரு மடங்காகும்.
    1. பிரபாவின் வயதை x எனவும் துஷியின் வயதை y எனவும் கொண்டு ஒருங்கமை சமன்பாடொன்றை அமைக்குக.
    2. சமன்பாட்டினைத் தீர்த்து அவர்களின் வயதுகளை தனித்தனியே காண்க.

02.

அ. கூட்டல் விருத்தி ஒன்றின் ஆறாம் உறுப்பு 9உம் ஒன்பதாம் உறுப்பு 15உம் ஆகும். இவ்விருத்தியின்,

1. முதலுறுப்பு, பொது வித்தியாசம் என்பவற்றைக் காண்க.

2. nஆம் உறுப்புக்கான கோவையைத் தருக.

3. முதல் 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

4. 108 இத்தொடரின் ஓர் உறுப்பாகுமா?

ஆ. 3a இற்கும் 8b-a இற்கும் இடையில் மூன்று கூட்டல் இடைகளைக் காண்க.

03. பை ஒன்றினுள் வடிவத்தில் ஒத்த 6 சிவப்பு பந்துகளும், 2 நீல பந்துகளும் உள்ளன. மாணவன் ஒருவன் முதலில் எழுமாறாக ஒரு பந்தை எடுத்து அதன் நிறத்தைக் குறித்துக் கொண்டான். பின்னர் அப் பந்தை பையினுள் இடாமல் இரண்டாவது தடவையாக வேறொரு பந்தை எடுக்கின்றான்.

1. மேற்குறித்த நிகழ்ச்சியின் மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.

2. இரண்டாவதாக எடுக்கப்படும் பந்து சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

3. இரு தடவைகளிலும் எடுக்கப்பட்ட பந்துகளில் ஒன்று சிவப்பாகவும் மற்றையது நீலமாகவும் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

04. நபர் ஒருவர் ரூபா 80000 ற்கு கொள்வனவு செய்த குளிர்சாதனப் பெட்டி ஒன்றை 35வீத இலாபத்தில் விலை குறித்து பின்னர் 15வீத கழிவில் விற்கின்றார்.
1. குளிர் சாதனப் பெட்டியின் குறித்த விலை யாது?
2. குளிர் சாதனப் பெட்டியின் விற்ற விலை யாது?
3. விற்றுப் பெற்ற பணத்தை 12வீத எளியவட்டி வழங்கும் நிறுவனம் ஒன்றில் 2 வருடங்களுக்கு வைப்பிலிடுவதினால் பெறப்படும் வட்டிப் பணம் எவ்வளவு?

4. அப்பணத்தை 10 கூட்டு வட்டி வழங்கும் வங்கியில் 2 வருடங்களுக்கு வைப்பிலிட்டால் பெறப்படும் கூட்டுவட்டி எவ்வளவு?
எது இலாபகரமானது என அவருக்கு அறிவுரை வழங்குக.

.05. 0.8m விட்டமும் 1cm உயரமும் உடைய உருளை வடிவ நீர்த்தாங்கி ஒன்றின்
அ. உருளையின் அடி வட்டத்தின் ஆரை யாது?
ஆ. வட்டக் குறுக்கு வெட்டுத் தோற்றத்தின் பரப்பளவு யாது?
இ. தாங்கியின் கொள்ளளவை ml இல் தருக.
ஈ. 7cm, 14cm விட்டமுடைய என்னும் இரு நீர்ப்பம்பிகள் முறையே 20, 5 வேகங்களில் தாங்கியினுள் நீரைப் பாய்ச்சுகின்றது. தாங்கியை முற்றாக நீரால் நிரப்புவதற்கு எடுக்கும் நேரத்தைக் காண்க.

06. ஒரு மனிதன் ஒவ்வொரு மாதமும் அதற்கு முதல் மாதம் அவன் சேமித்த தொகையை விட ரூ10 அதிகமாக சேமிக்கின்றான். முதலாவது மாத முடிவில் அவன் சேமித்த பணம் ரூ7 ஆகும். அவன் சேமித்துள்ள முழுத்தொகை ரூ2040 ஆக எடுக்கும் காலம் n எனக் கொண்டு
1. முதல் மூன்று மாதங்கள் சேமித்த தொகையைத் தருக.
2. 2040 ரூபாவை சேமிக்க எடுக்கும் காலம் n ஆனது $5n^2 + 2n - 2040 = 0$ எனும் சமன்பாட்டிலிருந்து பெறப்படலாம் எனக் காட்டுக.
3. மேற்கூறிய சமன்பாட்டை தீர்த்து ரூ2040 ஐ சேமிப்பதற்கான காலத்தைக் காண்க.

07. பை ஒன்றினுள் வடிவத்தில் ஒத்த 4 சிவப்பு பந்துகளும், 3 நீல பந்துகளும் உள்ளன. மாணவன் ஒருவன் முதலில் எழுமாறாக ஒரு பந்தை எடுத்து அதன் நிறத்தைக் குறித்துக் கொண்டான். பின்னவ் அப் பந்தை பையினுள் இடாமல் இரண்டாவது தடவையாக வேறொரு பந்தை எடுக்கின்றான்.

1. மேற்குறித்த நிகழ்ச்சியின் மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.
2. இரண்டாவதாக எடுக்கப்படும் பந்து சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?
3. இரு தடவைகளிலும் எடுக்கப்பட்ட பந்துகளில் ஒன்று சிவப்பாகவும் மற்றையது நீலமாகவும் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

03. 40செ.மீ நீளமும் 21செ.மீ அகலமும் கொண்ட செவ்வக வடிவ காட்போட் மட்டையாகும். இதன் மத்தியில் இரு நீளப்பக்கங்களையும் தொடக் கூடியவாறு மிகப் பெரிய வட்டம் வரையப்பட்டு, வட்டத்தில் 60 பாகை தவிர்ந்த எஞ்சிய பகுதி வெட்டி அகற்றப்பட்டுள்ளது.
1. வெட்டி அகற்றுவதற்கு முன் காட்போட் அட்டையின் பரப்பளவைக் காண்க.
2. அதில் வரையப்பட்ட வட்டத்தின் ஆரை எவ்வளவு?
3. அகற்றப்பட்ட பகுதியில் கூம்பு ஒன்று செய்யப்பட்டது. எனின், கூம்பின் வட்டவடிவான அடியின் சுற்றளவு யாது?

## பாடம் : விஞ்ஞானம்

1. பிரிமென்றகடு என்பது வயிற்றுக் குழியில் இருந்து நெஞ்சறைக் குழியை வேறுபடுத்தும் தசை சுவராகும். இதன் பிரதானமான தொழில் யாது?
    1. நெஞ்சறையில் உள்ள அங்கங்களும், வயிற்றில் உள்ள அங்கங்களும் தொடுகையுறுவதைத் தடுத்தல்
    2. உட்சுவாசத்திற்கும், வெளிச்சுவாசத்திற்கும் உதவுதல்
    3. வயிறு வெளியே தள்ளப்பட்டிருப்பதைத் தடுத்தல்
    4. நுரையீரல்கள், இதயம் போன்ற அங்கங்களை தாங்கியிருத்தல்

2. மண்ணீர் வேர்மயிரிலிருந்து தாவரகாழ் கலன் வரை கடத்தப்படும் பாதையை சரியாக குறிப்பது?
    1. மேற்றோல் அகத்தோல் பரிவட்ட உறை மேற்பட்டை காழ்
    2. மேற்றோல் மேற்பட்டை அகத்தோல் பரிவட்டஉறை காழ்
    3. மேற்றோல் மேற்பட்டை பரிவட்ட உறை அகத்தோல் காழ்
    4. மேற்றோல் பரிவட்ட உறை மேற்பட்டை அகத்தோல் காழ்

3. இயக்கு நரம்பின் தொழில்
    1. தெறிப்பு வில்லில் மாத்திரம் பங்குபற்றல்
    2. மூளையிலிருந்து முண்ணானுக்கு மாத்திரம் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
    3. மைய நரம்புத் தொகுதியிலிருந்து தசைகளுக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
    4. புலனங்கங்களிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்

4. பயிரிடும் பணிகளில் பல்வேறு தொழில்களுக்காக தாவர ஓமோன்களைப் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பிரயோகிக்கலாம். எனினும் தாவர ஓமோன்கள் நிறைவேற்ற முடியாத ஒரு தொழில்
    1. சிறு கிளையை வேர்விடச் செய்தல்
    2. களைகொள்ளியாகச் செயற்படச் செய்தல்
    3. பருவமல்லாத போது பூக்களும் காய்களும் உண்டாகச் செய்தல்.
    4. பீடைகொல்லியாகச் செயற்படச் செய்தல்

5. பின்வரும் எந்த அங்கிகள் அழுகல் தாவரம் எனப்படும்?
    1. தமது உணவை தாமே உற்பத்தி செய்யும் அங்கிகள்
    2. வேறு அங்கிகளை உணவாகக் கொள்ளும் அங்கிகள்
    3. இறந்த விலங்குப் பகுதிகளையும், தாவரப் பகுதிகளையும் சார்ந்திருக்கும் அங்கிகள்
    4. பச்சைத் தாவரங்களை மாத்திரம் உணவாகக் கொள்ளும் அங்கிகள்

6. மூன்று விசைகளின் நாப்பத்தின் (சமநிலை) மூலம் பின்வரும் எச்சந்தர்ப்பத்தை விளக்கலாம்?
    1. விற்றராசில் தொங்கவிடப்பட்டுள்ள ஒரு பொருளின் சமநிலை
    2. நீரில் மிதக்கும் ஒரு பொருளின் சமநிலை
    3. நிறைகள் (படிக்கற்கள்) இடப்படும் ஒரு சாதாரணத் தராசின் சமநிலை
    4. மேசையில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு புத்தகத்தின் சமநிலை

7. நாம் பயன்படுத்தும் பொருட்களைச் செயற்கைப் பொருட்கள், இயற்கைப் பொருட்கள் என வகைப்படுத்தலாம். பின்வருவனவற்றுள் எது இயற்கைப் பொருளாகும்?
1. நைலோன் 2. பட்டு 3. பொலித்தீன் 4. தெரிலீன்

8. இரும்பைப் பிரித்தெடுக்கும் போது ஊதுளையினுள்ளே சேர்க்கப்படும் மூலப்பொருளாக அமையாதது எது?
1. சுண்ணாம்புக்கல் 2. கற்கரி 3. ஏமற்றைற்று 4. போட்சைற்று

9. துலக்கப்பட்ட சீமெந்துத் தரையில் உள்ள ஓர் அலுமாரியை 500N கிடை விசையினால் மட்டுமட்டாகத் தள்ள முடியும். அலுமாரி கரடுமுரடான ஒரு தரையில் வைக்கப்பட்டு, அதனைத் தள்ளுவதற்கு 500N கிடை விசை பிரயோகிக்கப்பட்டால் அதன் மீது தாக்கும் உராய்வு விசையானது,
1. 500N க்குக் கூடியது 2. 500N க்குச் சமனானதாகும்
3. 500N க்குக் குறைவானதாகும் 4. தரவுக்கமைய தீர்மானிக்கமுடியாது.

10. மனித உடல் குளிர்ச்சியடைவதற்கு ஏதுவான உடற்றொழிலியல் முறை எது?
1. குளிர் நீரில் குளித்தல் 2. குளிர் நீரைப் பருகுதல்
3. சிறிதளவு உணவை உட்கொள்ளுதல்
4. தோலின் மேற்பரப்பில் இருந்து அதிக அளவில் வியர்வை வெளியேறல்

11. நரம்பின்றிய இயைபாக்கத்தில் ஈடுபடுவது எது?
1. தசைகள் 2. என்புகள் 3. ஓமோன்கள் 4. கசியிழையம்

12. பின்வரும் சேர்வைகளுள் எது ஒரு வீழ்படிவாகும்?
1. $KmnO_4$ 2. $CuCO_3$ 3. $CaCO_3$ 4. $Na_2CO_3$

13. ஒரு கலத்தில் காணப்படும் மிகப்பெரிய புன்னங்கம் எது?
1. கரு 2. புன்கரு 3. நிறமூர்த்தங்கள் 4. இலைசோசோம்கள்

14. இலங்கையின் சில பிரதேசங்களில் நிலக்கீழ் நீரில் உள்ள ஒரு குறித்த மூலகம் மனிதனின் பற்களில் கபில நிறம் ஏற்படக் காரணமாக உள்ளது. அம்மூலகம் யாது?
1. புளோரீன் (F) 2. குளோரீன் (Al) 3. சோடியம் (Na)
4. கல்சியம் (Ca)

15. மின்னை உற்பத்தி செய்வதற்காக இலங்கையில் அறிமுகஞ் செய்யப்பட்ட சக்தி மூலம் யாது?
1. கிளிரிசீடியா 2. உயிர்வாயு 3. சூரிய சக்தி
4. ஓர் உயர் தரையில் சேமித்து வைத்த நீரின் அழுத்தச் சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணயக்கைதிகளாக...

துன்புறுத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மேலும் முன்னூற்றுப் பதினைந்து இலங்கையர் அங்கு தடுப்பில் இருப்பதாகவும் தாம் எப்போது நாட்டுக்குத் திரும்ப முடியும் என்ற ஆவலுடன் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது உழைப்பினைச் சூறையாடிய பின்னரே தம்மை நாட்டுக்குத் திருப்பியனுப்ப அந்நாடுடு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததாகவும் அந்நாட்டு இராணுவத்தினர் தம்மை அடித்துத் துன்புறுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்நாட்டில் பணியில் இருந்த இளைஞர்களுடனான தொடர்புகள் திடீரென அற்றுப் போன நிலையில் அவர்கள் பணயக் கைதிகளா கைப்பற்றப்பட்டிருப்பதாக அவர்களது குடும்பங்கள் சந்தேகம் கொள்ள ஆரம்பித்தனர். அவர்களுடன் எவ்வித தொடர்புகளையும் பேணமுடியாமல் உறவினர்கள் அல்லல் படுகின்றனர்.

அவர்களை மீட்டுத்தருமாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்ரன் அவர்களிடம் மக்கள் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சனாதிபதி, வெளிவிவகார அமைச்சர், மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா ஆகியோருக்கு தொலைநகல் மூலம் கடிதமொன்றை அரியநேத்ரன் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ள இலங்கையரை மீட்பதற்கான நடவடிக்கைகளை அந்நாட்டு அரசுடன் பேசி முன்னெடுக்குமாறு அவர் கோரியுள்ளார்.

## வெந்நீரூற்றுக்கு......

பகுதிக்கு செல்வதற்கு புதிதாக பாதையொன்று அமைக்கப்படுவது தொடர்பாக உள்ளூர் தமிழ் மக்கள் கவலையும் சந்தேகமும் அடைந்துள்ளனர்.

நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வரும் வழமையான பாதை மூடப்பட்டு புதிய பாதையொன்று அமைக்கப்படுவது கன்னியா வெந்நீர் ஊற்று பிரதேசத்தில் பெரும்பான்மை சமூக மக்களை குடியேற்றுவதற்கான முயற்சியாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாக திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேசத்திற்கான உள்ளூராட்சி சபைத் தலைவரான இராமலிங்கம் விஜேந்திரன் கூறுகின்றார்.

தொடர்புடைய விடயங்கள்

புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், போர்

திருகோணமலை மாவட்ட இந்துக்கள் பெரும்பாலும் சமய மரபுகளின் படி இந்த தலத்திலேயே இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்கான அந்தியேட்டிக் கிரியைகளை செய்துவருகின்றனர்.

ஏழு வெந்நீர் ஊற்றுக் கிணறுகளைக் கொண்ட கன்னியா பகுதியில் இப்போது இந்து மத அடையாளங்கள் அருகி பௌத்த வழிபாட்டுக்குரிய அடையாளங்களே முன்னிலை படுத்தப்பட்டுவருவதாக இந்துக்கள் கூறுகின்றனர்.

கன்னியா வெந்நீரூற்று பகுதியில் இந்து மத அடையாளங்கள் அருகி விட்டதாகவும் விசனம்

ஏற்கனவே திருகோணமலை - அனுராதபுரம் நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து செல்லும் பாதை வழியாகவே கன்னியா வெந்நீர் ஊற்றுக்கான பொது போக்குவரத்து நடைபெறுகின்றது.

தற்போது அதற்கு பதிலாக அதே நெடுஞ்சாலையில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளும் வகையில் சந்தா புர வீதி என புதிய பாதையொன்று அமைக்கப் பட்டு வருவதாக இராமலிங்கம் விஜேந்திரன் கூறுகின்றார்.

அந்த பாதையில் சுமார் 1000 ஏக்கர் பரப்புள்ள அரச காணிகள் இருப்பதாகவும் அவர் கூறுகின்றார்.

புதிய பாதை அமைப்பு வேலைகளை இராணுவமும் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களமும் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

பல ஆண்டுகளாக தமது உள்ளூராட்சி மன்றத்தின் பராமரிப்பிலிருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிரதேசம், 2010-ம் ஆண்டு தொல்பொருள் ஆய்வு மற்றும் வன பரிபாலனம் என்ற காரணங்களை கூறி, சபையின் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் விஜேந்திரன் சுட்டிக்காட்டுகின்றார்.

## கப்பலேறிக்.......

பெயரும் நோக்குடன் இலங்கையில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் வெளிநாடுகளை.....

நோக்கிப் பயணித்த வேளையில் காணாமற் போயுள்ளனர். இவ்வாறு காணாமற் போயுள்ளவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் எனில் அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பதைத் தேடி அறியும் முயற்சியைத் திருகோணமலைத் தமிழ்ச் சிவில் சமூக அமைப்பு முன்னெடுத்துள்ளது.

இந்தோனேசியா, துருக்கி மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளில் இவ்வாறு காணாமற் போனவர்கள் அடைக்கப்பட்டிருப்பதாக நம்பகமற்ற செய்திகள் தெரிவித்துள்ள நிலையில் அவ்வாறு இருப்பவர்களை நாட்டுக்குத் திரும்பப் பெற்றுக்கொள்ள கோரிக்கைகளை உரிய நாடுகளுக்கு அனுப்ப இருப்பதாகவும் சிவில் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காணாமற் போனவர்களின் விபரங்களை பதிவுசெய்யும் படிக் கேட்டுள்ள சிவில் சமூகத்தினர் அவ்வாறு பதிவை மேற்கொள்ள இல.238, உட்துறைமுகவீதி, திருகோணமலை (ஜெசுவிட் நிலையம்) (026-3260895) உள்ள "மனித உரிமைகளுக்கான பாதுகாப்புக்கும் மேம்பாட்டுக்குமான நிலையத்தில்" மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## ஊடகச் சுதந்திரம்....

கூறினார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், எமது நாட்டில் தற்போது ஊடக சுதந்திரம் இல்லை, ஊடக சுதந்திரம் முக்கியமானதாகும், அனைவருக்கும் கருத்துக் கூறுகின்ற சுதந்திரம் உண்டு. ஆனால் இங்கு ஊடகவியலாளர்களுக்கோ, ஊடகங்களுக்கோ சுதந்திரமாகச் செயற்பட முடியாதுள்ளது. தற்போது தகவல் தொடர்பு சாதனங்கள் உலகை ஆக்கிரமித்துள்ளன. இணையத்தளங்கள் மற்றும் கைத் தொலைபேசிகள், தொலைக்காட்சிகள் உள்ளிட்டவைகள் தற்போது செல்வாக்குச் செலுத்துகின்றன. கருத்துச் சுதந்திரமும் ஊடகவியலாளர்களுக்கான சுதந்திரமும் ஊடகங்களுக்கான சுதந்திரமும் இருக்க வேண்டும் என்றார்.

## சர்வதேச முதலீட்டாளர்...

சம்பூர் அனல் மின் நிலையத்தில் இருநாட்டு அரசுகளும் எஞ்சிய 30 வீதத்தையே முதலீடு செய்கின்றன.

ஐநூறு மெகாவோற்றுக்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் இத்திட்டத்தின் முதற்கட்டப்பணிகள் இந்த ஆண்டில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இலங்கை மின்சார சபை தனது பங்கான 15வீத முதலீட்டையும் வெளிநாட்டுப் படுகடன் மூலமே நிதியிட இருக்கின்றது. 2017ல் பணியை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படும் இவ்வனல் மின் நிலையத்தின் மொத்த முதலீடு 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## விளம்பர மோசடி.....

விடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

குறித்தவொரு இணைத்தளத்தில் வரும் விளம்பரங்களைப் பார்வையிடப் பார்வையிடப் பண வருமானம் கிடைக்கும் என அறிமுகப்படுத்தப்பட்ட விளம்பர சேவையாலேயே இவர்கள் ஏமாற்றப்பட்டிருப்பதாகவும் ஒவ்வொருவரும் சுமார் மூன்று லட்சம் ரூபா வரை பணத்தைச் செலுத்தி ஏமாந்திருப்பதாகவும் தெரிகின்றது.

சில அதிபர்கள் கூட இந்த மோசடிக்குப் பலியாகியுள்ளதாகவும் யாருமே இவ்விடயத்தை வெளிப்படையாகப் பேசத் தயங்குவதாகவும் தெரிகின்றது.

எனினும் எண்ணிக்கணக்கற்றவர்களை ஏமாற்றிச் சென்ற இந்த வலைத்தளமானது எனத் தெரியவருகின்றது. திடீரென இவ்வலைத்தளம் தனது செயலிழந்ததை அடுத்தே தாம் ஏமாற்றப்பட்டதை அனைவரும் தெரிந்துகொண்டுள்ளனர்.

காவல்துறையின் சைபர்கிரைம் பிரிவிடம் இவ்விடயம் தொடர்பாக முறைப்பாடொன்றைப் பதிவு செய்ய மலைமுரசு உத்தேசித்துள்ளது.

பல இலட்சம் ரூபாய்களைக் கொள்ளையிட்ட இவ்வலைப்பின்னலிற்கு மாவட்ட முகவர்களாகச் செயற்பட்டவர்களில் இருந்து விசாரணைகளை ஆரம்பிக்க முடியும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

## நான் அவன் இல்லை...

தெரியாது என்றும் தெரிவித்திருந்தார்.

இப்படத்தை வெளியிட்ட கொழும்பு டெலிகிராப் இணையத்தள பிரதம ஆசிரியர் " இப்படம் சம்பந்தமாகச் சந்தேகப்படும்படி எதுவும் இல்லை. இப்படத்திலிருப்பவர் ஞானசார தேரர்" என உறுதிபடத் தெரிவித்திருப்பதாக ஏசியன்மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

## மட்டு போதனா...

வழங்கவுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இந்தக் குழுவில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் டேவிட் வட்மோர், அவுஸ்திரேலிய வைத்திய நிபுணர் நிஹால் டி.சன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, அவுஸ்திரேலிய சத்திரசிகிச்சை நிபுணரால் வைத்தியசாலை நரம்பியல் சத்திர சிகிச்சைப் பிரிவிற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

## இளைஞன் கடத்தப்...

நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனிடமும் முறையிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் பிரிவில் கடந்த திங்கட்கிழமை பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் எதிரொலியாகவே குறித்த இளைஞர் கடத்தப்பட்டுள்ளார் என்று அரியநேத்திரன் எம்.பி. தெரிவித்தார்.

## இளைஞன் கடத்தப்...

காவலர்கள் விசாரணைகளை மேற்கொண்டு, கைரேகை அடையாளங்களைப் பதிவுசெய்தனர் என்றும் மோப்பநாய்களின் உதவியுடன் தேடுதல் நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. வீடுகளுக்குள் புகுந்த மர்ம நபர் அங்கிருந்து எந்த பொருட்களையும் திருடிச் செல்லவில்லை என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். பள்ளித் தலைவர், சமுர்த்தி உத்தியோகத்தர், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் ஆகியோரின் வீடுகளிலும் வெவ்வேறு நேரங்களில் மர்மநபர் புகுந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சர்வதேசச் சமூகமே...

மாவட்டத்திலும், கிழக்கில் குடிப் பரம்பலைச் சிதைப்பதற்காக திருகோணமலை மாவட்டத்திலும் சிங்களக் குடியேற்றங்களை அரசு நிறுவி வருவதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"முன்னர் ஒருமுறை சம்பூரில் அனல் மின் நிலையப் பணிகளுக்குக் கையகப்படுத்தப்பட்ட காணிகளைத் தவிர்த்து ஏனைய காணிகளை மக்களிடம் வழங்க வேண்டும் என்று நான் இம் மன்றில் பேசிக்கொண்டு இருக்கும் போது குறுக்கிட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அனல் மின் நிலையத்திற்கான காணிகளைத் தவிர ஏனைய பிரதேசங்களில் மக்களை குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் இன்றுவரை மக்கள் அகதிகளாகவே வாழ்கின்றார்கள்... நீங்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தமிழருக்கு வழங்கப்பட்டவற்றைக் கூட தருவதற்குக் தயாரில்லாமல் இருப்பதுடன் அவ்வொப்பந்தத்தின் சரத்துக்களை மீறும் நடவடிக்கையில் அரசு ஈடுபடுகின்றது" என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## திருமலைத் துறைமுக...

கப்பல் இறுதியாகப் பயணம் செய்துள்ள நாடுகளின் பட்டியலைப் பரீட்சிப்பதன் ஊடாக இக்கட்டுப்பாட்டு நடைமுறைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆபிரிக்காவில் வழும் ஒரு வகைப் பழம் தின்னும் பறவைகளில் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ள இவ்வைரஸ் மனிதர்களுக்கு நேரடியாகவோ அல்லது வேறு மிருக இனங்களின் ஊடாகவோ தொற்றக் கூடியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்று ஏற்பட்டு 2 தொடக்கம் 21 நாட்களுக்குள் மனித உடலின் திசுக்களில் மரணத்தை ஏற்படுத்தி ஆட்கொல்லியாக இவ் வைரஸ் உருமாறிவிடும்.

1976ம் ஆண்டில் 600 பேருக்குத் தொற்றை ஏற்படுத்தி 400ற்கும் மேற்பட்டவர்களைப் பலியெடுத்துள்ள இவ் வைரஸ் 2014ல் தற்போதுவரை 1200 பேருக்குத் தொற்றியுள்ளதுடன் 600ற்கும் மேற்பட்டவர்களைப் பலியெடுத்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸகாத் : ஒரு சமூகக் கடமை

__ஸகாத் வழங்குவோர் பெறுவோர்__

ஸகாத் ஸ்தாபனரீதியாக சேகரித்து விநியோகிக்ப்படக்கூடிய கடமை என்பதுவே அடிப்படையாகும். இஸ்லாமிய அரசின் முதல் தலைவர் நபி (ஸல்) அவர்களை நோக்கிய இறைக் கட்டளை 'எடுத்தான்' என்ற கருத்திலமைந்த சொல்லின் ஏவல் வினையை பயன்படுத்தி 'எடுப்பீராக' என ஆரம்பிக்கின்றது. மேலும் நபி (ஸல்) அவர்கள் மற்றும் கலீபாக்கள் கால நடைமுறையாகவும் இது அமைந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் தமது காலத்தில் இப்னு மஸ்ஊத் (ரழி) அம்ருப்னு ஆஸ் (ரழி) இப்னு லுதைபா (ரழி) போன்ற பலரையும் பல பிரதேசங்களுக்கு ஸகாத் சேகரிப்புக்காக அனுப்பியுள்ளார்கள். ஸகாத் கூட்டாக நிறைவேற்றுவதாலேயே தகுதியான அனைவரிடமிருந்தும் அது பெறப்பட்டு அருகதையுடைய சகலருக்கும் முறையாக வழங்கப்படும் நிலை தோன்றும். மேலும் ஏழைகள் சுய கௌரவத்தோடு ஸகாத்தைப் பெறவும் சமூகரீதியான சேவைகளுக்கு ஸகாத் பயன்படுத்தப்படவும் இது வழிவகுக்கின்றது. எனவே இலங்கை போன்ற இஸ்லாமிய அரசு எதுவுமற்ற சிறுபான்மை நாடுகளில் தேசிய மட்டத்திலும் பிரதேசவாரியாகவும் ஸகாத் சேகரிப்பு விநியோகத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இம்முயற்சி பரவலாக்கப்பட்டால் சிறுபான்மை முஸ்லிம்களின் எண்ணற்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். இன்ஷா அல்லாஹ் எங்களில் ஒருவர் குளிப்புக் கடமையான நிலையில் தூங்கலாமா? ... ... ...

தொடரும் .. ..



# வாரமொரு ஜோக்

- அருணன் -




ஒருவர் : ஐயா! உள்ளே வரவேண்டும். உங்கள் நாய் கடுமையாக குரைக்கிறது, சற்று பிடியுங்கள்..

வீட்டுக்காரர்: என்ன ஓய் இவ்வளவு படித்தவராயிருந்தும் குலைக்கிற நாய் கடியாது என்ற பழமொழி உமக்கு தெரியாதா..?

ஒருவர் : யோவ் அது எனக்கும் தெரியும். ஆனால் அது உன் நாய்க்கு தெரியனுமே...

ஹா ஹா ஹா !!!

பிச்சைக்காரர்: ஐயா ரொம்ப பசிக்கிறது தர்மம் போடுங்க சாமியோவ்..!

வீட்டுக்காரர் : இவ்வளவு நன்றாய் உடம்பை வைத்துக்கொன்டு பிச்சை எடுக்கிறாயே.. உடம்பில் வலு உள்ளவரை உழைத்து உன் என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறாரே இது உனக்கு தெரியுமா..?

பிச்சைக்காரர் : பிச்சை போட மனதில்லாவிடின் வாயையாவது மூடிக்கொண்டிரு என இன்னொரு அறிஞர் கூறியிருக்கிறாரே அது உங்களுக்கு தெரியுமா..?

வீட்டுக்காரர்..: யார்ரா அது..!

பிச்சைக்காரன்..: அது நான்தான்.....!

ஹா ஹா ஹா !!!

ஓர் அலுவலகத்தில் அன்று அலுவலக உதவியாளர் இன்மையால் அங்கு சமூகமளித்த விருந்தினர்களை உபசரிக்கும் பொருட்டு அவ் அலுவலக சாரதியை அழைத்து அவர்கள் உண்ணுவதற்கு பிஸ்கட்டும், வாழைப்பழமும் அத்துடன் சோடாவும் உடனடியாக வாங்கிவரும்படி பணித்துவிட்டு முகாமையாளர் அவ் விருந்தினர்களுடன் ஆலோசனை நடாத்திக் கொண்டிருந்தார். ஒரு மணித்தியாலம் ஆகியும் அச்சாரதி அலுவலகத்திற்கு வந்து சேரவில்லை. இது என்ன கொடுமை சரவணா! இவர்களை எப்படி நான் ஒன்றும் கொடுக்காது அனுப்புவது என்றெண்ணி சாரதியை தொலைபேசியில் அழைத்தார். அவரும் இதோ அருகில் வந்துவிட்டேன் இன்னும் 5 நிமிடம் என்றார்.



5 நிமிடம் கேட்டவர் மேலும் அரைமணித்தியாலத்தின் பின்னரும் வந்து சேரவில்லை. காத்திருந்த விருந்தினர் சென்றுவிட்டனர். அவசர அவசரமாய் ஓடி வந்தார் சாரதி. அவரிடம் ஏன்டா பக்கத்தில் 5 நிமிட நடைதூரத்தில் இருக்கும் கடைக்குச் சென்றுவர உனக்கு இரண்டு மணித்தியாலம் எடுத்ததா? என்று முகாமையாளர் கேட்டார். அதற்கு சாரதியோ நான் எப்பவோ வாங்கி விட்டேன் நான் சென்ற பாதை ஒன்வே பாதை என்பதால் சுற்றித் தானே வரவேண்டும் என்றார். இதைக் கேட்ட முசகாமையாளர் தன் சாரதியை எண்ணி மிகவும் பெருமை கொண்டார்.

# இறால் டெவல்



**தேவையான பொருட்கள்**

இறால் - கால் கி.கிராம், தக்காளிப்பழம் - 100 கிராம், கறி மிளகாய் - 100 கிராம், பம்பாய் வெங்காயம் - 1, பச்சைமிளகாய் - 5, சில்லி கார்லிக் சோஸ் - 2 மே.க, உப்புத்தூள் - அளவிற்கு, மிளகுத்தூள் - அளவிற்கு, தேங்காயெண்ணெய் - 4 மே.க, ரேஸ்ற்மேக்கர் - அளவிற்கு, சோயா சோஸ் - 2 மே.க, முட்டை - 1

**செய்முறை**

முட்டையை உடைத்துப் பாத்திரத்தில் விட்டுச் சிறிது உப்புச் சேர்த்து அடித்து வைக்குக. இறாலைத் துப்பரவு செய்து கழுவி எடுத்துக் கொள்க. தக்காளிப்பழம், கறிமிளகாய், வெங்காயம் என்பவற்றை அளவான துண்டுகளாக வட்ட வடிவில் வெட்டிக் கொள்க. பச்சை மிளகாயைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். தாச்சியில் எண்ணெயைக் கொதிக்க வைத்து இறாலையிட்டு அரைப்பதமாகப் பொரியவிட்டு, அதனுள் கறிமிளகாய், வெங்காயம், பச்சைமிளகாய் என்பவற்றைச் சேர்த்து முக்கால் பதமாக மரக்கறிவகை அவிந்து வரும்போது தக்காளி, மிளகுத்தூள், உப்புத்தூள், அடித்த முட்டை, சிலி கார்லிக் சோஸ், சோயா சோஸ் என்பவற்றையிட்டு ரேஸ்ட்மேக்கர் அளவிற்குச் சேர்த்துக் கிளறி கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக் கொள்ளவும்.

# முத்தின் முத்தான குணங்கள்

முத்தின் மருத்துவ குணங்கள்:

முத்துக்களை ஆண்கள் பெண்கள் யார் வேண்டுமானாலும் அணியலாம். முத்து அணிந்தால் உடலில் உரசி கரையும். அப்போது உடல் சூடு தணியும் என்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன. முத்தில் புரதச்சத்து, சுண்ணாம்புச் சத்து உள்ளது. பல்வேறு நோய்களைத் தீர்க்கும் மருந்துகளில் முத்து பயன்படுத்தப்படுகிறது. முத்துக்களை பல்வேறு மூலிகைச் சாறுகளால் பாடம் செய்து பொடியாக்கி பல்வேறு மருந்துகள் தயாரிக்கப்படுகிறது.





அழகு சாதனங்கள், பற்பசைகள் தயாரிக்க முத்து பயன்படுகிறது.

முற்றும் .. ..

# விரைவாக கருத்தரிக்க வேண்டுமா!!



பெண்கள் கருத்தரிக்க முயலும் முன், தங்கள் உடலை ஆரோக்கியமாக, போதிய ஊட்டச்சத்து நிறைந்ததாக பார்த்துக் கொள்ள வேண்டும். உடலுக்கு வேண்டிய விட்டமின்கள், கனிமச் சத்துக்கள் போன்றவை சீரான முறையில் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

- சிட்ரஸ் பழங்கள்: இதில் நிறைந்துள்ள விட்டமின் சியானது ஹார்மோன்களை சீராக்குவதால், விரைவில் கருத்தரிக்கலாம்.
- முட்டை : விட்டமின் டி குறைபாடு இருந்தாலும், கருத்தரிப்பதில் பிரச்சனை ஏற்படும். மேலும் கருத்தரிக்க முடியாத 80 பெண்களை பரிசோதித்த போது, அவர்களுக்கு விட்டமின் டி குறைபாட்டினால் தான் கருத்தரிப்பதில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது தெரியவந்தது. எனவே முட்டையை பெண்கள் சாப்பிடும் போது, அவர்களுக்கு வேண்டிய வைட்டமின் டி சத்தானது கிடைக்கும்.

தொடரும் .. ..

# கொட்டியாபுரத்து சிங்கம்

**கொட்டியாபுரம்**

வரலாற்றுக் குறுநாவல்

கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்

கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி .. ..

எப்படித் தான் அந்த வெள்ளைக்காரர்கள் இங்கு வந்தார்களோ? அவர்களின் முக்கியமான வேலையே கோயில்களை இடிப்பதும், மதத்தைப் பரப்புவதும் தானாம்.

**சம்பூர் சதீஸின்**

யாழ்ப்பாணத்து அரசர்களினதும் கோட்டே அரசர்களினதும் ஆட்சியையும் பிடித்து விட்டார்களாம். நாங்கள் ஒற்றுமையில்லா விட்டால் எங்கள் நாடும் இப்படித்தான் அடிமைப்படும் என்றார். நமது அரசனின் இளவரசுக்கள் அதை நடக்க விடமாட்டார்கள் என்று பெருமையுடன் பேசியவர் சில நாட்களுக்கு முன் நடந்த சண்டையில் இளவரசர்கள் மூவரும் காட்டிய வீரத்தைப் பற்றி நாடே பேசுவதை நாம் கேட்கிறோம்.

இவ்வாறான சம்பாசனைகளிடையே அவர்கள் சென்றுவிட்ட பின்னர் இளஞ்சிங்கனும் சத்யனும் புறப்படத் தயாரான போது திடீரென பத்துப் பேர் கொண்ட புரவி வீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டனர். இதனால் அதிர்ச்சி யடைந்த இருவரும் அப்படியே நின்று கொண்டிருந்தனர். அவர்களுள் தலைவன் போல் தென்பட்ட ஒருவன் முன்னே வந்து 'கொட்டியாரத்து வணிக வேஷதாரிகளே! உங்களை கைது செய்யச் சொல்லி மகாராஜா ஆணை' என்று தமிழில் கூறினான். வேறோரு சந்தர்ப்பமானால் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அனைவரையும் வீழ்த்தும் திறன் கொண்ட இளஞ்சிங்கன் அன்று கண்டியரசின் நன்மதிப்பை பெற வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக போரிலீடுபடவில்லை. அவன் மனம் தங்களை அடையாளம் கண்டு கொள்ளுமளவுக்கு கண்டியரசனின் ஒற்றர் படையை எண்ணி வியந்தனரே தவிர சற்றும் கூட முகத்தில் பயம் தெரியாததால் அவனது மனவுறுதியைப் பார்த்து அதிசயித்த கண்டிய படைத்தலைவன் இவன் எதற்கும் அஞ்சான் என்று தன்னுள்ளே கூறியவாறு போகலாமா வணிகர்களே என்றான். எங்கே என்ற சத்தியனின் கேள்விக்கு விருந்துக்கு என்று அநாயாசகமாகப் பதிலளித்தான். பின்னர் குழப்ப மேற்படுத்தாமல் எங்களுடன் வாருங்கள் என்று கூறி அரண்மனையை நோக்கி அழைத்துச் சென்றான். என்ன நடக்கிறது பார்ப்போம் என்றெண்ணியவாறு தாங்கள் யாரென்று அடையாளப்படுத்தாமல் அவர்களுடன் சென்றோம்.



**இராசசிங்கன் நட்பு**

கைதிகளாக அழைத்துச் செல்லப்பட்ட இருவரும் அரண்மனை வாயிலை அண்மித்ததும் அங்கே அவர்கள் கண்ட காட்சியை அவர்களாலேயே நம்பமுடியவில்லை. பிரமித்துப் போனார்கள். அங்கே அரசர்களுக்குரிய ஆடைகளையும் அணிகலன் களையும் அணிந்த சற்று வயதான ஒருவர் வாயிலுக்கு வந்து கொட்டியாரப்பற்று இளவரசரும் அவர் நண்பரும் இந்தக் கண்டி இராச்சியத்தின் மன்னனால் வரவேற்கப்படுகின்றனர் என்ற வார்த்தைகளடங்கிய வரவேற்பை அவர்களால் நம்பமுடியாமலிருந்தது. இருவரும் அமைதியாக இருந்ததை அவதானித்த மன்னன் உள்ளே வருமாறு கூறி அவர்களை அழைத்துச் சென்றான்.



பின்னர் கொட்டியாபுரத்து வன்னியமான [illegible] நண்பனைப் பற்றியும் அங்கேயுள்ள நிலவரங்களைப் பற்றியும் கேட்டறிந்து கொண்டான். இளஞ்சிங்கனும் வன்னியனார் கண்டி மன்னனுக்குக் கொடுத்தனுப்பிய அன்புப்பொருளையும் கொடுத்தான். பின்னர் தானடக்கி வைத்திருந்த சந்தேகத்தைக் கேட்டான். “மகாராஜா தங்களுக்கு எங்களைப்பற்றிய தகவல் கிடைத்தது எவ்வாறு.?” “சிங்கன்” என்று பதில் மன்னனிடமிருந்து வந்தது. “குதிரைக் காவலன் சிங்கனா?” என்று கேட்டான் இளஞ்சிங்கன். “ஆமாம்” என்ற மகாராஜா அவன் என் இரண்டாவது வாரிசு என்று பதிலளித்தான்.



நீங்கள் களைப்பாகவுள்ளீர்கள். ஓய்வெடுத்தபின் நாளை காலை அரசவையில் சந்திக்கலாம் என்று கூறி விருந்தினர் மாளிகையில் தங்குவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு காவலர்களுக்குப் பணித்து விட்டு அங்கிருந்து நகர்ந்தார். களைப்பு மிகுதியினால் விரைவாகவே உறங்கிய நண்பர்களிருவரும் சூரியோதயத்தின் பின்னர் காவலர்கள் வந்து எழுப்பிய பின்னரே எழுந்து நீராடிவிட்டு அரசவைக்குச் சென்றனர்.

வழமைபோல அன்றும் அரசவை நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன. அன்றைய தினம் முழுதும் சம்பாசணை பறங்கியர் பற்றியதாகவே அமைந்திருந்தது. அடிக்கடி கண்டி இராச்சியம் மீது படையெடுத்து அழிவை ஏற்படுத்தும் அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவது பற்றியே கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

அது ஒரு போர்கால பாசறை போன்றே இளஞ்சிங்கனுக்கு தென்பட்டது. ஆடல் பாடல் கொண்டாட்டங்களோ, ஏனைய அரச சம்பந்தமான நிகழ்வுகளோ அல்லாமல் அனைவரும் ஓர் உணர்ச்சிவசப்பட்ட நிலையிலேயே காணப்பட்டனர். நாட்டு மக்களனைவரையும் எச்சரிக்கையாயிருக்கும் படி அறிவுறுத்தப் பட்டதோடு அரசவை கலைந்தது.

... பாகம் 12 தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு முரசு

## பிரிமியர்லீக்



அட்டாளைச்சேனை மாக்ஸ்மன் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட பிரிமியர் லீக் கிரிக்கட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் 10.08.2014 அன்று அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் மாக்ஸ்மன் பிளக்சிப் மற்றும் மாக்ஸ்மன் கிங்ஸ் இலவன் ஆகிய அணிகள் மோதிக்கொண்டன.

இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மாக்ஸ்மன் பிளக்சிப் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 4 விக்கட்டுகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 95 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய





## டயலொக் விருது விழா

சர்வதேச கிரிக்கட் போட்டிகளிலும் உள்ளூர் கிரிக்கட் போட்டிகளிலும் அசாத்திய திறமைகளை வெளிப்படுத்திய வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் டயலொக் ஸ்ரீலங்கா கிரிக்கட் விருது விழா வோட்டர்ஸ் எஜ்ஜில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி மிகக் கோலாகலமாக நடத்தப்படவுள்ளது. இவ் விருது விழாவுக்கு இரண்டாவது வருடமாக டயலொக் ஆசியாட்டா நிறுவனம் பூரண அனுசரணை வழங்குகின்றது.

## டெஸ்ட் தொடரில் இலங்கை வெற்றி



இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இதில் காலியில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்ற நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி இன்று கொழும்பு எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை துடுப்பெடுத்தாட முடிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி இன்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 261 ஓட்டங்களை பெற்றது.

## "ஸ்ரீ லங்கா யூத் தேசிய விருது" போட்டி




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் 2014 ஸ்ரீ லங்கா யூத் தேசிய விருதுப் போட்டியின் மாவட்ட மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்ட மட்டத்திலான போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் மட்டக்களப்பு மாவட்ட பணிமனையிலும் பிரதேச செயலகங்களில் இளைஞர் சேவை அதிகாரிகளிடமும் இருந்து பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளனர். மேலும் தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகள் மற்றும் மாற்றுத் திறனுடைய இளைஞர், யுவதிகளுக்காக இப்போட்டி நடாத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

## கராத்தே சம்பியன் – விருது



கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் வரலாற்றில் இவ்வருடம் இடம்பெற்ற கராத்தே சுற்றுப்போட்டிகளில் ஆலையடி வேம்புப் பிரதேசத்திலிருந்து கலந்து கொண்டு அம்பாளை மாவட்டத்தின் 20 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் பங்குபற்றிய அணிகளுடனும் போட்டியிட்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட ஆலைய பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் அழகையா ரிஷாந்தன் தலைமையிலான கராத்தே வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்து அதனை பிரதேச செயலாளர் வி.ஜெகதீசனிடம் கையளிக்கும் ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தில் 13.08.2014 அன்று இடம்பெற்றது.




# நிகழ்வுகள்

## வில்லூன்றி கொடியேற்றம்

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற முருகன் ஆலயமான வில்லூன்றி கந்தசாமி கோவிலின் திருவிழா ஆரம்பமாகியுள்ளது.





## முதியோருக்கு கண் விலைகள்

சமூக சேவைகள் அமைச்சின் முதியோருக்கான செயலகத்தின் உதவியினால் வவுணதீவு பிரதேசத்தில் கண்பார்வை பாதிக்கப்பட்டோருக்கு கண் வில்லைகள் 13.08.2014 அன்று மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தில் லைத்து வழங்கிவைக்கப்பட்டது. மண்முனை மேற்கு பிரதேச செயலாளரால் எஸ்சுதாகர் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட முதியோர் ஐவருக்கு இக் கண்வில்லைகள் வழங்கி வைக்கப்பட்டது.



## சாரணர் விழிப்புணர்வு

இனங்களுக்கிடையே பரஸ்பரம் நல்லுறவை மேம்படுத்தும் நோக்கோடு தமிழ், சிங்கள மற்றும் முஸ்லீம் பெண்கள் சாரணியர்கள் இணைந்து நடாத்திய சமூக அபிவிருத்தி விழிப்புணர்வு வேலைத்திட்டம் கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.






கிழக்கு மாகாண பெண்கள் சாரணிய ஆழணர் டிலாந்தி மோகன்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கொழும்பு விதுறு வித்தியாலயம் மற்றும் புயவநறுயல சர்வதேச பாடசாலை, கல்லடி வேலூர் வித்தியாலய பெண் சாரணியர்கள் 100 பேர் இணைந்து இந்த சமூக வேலைத் திட்டத்தை ஆரம்பித்தனர்.



## கரம் போட்டி

திருகோணமலையில் SS Digitals இன் அனுசரணையுடன் கரம் போட்டி இடம்பெற்றுள்ளது.






## சர்வதேசச் செய்திகள்

- **காணாமல் போன குழந்தை – காட்டுக்குள்**

ரஷியாவில் வசித்து வரும் ஒரு தம்பதியின் 3 வயது மகள் கரினா சிகிட்டோவா. தந்தையுடன் என தாயும், தாயுடன் என தந்தையும் எண்ணியதால் குழந்தையை யாரும் தேடவில்லை. 7 நாட்கள் கடந்த பிறகு தான் குழந்தை மாயமானது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த அவளது பெற்றோர் மீட்புக்குழுவினருடன் பல்வேறு இடங்களிலும் கரினாவை தேடினர். 11வது நாளில் குழந்தையின் செல்ல நாய் காட்டுப்பகுதியில் இருந்து வந்தது. பின்னர் அது காட்டுப்பகுதிக்கு மீண்டும் சென்றது. உடனே அதை மீட்புக்குழுவினர் பின்தொடர்ந்தனர். அடர்ந்த காட்டுப்பகுதியில் சென்ற போது, அங்கே நீண்ட புற்களின் மேல் குழந்தை கரினா படுத்திருந்தாள். உடனே குழந்தையை மீட்புக்குழுவினர் மீட்டு வந்தனர்.

- **பீல்ட்ஸ் மெடல் பதக்கம் வென்ற முதல் பெண்**



அமெரிக்காவில் வேலை செய்யும் ஈரானிய கணிதவியல் நிபுணர் ஒருவர் உலகப் புகழ்பெற்ற பீல்ட்ஸ் மெடல் என்ற பதக்கத்தை வென்ற முதலாவது பெண்மணி என்ற பெருமையை பெற்றுள்ளார்.

- **பறந்து கொண்டிருந்த விமானம் திடீரென கீழ்நோக்கியது**

மும்பையில் இருந்து பெல்ஜியம் நாட்டின் தலைநகர் Brussels என்ற நகருக்கு சென்று கொண்டிருந்த விமானம் ஒன்று திடீரென 5000 அடி கீழ்நோக்கி பறக்க ஆரம்பித்ததை கவனிக்காமல் இருந்த இரண்டு பைலட்டுக்கள் மீது நடவடிக்கை எடுக்க விமானத்துறை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

- **முஸ்லீம் தீவிரவாதிகளால் மாட்டிக்கொண்ட மக்கள்**

வடக்கு ஈராக்கின் சின்ஜர் மலையில் சிக்கியுள்ள ஈராக்கிய பொது மக்களை மீட்பதற்கான விசேட நடவடிக்கை எவையும் மேற்கொள்ளப்படாது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

- **விலா எலும்புத் தியாகம்**

மெக்ஸிகோவின் பிரபல நடிகையான தலியா, மெலிந்த தோற்றத்துடன் காணப்படுவதற்காக தனது விலா எலும்புகளின் பகுதிகளை சத்திரசி கிச்சை மூலம் அகற்றிக்கொண்டுள்ளதுடன் அந்த எலும்புகளை நினைவுச்சின்னமாகவும் பாதுகாத்து வருகிறாராம்.

- **வீதி விபத்து – தப்பினரா!!**



துபாயில் பேருந்து ஒன்றின் பின்புறத்தில் பயங்கர வேகத்தில் சென்ற கார் ஒன்று மோதியதால் ஏற்பட்ட விபத்தில் காரின் முன்பகுதி பேருந்தின் அடிப்பகுதிக்குள் புகுந்தது. இந்த விபத்தில் காரில் பயணம் செய்த இரண்டு பேர் படுகாயம் அடைந்து உயிருக்கு போராடி வருகின்றனர்.

- **பணத்தை ஒழித்துவைக்க வேறு இடமே இல்லையா?**

இங்கிலாந்து விமான நிலையத்தில் உள்ளாடைக்குள் £16,000 பணத்தை கடத்தி சென்றதாக கைது செய்யப்பட்ட கல்லூரி மாணவி ஒருவர் ஒருமாத கால விசாரணைக்கு பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.


- **நிலவில் நிழலாடுகிறது**

நிலவில் மனித உருவமும், அதன் நிழலும் தெரிவது போன்ற காணொளி ஒன்று வெளியானது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த காணொளியை அமெரிக்காவில் உள்ள சர்வதேச விண்வெளி ஆய்வுக்கூடமான நாசா வெளியிட்டுள்ளது.

- **திடீர் மரணம் – கொலை!!**

பிரேசில் நாட்டின் ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த பிரபல அரசியல்வாதி நேற்று எதிர்பாராத விதமாக விமான விபத்து ஒன்றில் அகால மரணம் அடைந்தார். இதனால் பிரேசில் நாட்டு மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

- **வைத்திய துறை சாதனை**




பிரித்தானியாவில் பிறப்பிலேயே காதில்லாத சிறுவன் ஒருவனுக்கு, அறுவை சிகிச்சை மூலம் காது கேட்க வைத்து மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

- **சீனாவில் பாரிய பூகம்பம்**



சீனாவில் தொழிலாளர் செலவினங்கள் அதிகரித்துவருவதால் உற்பத்தியாளர்களை தானியங்கி ரோபோ செயல்பாட்டை அதிகரிக்கத் தூண்டியது. இந்த நிலையானது கடந்த வருடம் தொழில்துறையில் அதிக அளவிலான ரோபோக்களைப் பயன்படுத்தியதில் ஜப்பானைவிட சீனாவை முன்னிலையில் இருத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நான் அவன் இல்லை"

## பொதுபலசேனாவின் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர்

கராத்தே பயிற்சியினைப் பெற்றுக்கொண்டு இருக்கும் பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசார தேரரின் புகைப்படமென இணையத் தளங்களில் வெளியானதை அடுத்து அப்படம் தொடர்பாகத் தனக்குத் தெரியாது என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இடுப்பில் காவி தரித்து வெறும் மேலுடன் காணப்படும் புகைப்படமொன்றை கொழும்பு டெலிகிராப் இணையத்தளம் வெளியிட்டிருந்தது. அப்படத்தில் மற்றொரு காவியுடைத் தேரரின் முகத்தை நோக்கிப் பயிற்சிக் குத்தொன்றை விடும் தோரணை வெளிப்பட்டிருந்தது.

எனினும் இச்செய்தியில் தன்னை எவ்வாறேனும் தொடர்பு படுத்த விரும்பாத ஞானசார தேரர் இப்படம் தொடர்பாகத் தனக்குத்


13

# "சர்வதேசச் சமூகமே! கன்னியாவை வந்து பாருங்கள்"

## "திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் – இரா.சம்பந்தன்"

இச்சந்தர்ப்பத்தில் நான் சர்வதேசச் சமூகத்தை அழைக்கின்றேன். நீங்கள் நேரிடையாகவந்து கன்னியாவில் என்ன நடக்கின்றது என்பதைப் பாருங்கள். அங்குள்ள நிலைமையைப் பாருங்கள். எது நடைபெறக்கூடாது என்பதை நாங்கள் விரும்பினோமோ அதனையே நீங்கள் செய்வதால் எங்களை சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோளைச் செய்வதற்கு நீங்களே எம்மைத் தள்ளுகின்றீர்கள். நான் சனாதிபதிக்கு எழுதினேன். கௌரவ பசில் ராசபக்சவுக்கு எழுதினேன். பாராளுமன்றத்தில் இந்த விடயத்தை வெளிப்படுத்தினேன். நீங்கள் அவற்றிற்குப் பதிலளிக்கவில்லை. நீங்கள் எதனைத் திட்டமிட்டீர்களோ அதனைச் செய்து கொண்டு இருக்கின்றீர்கள் என கடந்த 10ம் திகதி பாராளுமன்றில் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்கள் குரலெழுப்பியுள்ளார்.

காணி சம்பந்தமான விசேட சட்டமூல விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தலைவர் சம்பந்தன் அவர்கள் நான்கு முக்கிய விடயங்களை தனது பேச்சில் பதிந்துள்ளார்.



படம் - அச்சுதன்

சட்ட விரோதமாகக் காணிகளை இராணுவம் கைப்பற்றி வைத்திருப்பது, குடிசார் பரம்பலை வடக்கிலும் கிழக்கிலும் சிதைப்பது, இலங்கை-இந்திய ஒப்பந்தச் சரத்துக்களை மீறுவது மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 30 மில்லியனை ஒதுக்கிவிட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் 5 மில்லியனை ஒதுக்கியது தொடர்பாகவும் அவர் மிகக் காட்டமாகத் தனது உரையில் குறித்துள்ளார்.

இந்து மத மக்களின் பாரம்பரியப் பிரதேசமான கன்னியாவின் வெந்நீறூற்றுப் பிரதேசத்தையும், திருமலை வவுனியா வீதியில் நடேசர் கோவிலை அண்டி நடைபெறும் சிங்கள மக்களின் குடியேற்றங்களை அவர் குடிசார் பரம்பலைக் கிழக்கில் சிதைக்கும் நடவடிக்கையாகக் குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.

வடக்கில் குடிப்பரம்பலைச் சிதைப்பதற்காக முல்லைத்தீவு

13

# திருமலைத் துறைமுகத்தில் எபோலா வைரஸ் தொற்றுக்கு எதிர் நடவடிக்கை




உலகை அச்சுறுத்திவரும் எபோலா வைரஸ் தொற்றை அடுத்து இலங்கைக்குள் அவ்வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்திற்கு வரும் கப்பலாளிகள் ஊடாக இவ்வைரஸ் திருகோணமலைக்குள் பலவாமலிருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேசச் சுகாதார திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் திருகோணமலைத் துறைமுகத்திற்கு வருகைதரும் கப்பல்கள் எபோலா வைரஸ் தொற்றக் கூடிய நாடுகளுக்குப் பயணப்பட்டிருப்பின் அக்கப்பல்களின் பணியாளர்களை பிரதேசத்திற்குள் நுழைவதற்கு அனுமதியளிக்காமல் இருக்கச் சுகாதாரத் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

13



# லாஹிர் - புதிய கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

சுகவீனம் காரணமாக காலமான கிழக்கு மாகாண சபையின் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.எல்.எம்.ஹஸன் மௌலவியின் வெற்றிடத்திற்கு சட்டத்தரணி ஜே.எம்.லாஹீர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும் 19ஆம் திகதி பதவியேற்கவுள்ளதாக தெ,ிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்ட இவர், அ்'ெ'ய்க் எஸ்.எல்.எம்.ஹஸனுக்கு அடுத்தப்படியாக கூடுதலான வாக்குகளை பெற்றிருந்தார்.

இவர், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.முகம்மட் மன்சூரின் இணைப்புச் செயலாளராக கடமையாற்றியதுடன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் என்பதும்

# மட்டு – போதனா வைத்தியசாலைக்கு ஆஸி. நாட்டவர் உதவி



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அவுஸ்திரேலிய வைத்தியர் குழு கடந்த 12ம் திகதி பயணம் மேற்கொண்டிருந்தது.

புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள அவசர சேவை விபத்துப் பிரிவு தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ஐ.எல்.இப்றாலெப்பை தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

அவசர விபத்துப் பிரிவின் கட்டட நிர்மாணத்திற்கு அவுஸ்திரேலிய நாட்டு சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி டேவிட் ஏ.யங், 260 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதுடன் மீதிப் பணத்தை சுகாதார அமைச்சு

13

# அடையாளம் காணப்படாதவர்கள் நிலாவெளியில் முஸ்லிம் வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம்

நிலாவெளி, கட்சுனைக்கல் முஸ்லிம் பிரதேசத்தில் கடந்த 14ம் திகதி அதிகாலையில் ஒன்பது வீடுகளின் ஜன்னல்கள் மற்றும் கதவுகள் மிக சூட்சுமமான முறையில் கழற்றப்பட்டு வீடுகளுக்குள் மர்ம நபர் புகுந்துள்ளார்கள் என்று அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் மக்களிடையே பெரும் பரபரப்பையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பாக நிலாவெளி காவல் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற

13

# இளைஞன் கடத்தப்பட்டார்...

## கொக்கட்டிச்சோலை மோதலின் எதிரொலியா???



மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெரிய கால போட்டமடு பகுதியில் இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் நேற்று புதன்கிழமை மாலை கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே இடத்தைச் சேர்ந்த சகாயநாதன் ஜம்போதரன் என்ற இளைஞரே கடத்தப்பட்டுள்ளார் என்று அவரது தாயார் [illegible] காவல் நிலையத்திலும்,....

13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org